26 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம்
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

RBC Insurance
அனைத்து காப்புறுதி மற்றும் சேமிப்புத்திட்ட சேவைகளுக்கும்...
Jey Ahamparam
416 301 1733
உங்கள் வாகன, வீட்டு (for your Home & Auto)

தூர்ந்த பணமாற்றுச் சேவையில் முன்னோடிகள்
மு.காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave., East, Suite # 3
(Eglinton & Markham)
Scarborough, ON M1J 2H6
Tel. - 416.267.8221
வாக்கு வேறு கிளைகள் எங்கும் இல்லை

நதி 26 பாலம் 03 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் FEBRUARY 01, 2016

# ஜஸ்ரின் ரூடோ ஒரு 21ஆம் நூற்றாண்டு தலைவர்

கனேடிய பிரதமர் ஜஸ்ரின் ரூடோ தனது ஐந்து அமைச்சர்கள், அரசியல்வாதிகள், கனேடிய நிறுவனங்களின் தலைவர்கள் என ஐம்பது பேருடன் சுவிற்சலாந்து நாட்டின் அல்ப்ஸ் (Alps) மலைச்சாரலில் இருக்கும் Davos நகரில் 2016 ஜனவரி 20இல் இருந்து 23ஆம் திகதி வரை நடைபெற்ற உலக பொருளாதார மன்றத்தின் (World Economic Forum) 46ஆவது மாநாட்டு நிகழ்வில் பங்குபற்றிவிட்டு ஜனவரி 24இல் நாடு திரும்பினார்.

இந்த மாநாட்டில் 40இற்கும் மேற்பட்ட நாடுகளின் தலைவர்கள், உலகில் மிகவும் முன்னணியில் நிற்கும் நிறுவனங்களின் தலைவர்கள், தொழில் அதிபர்கள் என 2,500இற்கும் மேற்பட்டோர் பங்குபற்றியிருந்தனர். தனியார் மற்றும் அரச நிறுவனங்களின் கூட்டுறவான இந்த உலக பொருளாதார மன்றம் (WEF) 1971ஆம் ஆண்டு ஜேர்மன் நாட்டு பேராசிரியரும் ஜெனிவா பல்கலைக்கழகத்தில் வணிகத் துறையில் பேராசிரியராகவும் இருந்த Klaus Schwabஆல் ஆரம்பிக்கப்பட்டது. இம் மன்றத்தின் நோக்கம் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களின் ஈடுபாட்டை வளர்த்து உலக பொருளாதார, அரசியல் மற்றும் கல்வியினை மேம்படுத்துவது ஆகும்.

இம்மாநாட்டை பற்றி ஊடகவியலாளர்களுக்கு கனேடிய பிரதமர் தெரிவிக்கையில் உலகின் பொருளாதாரத்தில் பல பில்லியன் டொலர்களை முதலிட்ட உலகின் மிகப்பெரிய பணக்காரர்களும் சக்தி வாய்ந்தவர்களும் (World's rich and powerful) பங்குபற்றிய இம்மாநாட்டில் கனேடியர்களைப் பற்றியும், அவர்களது வியத்தகு கண்டுபிடிப்புக்களைப்பற்றியும், கனடாவின் கனிவளம் பற்றியும், கனடாவின் பல்கலாசார தன்மை பற்றியும் எடுத்துக்கூறி அவர்களிடம் கனடாவில் முதலிடுமாறும் கனடாவின் மனித சக்தி வளங்களால் அவர்கள் பயனடைவார்கள் என்றும் கூறினேன் என்றார். கனேடிய பிரதமர் பல Jack Ma உடன் கலந்துரையாடியது பற்றி ஊடகவியலாளர்களுக்கு கூறிய ஜஸ்ரின் ரூடோ இவர்களுடன் எமது நாட்டு தொழிலதிபர்கள் தொடர்பு கொண்டால் தங்களது உற்பத்திகளை 300 மில்லியன் மக்களுடன் பகிரலாம் என்றார்.




அரசியல் தலைவர்கள் மற்றும் தொழிலதிபர்களுடனும் தனித்தனியாக கலந்துரையாடல்களை நிகழ்த்தினார்.

Jack Ma, இவர் சீன நாட்டின் மிகப்பெரிய தொழில் அதிபர் ஆவார். $170 பில்லியன் வருடாந்த விற்பனையை உடைய அலிபாபா நிறுவன உரிமையாளர். இதன் இணையத்தள செயற்பாடுகள் மிகவும் பிரசித்தி பெற்றது. இதன் ஒரு நாள் விற்பனை $14.32 பில்லியன் டொலர் என பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஜஸ்ரின் ரூடோ பெண்களுக்கு சமஅந்தஸ்து வழங்கப்படுதல் பற்றிய கலந்துரையாடலில் Melinda Gates (Bill & Melinda Gates நிறுவனத்தின் இணை அதிபர்), Sheryl Sandberg (Facebook நிறுவனத்தின் பிரதம நிர்வாகி), Jonas Prising (Manpower group இன் தலைவர்) மற்றும் Zhang Xin (SOHO China நிறுவனத்தின் தலைவர்) ஆகியோருடன் பங்குபற்றினார்.

தொடர்ச்சி 03ஆம் பக்கம்...

Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc

LEXUS OF RICHMOND HILL
I CAN HELP YOU WITH NEW OR PREOWNED LEXUS
INCENTIVES AS MUCH AS $6,000 ON SELECTED NEW LEXUS
COME IN FOR A TEST DRIVE AND RECEIVE A FREE GIFT.
குமார் ஜெகசோதி
Kumar Jegasothy
Pre-owned Sales Consultant

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

TD Canada Trust
Supen Subramaniyam
(Manager, Residential Mortgage)
ADVICE WHEREVER WHENEVER
416-844-8692
888-809-9154

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS RCPS (Glasg)
DENTAL SURGEON
அவசரகால பல் வைத்திய சேவைகள்
பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markham & Steeles
Tel: 416.609.2022

Buying Selling Residential & Commercial
Sothees Means Service
SOTHEES Kathirgamathamby
Sales Representative
HOMELIFE / Miracle Realty LTD., Brokerage
*Independently Owned Operated
* Free visa
* Free lawyer fee
* Home Warranty
416.704.1179
Toll Free: 1855 SOTHEES

# HOMES FOR SALE *COMMERCIAL*INVESTMENTS

Markham & 16 th ave


4 bm 4 wsrm home harwood floor
Excellent n.hood

MCCOWAN.. RAvenshoe


2 bm 2 wsrm step to school shoping U F T
Centanial college

Lawrence/Birchmount

2 bm 2 wrn new condo apt exeleent amenities

Mccowan/16th Ave

4bm 3 wsrm home harwood floor
2200 sq ft

Mccowan /...Markham


NEW CONDO 1 BM...2BM 2 Plus DEN Near shopping , Trudeau High School

Scarborough

3 bm 2 wsrm step to school shoping walk-out basement


**Pat Pushpakanthan**
Real Estate Broker
COMMERCIAL & RESIDENTIAL
**416-894-1187**
15 years of service
Century 21
PAT WILL BEAT ANY DEAL*!!
Hall of Famer 80 Corporate Dr. Suite 208 Toronto M1H3G5 416-290 1200

Rental corner
2+1 condo apt 1650/-
1+1 condo apt 1400/-
studio apt 999/-
3 bm bangalow 1590/-


**Cafetaria**
Low 1200/- rent 68k
all included
EXCELLENT BUSINESS IN OFFICE BUILDING

# மோட்கேச், கடன் வசதி!

MORTGAGES ! MORTGAGES !

MORTGAGE ALLIANCE
TJT Financial
Lic # 10996

நீண்ட கால அநுபவத்துடன் தொடர்ச்சியாக 15 வருடங்கள் முன்னணி விற்பனை முகவராகத் தெரிவுசெய்யப்பட்ட

PURCHASE YOUR HOME WITH 0% & 5% DOWN PAYMENT ALSO

**PAT புஷ்பகாந்தன்**
Mortgage Broker

Residential
Commercial
Construction
Mortgages!!

FSCO Lic. #M08009670 E. & O.E.
**PAT Pushpakanthan**
Mortgage Broke-r
**416-894-1187**

PURCHASE YOUR HOME WITH 0% & 5% DOWN PAYMENT ALSO**

- 1 ST & 2ND RESIDENTIAL & COMMERCIAL
- NEW IMMIGRANT PROGRAM
- RENEWALS & REFINANCE UPTO 90%
- CREDIT CARDS & CREDIT CONSOLIDATION
- SECURED LINE OF CREDIT MORTGAGE
- BAD CREDIT, BANKRUPTCY & NO CREDIT
- PERSONAL LOANS & VISA/ MASTER CARD

MORTGAGE ALLIANCE
TJT Financial
2.20%
GUARANTEED lowest rate!!
6- 894-1187
35 West Pearce street 31Richmond hill On L4B3A9 Of: 905-889-3300

# THINKING OF SELLING, BUYING OR INVESTING


Always committed to work in the client's best interest
Act with Market Conditions
Exposing Your Property to 1000's of Potential Buyers

**Call me to find out how much your home worth.**

*Free Market Evaluation without any Oblications*

✔ TRUST
✔ HONEST
✔ GUARANTEE

*We do sell Cottages & Recreational Properties*


**Muthiah Sivabalan**
Sales Representative
*Friendly and Confidential Service Just Call*
**Cell: 416.399.6640**
msbalan78@gmail.com
NOT INTENDED TO SOLICIT PROPERTIES PRESENTLY UNDER CONTRACT

HomeLife/GTA Realty Inc.
Brokerage*
5215 Finch Ave. East, Suite #203
Toronto, ON M1S 0C2
Off: 416.321.6969 Fax: 416.321.6963
*Independently Owned and Operated

*Higher Standards Agents... Higher Results!*

# Friends MATRIMONY


திருமணத்
உங்கள் தேடலுக்கோர் முற்றுப் புள்ளி...

சனி, ஞாயிறுகளில்
12.00pm-6.00pm
இலவசமாக திருமண பொருத்தம் பார்க்கப்படும்

✓ 5000 மேற்பட்ட பொருத்தமான வரன்கள் உங்கள் தெரிவுக்கு
✓ மிக இலகுவாக இணையத்தில் பதிவு செய்யும் வசதி
✓ அல்லது தொலைபேசி, தபால், email னூடாக பதிவு செய்யலாம்

**info@friendsmatrimony.com**
**www.friendsmatrimony.com**
Choose Your Life Partnar Here

அலுவலக நேரம்: திங்கள் முதல் வெள்ளி 10:30a.m- 7:00p.m

| Sri Lanka | Canada |
|---|---|
| Ph: 94-112-363663 | info: 647-709-1536 |
| No-11- 2/1, 33rd lane, | GTA Square |
| Wellawatta, | 5215 Finch Ave. E. Unit 257 |

# ஜஸ்ரின்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

இக்கலந்துரையாடலின் போது ஒரு சமுதாயத்தின் பலமும் வளர்ச்சியும் அந்நாட்டின் பெண்கள் உட்பட எல்லா மக்களின் பங்களிப்பிலேயே தங்கியுள்ளது என்றார். உலகத்தலைவர்கள் எல்லோரும் பாலின சமநிலையை ஏற்படுத்தப்பாடுபட வேண்டும் என்றார். தான் கனடாவில் பாலின சமநிலையை ஏற்படுத்த உறுதி பூண்டுள்ளதாகவும் கூறினார். தனது அரசாங்கத்தின் முக்கிய குறிக்கோளில் ஒன்றாக உள்நாட்டிலும் மற்றும் உலக-ளாவிய ரீதியிலும் பாலின சமநிலையை ஏற்படுத்த முயல்வது இருக்கும் என்றார். உலகின் முதலாவது பாலின சமநிலை அமைச்சரவையை உருவாக்கிய ஜஸ்ரின் மேலும் தெரிவிக்கையில் நாங்கள் பெண்ணியம் (Feminist) என்ற வார்த்தைக்கு பயப்பட தேவையில்லை என்றார். ஆண்களும் தங்களை பெண்ணிய வாதிகளாக கூற தயங்கக்கூடாது என்றார்.

ஜஸ்ரின் ரூடோ தான் தனது இரண்டு மகன்களையும் ஒரு மகளையும் பெண்ணிய வாதியாகவே வளர்ப்பேன் என இந்தக் கலந்துரையாடலில் தெரிவித்தார். ஜஸ்ரின் தான் பாலின சமநிலை அமைச்சரவையை உருவாக்க பட்டகஷ்டத்தை விபரித்தார். இலகுவாக ஊடகவியலாளர்களது கேள்விக்கு "இது 2015" (Because it's 2015) என காரணத்தை கூறினாலும் அவ்வேலை இலகுவாக இருக்கவில்லை எனக் கூறினார்.

ஒரு ஆணை அலுவலகம் ஒன்றை நிர்வகிக்க தெரிவு செய்தால் அவர் முதலில் கேட்பது "நான் அலுவலகத்திற்கு




கழுத்துப்பட்டி (tie) அணிய வேண்டுமா?" என்பதே. அதையே ஒரு பெண்ணிடம் கேட்டால் ஏன் என்னை தெரிவு செய்தீர்கள்? (Why me?) என்பார்.

நான் ஒவ்வொரு பெண்களையும் அமைச்சுப் பொறுப்பு ஏற்குமாறு வற்புறுத்த (arm twisting) வேண்டியிருந்தது என்றார். பலர் நான் தகுதி அடிப்படையில் (merit) அமைச்சர்களை தெரிவுசெய்ய வேண்டும் தரப்படுத்தல் (Quotas) முறையில் பெண்களை தெரிவு செய்யக்கூடாது என்றார்கள். ஆனால் நான் அமைச்சராக நியமித்த பெண்களிகளின் தகுதியை அவர்கள் அறிவித்தவுடன் அந்த கூச்சல் நின்றுவிட்டது என்றார்.

கனேடிய பிரதமரிற்கு இந்த உலக பொருளாதார மாநாட்டில் கலந்து கொண்ட ஊடகவிலாளர்கள் தமது ஊடகங்களில் முக்கியத்துவம் கொடுத்திருந்தார்கள்.

கனேடிய பிரதமர் ஜஸ்ரின் ரூடோ ஒரு 21ஆம் நூற்றாண்டுத்தலைவர் என்ற தகைமை பெற்றுள்ளார் என Guardain ஊடகம் தெரிவித்தது.

வருடாந்தம் Davos இல் நடைபெறும் இந்த WEF குளிர்கால மாநாட்டில் பங்குபற்று பவர்களில் பிரபல்யமானவர், பெரும்பாலும் மிகப்பெரிய பணக்காரர், அல்லது மிகவும் உயரிய செல்வாக்கு பெற்றவரை "Davos Man" என ஊடகங்கள் குறிப்பிடுவது வழக்கம்.

New York Times குறிப்பிடுகையில் இம்முறை WEF மாநாட்டின் "Davos Man" சற்று வித்தியாசமானவர். அவர் ஒரு முன்னாள் பனிச்சறுக்கு விளையாட்டு வீரர் (Snowboarder), பாடசாலை ஆசிரியர் இப்போது எங்களுக்கு (United States) வடக்கில் இருக்கும் ஒரு நாட்டை ஆள்பவர் என குறிப்பிட்டிருந்தது. அது தனது தலையங்கத்தில் கனேடிய பிரதமர் இம் மாநாட்டிற்கு நம்பிக்கை தரும் செய்தியை (Message at optimism) கொண்டு வந்துள்ளார் என தெரிவித்திருந்தது.

அமெரிக்க நடிகரும், திரைப்பட இயக்குனரும், தயாரிப்பாளருமான Kavin Spacey, பிரபல பாடகரும், பாடலாசிரிய ருமான Bono (Paul Hewson) மற்றும் பிரபல நடிகர் Leonardo Dicaprio போன்றவர்களுடன் ஜஸ்ரின் இரவு விருந்துக்கு சென்றது பற்றிய ஊடகவியலாளரின் கேள்விக்கு பதிலளித்த ஜஸ்ரின், நீங்கள் அந்த விருந்தை ஊடகங்களில் காட்டியது இவர்கள் மூவரும் வந்ததற்காக, ஆனால் நான் அந்த விருந்துக்குச் சென்றது இந்த விருந்தை நடத்திய Jack Ma என்னை அழைத்ததால்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்...

AMTEX TRANSPORT
6852165 Canada Ltd.

AMTEX TRANSPORTATION

NOW HIRING AZ DRIVERS!

Amtex Transportation is currently seeking Full Time / Part Time dedicated and experienced AZ drivers for either city work and/or long hauls (USA). We thank you in advance for considering AMTEX TRANSPORT INC for your temporary and or permanent staffing solution.

USA OR LOCAL DRIVERS NEEDED!

Guaranteed $1500 week! $0.46 per mile (USA)
Year-end Bonus! $18 per hour (City)

***TOP SALARY***
3 years driving experience.
Paid Accommodations.

CONTACT JULIAN: (647)-669-6509
AMTEX_DISPATCH@HOTMAIL.COM

# கருணாநிதியின் ராஜத்திரம் சிக்குவாரா விஜயகாந்த்

## தமிழ்நாடு அரசியல்

முடியட்டும் விடியட்டும், நமக்கு நாமே என கடந்த ஒரு வருடமாக, திமுகவின் அறிவிக்கப்படாத தலைவராக, 2016 சட்டமன்றத் தேர்தலின் முதல்வர் வேட்பாள ராகவே வலம் வந்தார் ஸ்டாலின். இந்நிலையில், கடந்த இரண்டு மாதங்களாக திமுகவில் பல அதிரடி மாற்றங்கள். ஸ்டாலின் முன்னிலைப்படுத்தப்படுவது குறைக்கப்பட்டு, கட்சிக்குள்ளும் கட்சிக்கு வெளியேயும் மீண்டும் கலைஞர் கருணாநிதி முன்னிலைப்படுத்தப்படுகிறார். சென்னை வெள்ளத்துக்கு நீதி விசாரணை கேட்டு, சென்னை சேப்பாக்கத்தில் நடைபெற்ற போராட்டத்தில் கருணாநிதியே தலைமை தாங்கினார். அப்போராட்டம் குறித்த அறிவிப்பு போஸ்டர்களிலும் பேனர்களிலும் ஸ்டாலின் படம் இடம்பெறவில்லை. திமுக தொண்டர்களுக்கு உற்சாகத்தையும் உத்வேகத்தையும் அளிக்கும் வகையில் அரசு தொடுத்த அவதூறு வழக்கில் நேரில் ஆஜரானார். கருணாநிதியின் இந்த திடீர் மாற்றங்களுக்கு என்ன காரணம்?

தமிழக அரசு திமுக தலைவர் கருணாநிதி மீது பல அவதூறு வழக்குகளைத் தொடுத்துள்ளது. சென்னை உயர்நீதி மன்றத்தில் மட்டுமே 13 அவதூறு



வழக்குகள் நிலுவையில் உள்ளன. இந்த வழக்குகள் எல்லாம் கடந்த மூன்றாண்டு காலத்தில் ஒன்றன் பின் ஒன்றாக போடப்பட்டவை. ஆனால், இதுவரையில் ஒரு வழக்கு விசாரணையில் கூட கருணாநிதி நேரில் ஆஜரானது கிடையாது. இந்நிலையில், முரசொலியில் 'கலைஞர் பதில்' பகுதியில், மறுபிரசுரம் செய்யப்பட்ட ஆனந்த விகடன் கட்டுரை தொடர்பாக கருணாநிதி மீது போடப்பட்ட கடைசி அவதூறு வழக்கு விசாரணையில், சென்ற மாதம் சென்னை முதன்மை அமர்வு நீதி மன்றத்தில் திடீரென நேரில் ஆஜரானார், கருணாநிதி. இதன்மூலம் ஒட்டுமொத்த ஊடகங்களின் கவனத்தையும் தன்மீது திருப்பினார்.


கருணாநிதியின் இந்த திடீர் சென்னை உயர்நீதிமன்ற வருகைக்கு காரணம், தொண்டர்களை உற்சாகப்படுத்துவதற்கும் தேர்தலுக்கு தயார்படுத்துவதற்கும் மட்டும் இல்லை. திமுகவின் அடுத்த தலைவராக உருவாகிவரும் ஸ்டாலினுக்கும் அவருக்கும் இடையேயான அதிகாரப் போட்டியின் ஒரு விளைவுதான் என்று சில அரசியல் நோக்கர்கள் கணிக்கிறார்கள்.

## மு.க. ஸ்டாலின் Vs மு. கருணாநிதி

அப்பா, மகன் இடையேயான அதிகாரப் போட்டி என்பது ஆதிகாலம் தொட்டு இன்று வரைக்கும் காலம்காலமாக மாறாமல் இருந்துவரும் உண்மை. பல நாடுகளைத் தன் ஆட்சியின் கீழ் வைத்திருந்த அன்றைய அரச குடும்பங்கள் தொடங்கி, சில செண்ட் நிலங்களை வைத்திருக்கும் இன்றைய குறுவிவசாயி குடும்பங்கள் வரைக்கும் அதிகாரத்துக்கான அப்பா, மகன் சண்டைகள் நிகழ்ந்தபடிதான் இருக்கின்றன. அப்பாவுக்குப் பிறகு மகன்தான் என்றாலும் அதிகாரத்தை கைமாற்றிவிடும் நிகழ்வு அவ்வளவு சுலபமாக முடிந்ததில்லை. இதற்கு திமுக தலைமை மட்டும் விதி விலக்காகிவிட முடியுமா?

மிசா போராட்டம் தொடங்கி கொஞ்சம், கொஞ்சமாக முன்னேறிதான், திமுகவுக்குள் இன்று தான் வந்து சேர்ந்திருக்கும் இடத்தை மு.க. ஸ்டாலின் பெற்றிருக்கிறார். என்றாலும், இது அவரது தனிப்பட்ட திறமை யாலும் பலத்தாலும் மட்டும் கிடைத்த தில்லை இது. மகன் மீதான பாசத்தில் அதற்கேற்ப களத்தை சீர்படுத்தி, வாய்ப்பு களை உருவாக்கிக் கொடுத்தவர் திமுக தலைவர் கருணாநிதிதான். பிற்காலத்தில் ஸ்டாலினை திமுக தலைவராக போட்டியாக இருப்பார் என்று கருதித்தான், வைகோ மீது கொலைப்பழி சுமத்தப்பட்டு, வெளியேற்றப் பட்டார் என்பது ஊரறிந்த ரகசியம். ஆனால், இப்போது ஸ்டாலின் திமுக தலைவராக

தொடர்ச்சி 16ஆம் பக்கம்...

அம்மா நகை அடைவு மாடம்

**Amma Pawn Broker**



வர்த்தகத் துறையில் 20வது ஆண்டுகளை நிறைவு செய்யும் முகமாக உங்கள் அபிமான "அம்மா நகை மாடத்தின்" சிறப்பு வட்டி வீதம்

* உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் குறைந்த வட்டியுடன் 5 நிமிடங்களில் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும் அளிக்கும் நட்பான சேவையுடன் கைராசியான நிறுவனம்.

2425 Eglinton Ave. E
Scarborough, ON
(சங்கர் அன் கோவுக்கு அருகில்)
416-757-0034
416-994-3861
Downtown 416-921-0034
ammapawnbroker@gmail.com

1.5% முதல் 2% வட்டி மட்டுமே (Month)

* நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதம்
* அம்மாவுக்கு நிகரான சேவை அம்மா நகை அடைவு மாடமே
* உங்கள் பழைய நகைகளை அதி உயர் பெறுமதிக்கு எம்மிடம் விற்றும் கொள்ளலாம்
* கனடிய அரசின் அங்கீகாரம் பெற்று முழுக் காப்புறுதி செய்யப்பட்ட முதன்மையான அடைவு சேவை

MORTGAGE ALLIANCE
Lic # 10530
RIGHTBROKER = RIGHTMORTGAGE

Corporate Office : 2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4
Toll Free : 1-877-366-3487

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE
#1 Brokerage in Toronto

Brockerage Office : 112-895, Don Mills Rd, Toronto, ON, M3C 1WC
Office Phone : 416-391-3232

# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

பவர் ஒப் சேல் பிரச்சினையா ?



நல்ல ரேட்ல மோட்கேஜ்,
லைன் ஒப் கிரெடிட்,
ரீபைனான்ஸ்,
2வது, 3வது மோட்கேஜ்,
பாங்க்ரப்சி நிலையில் மோட்கேஜ்,
வீடு வாங்க, விற்க வாடகைக்கு விட அல்லது
பெற்றுக்கொள்ள

மற்றும் உங்கள் தேவை, எதுவாக இருந்தாலும்,

**"மோட்கேஜ் கிளினிக்"**

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.



Mortgage in Any Situation

416-613-2788 / 416-816-9011

திங்கள்—வெள்ளி (call for an appointment)

**வோக் இன் : திங்கள் - சனி 9.00 - 5.00**

எமது முகவரி

**1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9**



**Jayson Fowler** BA (Law)
Mortgage Agent / Former Underwriter
FSCO Lic # M 15002593
416-613-2788 / 416-816-9011



**சுதேசன் பத்மநாதன்** M.Com, B.Com
Mortgage Agent / Real Estate Sales Representative
FSCO Lic # M 12001741
**Cell : 647-861-8240**



**ஜெ (Jey) இராசதுரை** MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Sales Representative
FSCO Lic # M 09001428
**Cell : 416-624-4843**

# சிக்கலை ஏற்படுத்தியுள்ள

## ஜனாதிபதியின் கருத்துக்கள்!



இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் தெரிவித்திருக்கும் சில கருத்துக்கள் தமிழ் மக்களை மட்டுமல்லாது சர்வதேசத் தரப்பினரையும் அதிர்ச்சிக்கும், அதிருப்திக்கும் உள்ளாக்கியுள்ளது.

மைத்திரிபால சிறிசேன புதிய ஜனாதிபதியாக பொறுப்பேற்று ஒரு வருடம் கடந்துள்ள நிலையில், மிக நிதானமாகவே தனது கருத்துக்களை வெளியிட்டு வந்துள்ளார். அவரது கருத்துக்கள் மற்றும், செயற்பாடுகள் ஓரளவிற்கேனும் நம்பிக்கையளிப்பதாகவே இருந்து வந்துள்ளன. சில நடவடிக்கைகளில் துரிதமின்மை இருந்தாலும் ஓரளவிற்காவது அவர், நம்பிக்கையை கட்டியெழுப்பும் விதமாகவே நகர்வுகளை மேற்கொண்டு வந்துள்ளார்.

போர்க் குற்றங்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள சர்வதேச பொறிமுறையே அவசியமானது என பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் கோரி வந்த நிலையில், ஒரு கலப்பு பொறிமுறையை மேற்கொள்ளும் திட்டத்திற்கு மைத்திரி அரசாங்கம் இணங்கியது.

கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம், அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளின் முன்னெடுப்பில் இலங்கையின் இணை அனுசரணையில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானம் கொண்டு வரப்பட்டது. போர்க்குற்றங்களை விசாரிப்பதற்கு சிறப்பு நீதி விசாரணைப் பொறிமுறை ஒன்றை நிறுவுமாறும், அதற்கு கொமன்வெல்த் உள்ளிட்ட வெளிநாடுகளின் நீதிபதிகள், வழக்குத் தொடுநர்கள் மற்றும் விசாரணையாளர்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அந்தத் தீர்மானத்தில் கோரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆனால், இந்த விடயங்களை, அல்லது வாக்குறுதிகளை புறந்தள்ளுவது போன்று ஜனாதிபதி மைத்திரியின் அண்மைய கருத்து அமைந்துள்ளது. பிபிசி ஊடகத்திற்கு அவர் அளித்த பேட்டியில் சொல்லப்பட்ட சிக்கலான கருத்துக்கள் இவை தான்-

"இலங்கையில் நடந்ததாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பான நீதி விசாரணை குறித்து வெளிநாட்டு நீதிபதிகளை அனுமதிக்கப் போவதில்லை. இலங்கையின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வெளிநாடுகளிலிருந்து நிபுணர்களை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

உள்நாட்டு பொறிமுறை மூலமாகத்தான் இந்த நடவடிக்கையை செய்ய வேண்டும் என்று மிகவும் தெளிவாக நான் கூறியிருக்கிறேன். எமது அரசியலமைப்புக்கு உட்பட்டதாகவும் அது அமைய வேண்டும். அதே போல, வெளிநாடுகளிலிருந்து நீதிபதிகளைக் கொண்டு வரவும் எதிர்பார்க்கவில்லை. அதற்கு நான் இணங்கவும் மாட்டேன்.

இலங்கையின் நீதித்துறையின் மீது எனக்கு நம்பிக்கை உள்ளது. உள்ளூர் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு வேறு நாடுகளிலிருந்து யாரையும் 'இறக்குமதி' செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

வெளிநாடுகளில் அரசியலமைப்பு, மனித உரிமைகள், சட்டங்கள் என்று பல்வேறு துறைகளில் நிபுணர்களாக உள்ள இலங்கையர்களை இலங்கையின் உள்ளக விசாரணைக்காக வரவழைக்க முடியும். சர்வதேச தலையீட்டுக்கு ஒருபோதும் நான் இணங்கப்போவதில்லை" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், விசாரணையின் கால அளவு தெரியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஐ.நாவின் முன்னெடுப்பில் உலகின் வேறு நாடுகளில் நடத்தப்பட்ட விசாரணைகளுக்கு நீண்ட காலம் தேவைப்பட்டது போல, இலங்கையின் உள்ளக விசாரணை குறித்த கால அளவுகளை தங்களால் மதிப்பிட்டு சொல்ல முடியாது என்றும் அவர் கூறியுள்ளார். இது, காலத்தை இழுத்தடிக்கும் ஒரு பொறிமுறையாக இருக்குமோ என்ற சந்தேகத்தையும் இப்போது ஏற்படுத்தியுள்ளது.

ஜனாதிபதியின் இக்கருத்துக்கள், கடந்த ஒரு வருட காலமாக அவரால் கட்டியெழுப்பப்பட்டு வரும் நம்பிக்கைகளை சிதறடிப்பதாக அமைந்துள்ளதாகவே பலரும் கருதுகின்றனர். தமிழ் தேசியக் கூட்டமைப்பும் இக் கருத்துக்கள் தொடர்பில் அதன் விசனத்தை தெரிவித்துள்ளது.

போர்க்காலங்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், குற்றச் செயல்களுக்கு பொறுப்புக் கூறும் நடைமுறைகளில் சர்வதேச நீதிபதிகளும், வழக்கு தொடுநர்களும் அவசியம் எனவும், அவர்களின் குறிப்பிட்டத்தக்க பங்காற்றுகையை உறுதி செய்வதன் மூலமே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கான தனது கடப்பாட்டை இலங்கை அரசாங்கம் நிறைவேற்ற முடியும் என சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

நீதி மற்றும் பொறுப்புக் கூறலை உறுதி செய்வதற்காக இலங்கை அரசாங்கம் சர்வதேச பங்களிப்பை கோரியது. எனவே, அதிலிருந்து தற்போது பின்வாங்கக் கூடாது என, சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஆசியாவிற்கான இயக்குநர் பிரட் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

**- விகிர்தன் -**

சர்வதேச பங்களிப்பு குறித்து ஐக்கிய நாடுகளிற்கு அளிக்கப்பட்ட வாக்குறுதி நிச்சயமற்ற ஒன்றல்ல. மாறாக, பாதிக்கப்பட்ட ஆயிரக் கணக்கானவர்களுக்கு அளிக்கப்பட்ட உறுதியான வாக்குறுதி என்பதை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன புரிந்துகொள்ள வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கான அமெரிக்கத் தூதுவர் கீத் ஹார்ப்பரும் இது குறித்த கருத்து தெரிவித்துள்ளார்.

போர்க் குற்ற விசாரணைகள் தொடர்பில் இலங்கை அரசு ஏற்படுத்தும் விசாரணைப் பொறிமுறைகள் நம்பகத்தன்மை வாய்ந்ததாக விளங்குவதற்கு வெளிநாட்டு நீதிபதிகளின் பிரசன்னம் அவசியம் என அவர் ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார். இந்த விடயத்தில் மாற்றம் ஏற்படாது எனவும் அவர் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான வேலைத்திட்டம் (ஐ.டி.ஜே.பி) என்ற, தென்னாபிரிக்காவை தளமாகக் கொண்டு இயங்கும் அமைப்பு ஜனாதிபதியின் கருத்திற்கு பதிலாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்த விசாரணைகளில் சர்வதேசத்தின் பங்களிப்பையும் உள்ளடக்குவதாக ஜனாதிபதி சிறிசேன ஜெனீவாவில் ஏற்கனவே உறுதி அளித்திருந்ததாகவும், அந்த வாக்குறுதியிலிருந்து பின்வாங்கும் விதத்தில் அவர் பிபிசியிடம் வெளியிட்ட கருத்து அமைந்துள்ளதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கையில் உள்ளூர் விசாரணைப் பொறிமுறைகள் நீண்ட காலமாக தோல்வியடைந்த வரலாறு உள்ள நிலையில், சாட்சிகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் நீதி நடைமுறையில் நம்பிக்கை வைப்பதற்கு சர்வதேசத்தின் பங்களிப்பு அவசியம் என்று அந்த அமைப்பின் நிறைவேற்று இயக்குநர் யஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

போர்க் குற்றங்களில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டு சுமத்தப்படும் இராணுவ வீரர்களின் பெயர் விபரங்களை ஐ.நா வெளியிடவில்லை என்று மைத்திரிபால சிறிசேன குறித்த ஊடக செவ்வியில் கூறியிருப்பதையும் சூக்காவின் அறிக்கை விமர்சித்துள்ளது.

கடத்தல்களும் சித்திரவதைகளும் பாலியல் ரீதியான துஷ்பிரயோகங்களும் புதிய ஆட்சியின் கீழும் தொடர்வதாக வெளியாகியிருந்த குற்றச்சாட்டுக்களையும் ஜனாதிபதி சிறிசேன பிபிசியிடம் மறுத்திருந்ததுடன், அவ்வாறான குற்றச்சாட்டுக்கள் விடுதலைப் புலிகளுக்கு நெருக்கமானவர்களிடமிருந்து வருவதாகவும் கூறியிருந்தார்.

ஆனால், 2015ம் ஆண்டில் நடந்த அவ்வாறான 20 சம்பவங்களை தாங்கள் ஆவணப்படுத்தியுள்ளதாகவும் 'ப்ரீடம் ப்ரம் டார்ச்சர்' என்ற அமைப்பும் அவ்வாறான வேறு சில சம்பவங்களை பதிவு செய்துள்ளதாகவும் ஐ.டி.ஜே.பி தனது அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளது.

இவ்வாறான சம்பவங்களை மறுத்துள்ள இலங்கை ஜனாதிபதியின் போக்கில் மாற்றம் வரும் என்று நம்புவதாகவும் யஸ்மின் சூக்கா கூறியுள்ளார்.

பிபிசி செவ்வியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ள கருத்துக்களுக்கு இவ்வாறு, பல தரப்புகளிலிருந்தும் எதிர் கருத்துக்கள் வெளிவந்து கொண்டிருக்கின்ற போதும், அவற்றிற்கு பதில் கூறும் விதமான கருத்துக்கள் எவற்றையும் ஜனாதிபதி இதுவரை வெளிப்படுத்தவில்லை.

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
• Detailing
• Motor Shampoo
• Interior Shampoo
• Exterior Wash
• Waxing
• Repairs
• Safety Certification
• Overall Maintenance
• Under Coating
• Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6
SPECIAL


# Best Universities

are expecting

# 90%

& above in

# Calculus

**Money back guarantee**
**for a Successful Result**

Starts Jan. 22nd

Dear Students;

Score at least 90% in Calculus in order to receive your

***UNIVERSITY ACCEPTANCE WITHOUT ANY CONDITIONS.***

Morethan 27yrs. of teaching math exprience will guide you.



Plus

**NEW CLASSES**

**FOR**

**Gr9, Gr10 and Gr11**

**2nd** Semester (Starts Jan,25)

**Info: 416-666-5515**

**MATH WORLD**
**MOST ADVANCED TALENTED HELP**



தாயக மடல்

- ஆதித்தன் -

## தீர்விற்கான சிந்தனைகள்..

# ஒன்றிணையும் தருணம் இது!

அண்மைக் காலமாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமைக்கும் வடமாகாண தலைமைக்கும் இடையே இடம்பெற்று வந்த முறுகல் நிலை தற்போது ஒரு தளர்வு நிலைக்கு வந்துள்ளதாக தெரிகின்றது. அதாவது முரண்பாடுகளின் தீவிரத் தன்மை சற்று குறைந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

வடக்கு முதலமைச்சர் தலைமையில் தமிழ் மக்கள் பேரவை உருவாக்கப்பட்டதும், தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு எதிரான கருத்துக்களைக் கொண்டவர்கள் அதில் அங்கம் வகிக்கின்றமையும் ஏற்கனவே இருந்த முரண்பாடுகளை மேலும் அதிகரிக்கச் செய்தன. முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்று வட மாகாணசபையில் கொண்டு வரப்பட வுள்ளதாகவும் செய்திகள் வெளியாகின.
சுரேஸ் பிரேமச்சந்திரன் இவ்வாறான செய்தியை ஊடகங்களிடம் தெரிவிக்க, அதனை வடமாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே சிவஞானம் மறுத்திருந்தார். ஆனாலும், வடமாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர்கள் முதலமைச்சர் விக்னேஸ்வரனை சந்தித்து, அவர் வடக்கின் முதலமைச்சராக மட்டுமே செயலாற்ற வேண்டும் எனவும், வேறு அமைப்புக்களில் அங்கம் வகிக்க கூடாது எனவும் கோரியதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 21ம் திகதி அன்று கிளிநொச்சியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உயர்மட்டக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நடை-பெற்ற இக்கூட்டத்தில் வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரனும் கலந்து கொண்டார். உரையாடல்கள் சுமுகமாகவே நடை பெற்றுள்ளன.
இக்கூட்டத்தின் பின்னர் கருத்து தெரிவித்த சம்பந்தன் தமிழ் மக்கள் பேரவையால் தயாரிக்கப்படும் தீர்வுத் திட்ட வரைபு தமிழ் தேசியக் கூட்டமைப்பிடம் தரப்படுமாயின், அதை பரிசீலிக்கத் தயாராக இருப்பதாக தெரிவித்தார்.

இதனையடுத்து, சம்பந்தனின் இக்கருத்தை வரவேற்பதாக தெரிவித்துள்ள தமிழ் மக்கள் பேரவை இது தொடர்பில் அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது. தமிழ் மக்கள் பேரவையால் தயாரிக்கப்படும் தீர்வுத் திட்ட வரைபு தமிழ் தேசியக் கூட்டமைப்பிடம் தரப்படுமாயின் தாம் அதை பரிசீலிக்கத் தயாராக இருப்பதாக குறிப்பிட்டுள்ள கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அவர்களது கருத்தை வரவேற்பதாகவும், தமிழ் மக்கள் பேரவையின் உப குழுவினால் தயாரிக்கப்படும் தீர்வுத் திட்ட வரைபானது



கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடமும் கையளிக்கப்படும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு வழங்கப்பட்ட மக்கள் ஆணைக்குட்பட்ட விதத்தில், பேரவையால் தயாரிக்கப்பட்டு வரும் தீர்வுத் திட்ட வரைபு தமிழ் மக்களிடம் கொண்டு செல்லப்பட்டு, அவர்களின் கருத்துக்கள் உள்வாங்கப்பட்டு, இறுதி வடிவம் பெறும் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

இதேவேளை, தற்போது புதியஅரசியலமைப்பு தொடர்பில் மக்களின் கருத்தறியும் செயற்பாடுகள் அரசாங்கத்தால் அமைக்கப் பட்டுள்ள குழுவொன்றின் மூலமாகநடைபெற்று வரும் நிலையில், வடக்கு மக்களின் கருத்துக்கள் மற்றும் யோசனைகளை பெற்றுக் கொள்ள, வடமாகாண சபையால் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் விக்னேஸ்வரன் தலைமையில் ஆளும் மற்றும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அடங்களாக 19 பேர் இக்குழுவில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதுவும் ஒரு நல்ல தொரு விடயமாகவே கருதப்படுகின்றது. அதாவது வட மாகாணசபைக்குள்ளிருக்கும் முரண்பாடுகளை களையும் விதமான ஒரு செயற்பாடாக இதனைக் கொள்ளலாம்.

தமிழ் மக்கள் பேரவையினால் நியமிக்கப் பட்டுள்ள நிபுணர்குழு தமிழ் மக்களின் தீர்வு குறித்து ஆராய்ந்து வரும் நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஸ்கொட்லாந்தின் சமஷ்டி அரசமைப்பு தொடர்பில் ஆராய்வதற்காக லண்டன் பயணமாகியுள்ளார்.

தமிழ், முஸ்லிம் மக்களின் தாயகமான வடக்கு, கிழக்கு மீண்டும் இணைக்கப்பட வேண்டும் எனவும், மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் எனவும், நீண்ட காலமாகப் புரையோடிப் போயிருக்கும் இனப்பிரச்சி னைக்கு ஐக்கிய இலங்கைக்குள் பகிரப்பட்ட இறையாண்மையின் அடிப்படையில் அதியுச்ச சமஷ்டி அடிப்படையிலான தீர்வு வழங்கப்பட வேண்டும், ஒற்றையாட்சி எனும் கோட்பாட்டை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கிளிநொச்சி கூட்டத்தின் பின்னர் உறுதிபடத் தெரிவித்திருக்கின்றார்.

கிளிநொச்சி கூட்டத்தை தொடர்ந்து, வவுனியா வில் இடம்பெற்ற இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக்கூட்டத்திலும் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் தீர்மானங்கள் எட்டப்பட்டுள்ளன.

இனப்பிரச்சினைக்கான தீர்வு புதிய அரசமைப்புச் சட்டத்திலே கொண்டு வரப்படுகின்ற போது, தமிழ் தேசியக் கூட்டமைப்பு, அதன் தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கின்ற அடிப்படையான விடயங் களை புதிய அரசமைப்புச் சட்டத்திற்குள்ளே கொண்டு வருவதற்கான முயற்சிகளிலே தொடர்ந்து ஈடுபடுவது என்ற தீர்மானமும் வவுனியா கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

புதிய அரசமைப்பு உட்பட அனைத்து விடயங்களிலும் தமிழ் மக்கள் வழங்கிய ஆணைக்கேற்ப செயற்பட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத் தோடு, மக்களுடைய உடனடிப் பிரச்சினை கள், அபிவிருத்தித் திட்டங்கள் போன்ற விடயங்களிலே செலுத்தப்பட வேண்டிய பங்களிப்பு தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது.

இந்த வருடத்திலே முக்கிய விடயமாக அரசமைப்பு விடயம் இருந்தாலும் தமிழ் மக்களை அழுத்திக் கொண்டிருக்கின்ற பல விடயங்கள் சம்பந்தமாகவும் தமிழ் தேசியக் கூட்டமைப்பாக ஒருமித்து இயங்குவோம், அதற்கான பரிகாரங்களையும் தேடுவோம் என்ற தீர்மானத்தையும் எடுத்திருப்பதாக தமிழரசுக் கட்சியினர் தெரிவித்துள்ளனர்.
அதியுச்ச சமஷ்டி அமைப்பிலான ஸ்கொட் லாந்தின் முறைமையை ஆராய்ந்து பார்க்கும் நோக்கில் இரா.சம்பந்தன் பயணமாகி யுள்ளமையானது கூட்டமைப்பிற்குள் ஏற்பட்ட முரண்பாடுகளால் சோர்ந்து போயிருந்த தமிழ் மக்களுக்கு சற்று நம்பிக்கையூட்டும் தன்மையை ஏற்படுத்தியுள்ளது. தமிழ்தேசியக் கூட்டமைப்பால் புதிய அரசமைப்பிற்கு முன்வைப்பதற்கான யோசனைகளைத் தயாரிக்கும் பணிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. முக்கியமானதொரு கட்டத்தில் தலைமைகள் தங்களுக்கிடையேயுள்ள முரண்பாடுகளை மறந்து துரித செயற்பாடு களில் ஈடுபட்டு வருவதை மக்கள் விரும்புகின்றனர்.
இவை மட்டுமன்றி, வட மாகாணசபை இப்புதிய ஆண்டில் வினைத்திறனுடன் இயங்கும் என்ற உறுதிப்பாட்டை வடக்கு முதலமைச்சர் வழங்கியிருக்கின்றார். இதுவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.
வடமாகாணசபையின் செயற்பாடுகள் போதாது எனவும், நிதிகள் சரியாக பயன் படுத்தப்படாமல் திரும்பிச் செல்வது குறித்தும் பரவலான விமர்சனங்கள் முன் வைக்கப்படுகின்ற நிலையில், இவ்வாண்டில் புதிய உத்வேகம் தோன்றியிருப்பது பாராட்டத்தக்கதே.

தனது செயற்பாடுகள் குறித்து வடக்கு மாகாணசபையின் ஆளும் கட்சியினருக்கு தெளிவுபடுத்தும் சந்திப்பு ஒன்றை முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவரது அலு வலகத்தில் நடத்தியிருந்தார். இந்த சந்திப்பில் எடுக்கப்பட்ட முக்கிய விடயங்கள் குறித்து முதலமைச்சர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த அறிக்கையில் விளக்கப்பட்டுள்ளது.

மாகாண சபையின் நிர்வாக அலகை பலப்படுத்துவதற்கு இரு திறமை வாய்ந்த அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர் எனவும், அத்துடன் தனது அமைச்சின் சிரேட்ட உப செயலாளராக திருமதி. விஜயலட்சுமி கேதீஸ்வரன் உள்ளீர்க்கப்பட்டுள்ளார் என்றும், கடந்த ஒரு மாத காலத்தில் தனது அமைச்சின் வினைத்திறன் முன்னேற்றம் அடைந்துள்ளது என்றும் முதலமைச்சர் தெரிவித்துள்ளார். ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளையும் மாகாண சபையின் ஒவ்வொரு உறுப்பினர்களும் மேற்பார்வை செய்வர். அவர்களுக்கான கடமைப் பட்டியல் தயாரிக்க ப்பட்டுள்ளதுடன், அவர்கள் மக்களிடம் கேட்டறிய வேண்டிய வினாக் கொத்தும் தயாரிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இவ்வருடம் மாகாண சபையின் செயல்முறைகள் வினைத்திறனுடன் இருக்கும் என்பதில் சந்தேகம் எதுவும் இல்லை என்றும் முதலமைச்சர் உறுதிபடக் கூறியுள்ளார்.

**எனவே, புலர்ந்துள்ள புதிய ஆண்டிலாவது தமிழ் தலைமைகள் தங்களுக்கிடையேயுள்ள முரண்பாடுகளை புறந்தள்ளி, ஓரணியில் நின்று மக்களுக்கான பணியில் கை கோர்க்கும் நிலை ஏற்பட வேண்டும் என்பதும், தமிழ் பிரதேசங்களின் அபிவிருத்தியை மேம்படுத்தும் விதமாக, நிர்வாக கட்ட மைப்புகள் துரிதமாக செயற்பட வேண்டும் என்பதும் அனைவரினதும் எதிர்பார்ப்பாக உள்ளது.**

விளம்பரம்
VLAMBARAM™

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சந்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜயபாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: Canyon Press Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளி யாகும் ஆக்கங்களுக்கு எழுதுவோர்களே பொறுப்பாளர் கள். பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமை யாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்யலாகாது.




3 Bedrooms, 3 W Room
pen Concept Floor Plan, Main Floor Laundry With Garage Access




4 Bedrooms, 3 W Room
Main Floor Laundry W/ Garage Access, Open Living Room/Dining Room




3+0 Bedrooms, 2 W Room
3 Car Garage, No Businesses Or Out Buildings




3 Bedrooms, 1 W Room
Custom Deck Overlooking Backyard With Custom Landscaping




3 Bedrooms, 3 W Room
Oak Staircase,S/S Applns, Gas Stove,Jet Tub In Ensuite




4 Bedrooms, 4 W Room
Beautiful Detached Home W/ Finished Bsmt




4 Bedrooms, 4 W Room
Walk In Closet With Soaker Tub + Shower




4 Bedrooms, 4 W Room
Professionally Finished Basement, Newer Garage Door




3+2 Bedrooms, 4 W Room
New Paint,Open Concept Living & Diningroom




3 Bedrooms, 3 W Room
Hardwood Flooring,Main Floor Den,Laundry With Garage Access




4+3 Bedrooms, 5 W Room
Professionally Finished Basement Apartment




4+1 Bedrooms, 3 W Room
4 Spacious Bedrooms With Large Master Ensuite




3 Bedrooms, 3 W Room
Wrought Iron Fencing Around Pool, Extensive Decking,Hot Tub





4+3 Bedrooms, 5 W Room
Escape To The Way The Cottage Used To Be




5 Bedrooms, 8 W Room
Oak & Wrought Iron Railings, Theater Room Projector & Movie Chairs

KZG 647-200-5833



Sell your home
**faster**
and more
**money**

RE/MAX Platinum Club Award

**ELAGUPPILLAI SRINATHAN (MIKE) B.SC**
Sales Representative
**Direct 416 - 276-1225**
Email: esrinathan@trebnet.com

Ph1-7800 Woodbine Ave
Markham, ON L3R 2N7
Tel: 905-470-9800
Fax: 905-470-7770

# Your Home Sold In 30 Days or We buy it

**When you list your home with Mike,you receive these Guarantees.**

Your home advertised 24 hours a day until it is sold, Your home advertised in full color prints ads every week until it is sold, Our team of specialists for the same price as hiring a single agent

# அத்தனைக்கும் ஆசைப்படு!

இளமைக் காலத்தில் உங்கள் ஆசைகளில் முக்கியமான இடத்தைப் பிடித்திருப்பது எது? காதல்.

கல்லூரிகளில் காதலர்களைப் பார்த்திருக்கிறேன். ஒருவருக்காகவே அடுத்தவர் பிறந்து வளர்ந்தது போல் தெரிவார்கள். கண்களிலும் முகத்திலும் சந்தோஷம் கொப்பளிக்கும். காதலின் அதிர்வுகள் அவர்கள் இருக்கும் சூழ்நிலையையே சந்தோஷமாக்கும். துடிப்பும் துள்ளலுமாக அவர்கள் திரிவதைப் பார்த்தால், மரணம் வரை இது தொடரும் என்றுதான் தோன்றும். பெற்றோர், சமூகம், கலாசாரம் எல்லாவற்றையும் எதிர்த்துக்கொண்டு அவர்கள் திருமணம் செய்து கொள்வார்கள்.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org

ஐந்து அல்லது ஆறு வருடங்கள் கழித்து அவர்களைப் பார்த்தால், பகீரென்றிருக்கும், துடிப்பும் உயிரோட்டமுமாக இருந்தவர்கள், உலகத்தையே தொலைத்துவிட்டார்கள் போல் உலர்ந்திருப்பார்கள். ஏன் இப்படி?

மிக ஆழமாகக் காதல் வயப்பட்டிருந்த போது பலமணி நேரம் முணுமுணுப்பின்றிக் காத்திருந்தார்கள். பசி, வெயில் மழை எதுவும் தெரியவில்லை. காலம் தெரியவில்லை.

கனவுகள் நிறைவேறிய பின், அங்கே வியாபாரம் நுழைந்து விட்டது. காதலை ஒரு முதலீடாக நினைத்து வாழ்க்கையைத் தொடங்கினால் சீக்கிரமே சலிப்பும் வலியும் வேதனையும் வருவதைத் தவிர்க்க முடியாது.

சங்கரன்பிள்ளை, பூங்காவில் ஓர் அழகான பெண்ணைப் பார்த்தார். அவள் அருகில் போய் அமர்ந்தார்.

‘உன்னை என் உயிருக்கும் மேலாகக் காதலிக்கிறேன். நீ இல்லையென்றால், இப்போதே செத்துவிடுவேன்’ என்று உருக்கமாகச் சொன்னார்.

அந்தப் பெண் அவருடைய காதல் வசனங்களில் மயங்கினாள். அவர் மடியில் படுத்துக்கொண்டாள்.

அப்புறம் என்ன? சங்கரன்பிள்ளை அவளிடம் தன் விருப்பப்படியெல்லாம் நடந்து கொண்டார்.

மணி ஏழரை ஆனது. சங்கரன்பிள்ளை தன் கடிகாரத்தைப் பார்த்துவிட்டுப் பதறி எழுந்தார். ‘என்னை விட்டுப் போகாதீர்கள்’ என்றாள் அந்தப் பெண், மயக்கம் விலகாமல்.

ஐயோ, இன்றைக்கு நேரத்தோடு வருவதாக என் மனைவியிடம் சொல்லியிருக்கிறேனே!’ என்றார் சங்கரன்பிள்ளை.

‘மனைவியா? என்னை யுகம் யுகமாகக் காதலிப்பதாகச் சொன்னீர்களே? அதை சத்தியமென்று நம்பினேனே? என்று அந்தப் பெண் அழ ஆரம்பித்தாள்.

‘அட, முட்டாளே! காதல் என்பது, ‘திறந்திடு சீஸேம்’ என்று அலிபாபா சொன்ன சொற்களைப்போல் காரியத்தை சாதித்துக் கொள்ளப் பயன்படும் ஒரு மந்திரச் சொல். அவ்வளவுதான்!’ என்று சங்கரன் பிள்ளை அவளை உதறினார்.

சங்கரன் பிள்ளையைப் போல் நடந்து கொள்வதையெல்லாம் காதல் என்று முத்திரை குத்தலாமா? ஓர் ஆணும் பெண்ணும் ‘நான் இதைத் தருகிறேன், நீ அதைத் தருவாயா? என்று எழுதாமல் போட்டுக்கொள்ளும் ஒப்பந்தமா காதல்?

உங்களுக்குச் சமூகரீதியாக ஒரு துணை தேவைப்படுகிறது. அது உடலிச்சையினால் இருக்கலாம். மனத் திருப்திக்காக இருக்கலாம். பொருளாதார வசதிக்காக இருக்கலாம். ஆனால் இப்படி ஒரு தேவையினால் பிறப்பது உண்மையான காதல் ஆகாது.


திருமணத்தை, சமூகப் பாதுகாப்பாக மட்டுமே நினைத்து காதலின் அடிப்படையை உணராதவர்களால் அதைப் படுகொலை செய்யத்தான் முடியும். இந்த ஏற்பாட்டில் வேறு என்னென்னவோ வசதிகள் கிடைக்கலாம். ஆனந்தம் மட்டும் கிடைக்கவே கிடைக்காது. தலைமுறை தலைமுறையாக இந்தத் துயரம் நடந்து கொண்டிருக்கிறது.

பர்மாவைச் சேர்ந்த ஒரு சிப்பாய், இரண்டாம் உலக யுத்தத்துக்குப் பின்னர் ராணுவத்தை விட்டு விலகி, வேறு வேலைக்குப் போய்விட்டார். உண்மையில், அவர் போர்க்களத்தில் ஆக்ரோஷமான தாக்குதல்களுக்கு நடுவில் இருந்தது. பத்துப் பதினைந்து நிமிடங்கள் தான்.

‘ஒரு பக்கம் அமெரிக்கா குண்டு வீசுகிறது. இன்னொரு பக்கம் ஜப்பான் குண்டு எறிகிறது. எங்கு திரும்பினாலும் துப்பாக்கிச் சத்தம். பீரங்கிகளின் முழக்கம். வானத்தில் தீப்பொறிகள். கரும்புகை’ என்று புதிதாகச் சந்திக்கும் நபர்களிடம் அவர் தவறாமல் அந்தப் பதினைந்து நிமிடங்களை மணிக் கணக்கில் விபரித்துக் கொண்டே இருப்பார்.

‘போருக்கு அப்புறம் என்ன செய்தீர்கள்?’ என்று கேட்டால், ‘விற்பனைப் பிரதிநிதியாக இருக்கிறேன்’ என்று அடுத்த இருபத்தைந்து வருடங்களைப் பற்றி, ஒற்றை வாக்கியத்தில் பதில் சொல்வார்.

வாழ்க்கையைத் தீவிரமாக அவர் வாழ்ந்தது அந்தப் பதினைந்து நிமிடங்கள்தாம். அதுபோன்ற தீவிரத்தோடுதான் காதல் வயப்பட்டிருக்கும் காலங்களும் வாழப்படுகின்றன. அதனால் தான் காதலித்த தினங்களைப்



## சத்குரு வாசுதேவ்

பற்றிப் பேசும்போது, கிழவர்கள் முகத்தில் கூட ஒரு பிரகாசத்தை நீங்கள் கவனிக்கலாம். அப்பேர்ப்பட்ட காதலை ஒரு பரஸ்பர உதவித் திட்டமாக, அதாவது மியூச்சுவல் பெனிஃபிட் ஸ்கீமாக நினைக்காதீர்கள்.

காதல் வியாபாரம் அல்ல. மாயையும் அல்ல. அது உண்மையில் உன்னதமானதொரு உணர்வு!




## குருவிடம் ஒரு குறுக்கு விசாரணை!

‘என் மனம் திருப்தியில்லாமல் அலைகிறதே?’

‘அப்படியா? பத்து நிமிடங்களுக்குத் தொடர்ந்து உங்கள் மனதைக் கவனியுங்கள். அங்கு உற்பத்தியாகி அலைபாய்கிற எண்ணங்களை எல்லாம் நேர்மையாக ஒரு காகிதத்தில் போட்டுக் கொண்டே வாருங்கள்.

ஓர் இடைவெளிவிட்டு அதை உங்கள் நண்பரிடம் காட்டுங்கள். அல்லது நீங்களே படித்தாலும் சரி... இன்னும் எப்படி உங்களுக்குப் பைத்தியம் பிடிக்காமல் இருக்கிறது என்று உங்களுக்கே ஆச்சரியம் வந்து விடும்.

இப்போதே உங்களுக்கும் மன நோயாளிக்கும் பெரிய வித்தியாசம் இல்லை.

ஒரே ஆறுதல். உங்கள் பைத்தியக் காரத்தனத்தை சமூகம் வரையறுத்துள்ள எல்லைக்களுக்குள் வைத்திருக்கிறீர்கள். வெளியே தெரியாமல் மறைத்து ஒளித்து நாடகமாடும் தந்திரம்தான் உங்களைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறது.

பைத்தியக்காரத்தனத்தை ஒளித்து வைப்பது உங்கள் பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டுவந்து விடாது.

முழுமையான விழிப்பு உணர்வு இல்லாமல் உங்கள் வாழ்க்கை தன்பாட்டுக்குத் தற்செயலாக நடந்து கொண்டு இருந்தால், மனதுக்கு என்றைக்கும் திருப்தி கிடைக்காது. வாழ்க்கையை ஒவ்வொரு கணமும் முழுமையாக வாழுங்கள். மனம் வீணாக அலைபாய்வதை நிறுத்திவிடும்’



# நாமும் நமது இல்லமும் - பொருளாதாரமும்

## லிபரல் அரசின் 50,000 சிரிய குடிவரவாளர்கள்!

செப்ரெம்பர் 2015இன் முதல் கிழமையில் உலகளாவிய ரீதியில் வெளிவந்த அந்தப் புகைப்படம் எல்லோர் மனதையும் உருக்கியது. துருக்கிய பொலீஸ் அதிகாரி, 3 வயதுடைய அப்பையனின் உயிரற்ற உடலை எடுத்துச் சென்றபோது எடுத்ததே அப்புகைப்படம். உலகம் எங்கும் உள்ள சகல சமூக ஊடகங்களும் அந்தப்புகைப்படத்தைக் வெளியிட்டுக் கொண்டனர். சிரியாவின் போரினால் பாதிக்கப்பட்டவர்கள் ஐரோப்பிய நாடுகளை நோக்கி பயணம் செய்யும்போதே, இந்தப் பரிதாப இறப்பு நடந்தது. அந்தக் குழந்தை தவறிவிட்டது. அப்பொழுது எமது நாடு ஒக்ரோபர் 19, 2015 மூன்று கட்சிகளும் சிரியாவிலிருந்து வெளியேறும் அகதிகளை கனடாவிற்கு கொண்டு வருவது பற்றி தேர்தல் பரப்புரையில் பேசத் தொடங்கினார்கள். இன்று ஆட்சியிலிருக்கும் லிபரல் அரசு தாம் தேர்தலில் வெற்றி பெற்றால் 2015ஆம் ஆண்டு இறுதிக்குள் 25,000 வரையான அரசு sponser செய்யும் அகதிகளை கனடாவிற்கு கொண்டு வருவதாக தேர்தல் வாக்குறுதி கொடுத்தார்கள்.

ஆட்சிக்கு வந்தபின்னர் இந்த எண்ணிக்கை தனியார் sponser செய்பவர்களுடன் சேர்த்து 50,000வரை அதிகரிக்கலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. அண்மைக்காலம் வரை ஒவ்வொரு ஆண்டும் ஏறக்குறைய 250,000 வரையான புதிய வரவாளர்களை கனடா ஏற்று வருகிறது. இந்த எண்ணிக்கை அதிகரிக்கப்படல் வேண்டும் என்ற கோசமும் உருவாகியுள்ளது.

புதிதாக ஏற்றுக்கொள்ளப்படும் குடிவரவாளர்கள், வழக்கமாக வந்து கொண்டிருக்கும் வரவாளர்களிற்கான ஆதன வசதிகள் மேலதிகமாகத் தேவைப்படுகின்றன. இதனாலேயே நிர்மாணத்துறை கனேடிய பொருளாதாரத்திற்கு உறுதுணையாக உள்ளது. பல நாடுகளிற்கு இவ்வாறான வசதிகள் குறைவு. உலகில் சிறந்த நாடுகளில் குறிப்பிட்டுக் கூறக்கூடியநாடாக கனடா உள்ளது. இதனாலேயே மக்கள் இந்நாட்டை நோக்கி வரவிரும்புகின்றார்கள், வந்து கொண்டும் இருக்கிறார்கள்.

### அடுக்குமாடி மனை வாழ்க்கைமுறை

காலம் மாறுகின்றது. முன்பெல்லாம் வீடுகளில் பிள்ளைகளை வளர்த்த குடும்பங்கள், விலை அதிகரிப்பால் சாதாரண வீடுகளை தவிர்த்து அடுக்குமாடி மனையை தமது தெரிவாகக் கொள்ளவேண்டியுள்ளது.



இந்நிலைமை ஏற்கனவே பல வளர்ந்த நாடுகளில் ஏற்பட்டு விட்டது. இதேநிலைமை கனடாவின் நகரங்களில் குறிப்பாக ரொறொன்ரோவில் ஏற்பட்டுள்ளது. சில காலங்களிற்கு முன்பாக பெரிய அடுக்குமாடி மனைகளை வசதியான, கணவன் மனைவி தமது பிற்காலத்தில் வாழ்வதற்காக வாங்கியிருந்தார்கள். இப்பொழுது இளைய குடும்பங்கள் வாங்கத் தொடங்கியுள்ளன.

## நாமும் நமது இல்லமும்

### ராஜா மகேந்திரன்

**தொடர் - 457**

இன்று இளம் வயதுக்குடும்பங்களும் தமது பிள்ளைகளை வளர்ப்பதற்கு சிறந்த இடமாக, பாடசாலை, பூங்கா, போக்குவரத்து சேவைகள் போன்றவை இலகுவாகக் கிடைக்கக்கூடிய பகுதியில் மனைகளை வாங்குவதனைக் காணலாம். பொதுவாக அடுக்குமாடி மனைகள் Public Transit இற்கு அண்மையிலேயே கட்டப்படுகின்றன. இதனால் போக்குவரத்தும் இலகுவாகின்றது. தொழிலுக்கு சென்றுவரும் நேரமும் மிச்சமாகின்றது. அத்துடன் சொந்தமாக வைத்திருக்கும் வாகனங்களை குறைக்கலாம் அல்லது சொந்த வாகனம் இல்லாமலும் வாழலாம். பணத்தையும் சேமிக்கலாம். அத்துடன்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்


"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"

HomeLife HIGHER STANDARDS

**HomeLife/GTA Realty Inc.** Brokerage*

* INDEPENDENTLY OWNED AND OPERATED

5215 Finch Ave, E, #203, Toronto, ON :416.315.9397



Raja Mahendran, P.Eng.

**Commercial/Office Space For Sale/ Lease**

- Professional Office Space For Sale.
- 2nd Floor
- 1 Underground Parking
- 2 Lockers
- Location: GTA Square Middlefield / Finch
- Size upto 1000 sqft
- Available Anytime

**Condo. For Sale**

- 2 Bedroom + Den
- 2 Full Washroom
- Spacious Corner Unit
- South West View
- Birchmount & Finch
- Ensuite Laundry
- Asking $287,000
- Convenient & Desired location

**BAKERY FOR SALE**

*Well Established Bakery in East Scarborough*

- 10 Highrise Condos. / Apartment
- 4 Schools (Public & Catholic)
- TTC, Community Centre, Professional Offices, library ,Church.....
- Bakery Equipments Cooler & Other Accessories (Fixtures are included)
- Reasonable Rent - For Quick sale

**Retail Space For Sale**

**MIDDLEFIELD & FINCH**

Main Floor, Space
Corner unit, 430 sqft.
1 underground parking.
Asking $169,000.

**CONDO. FOR SALE**

**YORKMILLS / DONMILLS**

- 1 Bedroom Brand new
Tridel Building (Never Lived)
Luxury Amenities.
$1,300 + utilities.

# சர்க்கரை வியாதியை குணமாக்கலாம்

## பாகம் - 03

கொழுப்பில் நல்ல கொழுப்பு (ஹெச் டி எல்) (High-Density Lipoprotein) கெட்ட கொழுப்பு (எல் டி எல்) (Low-density lipoprotein) என்றிருப்பதைப் போல நல்ல சர்க்கரை, கெட்ட சர்க்கரை என இரண்டிருக்கிறது. ஆனால் இதை சோதிக்க வழிமுறைகள் இல்லை. இதனால் அவர்களுக்கு இந்த உடல் நடை முறை தெரியாததால் மருத்துவர்கள் செய்யும் குழப்பங்களால் சர்க்கரை வியாதியை மிக மிக மோசமாக உடலை நாசமாக்குகிறது. அது எப்படி என்று கட்டுரைத் தொடர்ச்சி களில் பார்க்கலாம்!!!!

ஜீரணம் என்பது கையில் ஆரம்பித்து, வாயில் நடந்து, வயிற்றில் முடிவடைகிறது. கையினால் நன்றாகப் பிசைந்து, வாயில் உள்ள உமிழ் நீரில் நன்றாக உணவு கலக்குமாறு நன்றாக மென்று, சுவை முழுவதும் காணாமல் போகும் அளவு நன்றாக அரைத்து பின் சிறிது சிறிதாக விழுங்க வேண்டும். பின் சிறிது நேரம் நடைப்பயிற்சி செய்த பின் ஓய்வு எடுக்கலாம் (தூங்கக் கூடாது). மேலும் சாப்பிடும் போதும் சாப்பாட்டிற்கு அரை மணி நேரம் முன்னா லும், பின்னாலும் தண்ணீர் குடிக்கக் கூடாது.

ஏனெனில் வயிற்றில் உள்ள ஹைட்ரோ குளோரிக் அமிலம் (H.C.L), எடுத்துக் கையில் விட்டால், கை பொத்து ஓட்டை ஆகிவிடும். அவ்வளவு செறிவுள்ள அமிலம் தான் நம் உணவை கரைத்து செமிக்க வைக்கும் வல்லமை வாய்ந்தது. இதை தண்ணீரை அருந்துவதின் மூலம், நாம் நீர்த்துப் போகச் செய்தால், அது உணவைக் கரைத்து செரிக்க வைக்க சக்தியற்றதா கிறது. எனவே சாப்பிடும் போதும் சாப்பாட் டிற்கு அரை மணி நேரம் முன்னாலும், பின்னாலும் தண்ணீர் குடிக்கக் கூடாது.

உணவை வாயில் போட்டு, வாயை மூடி நன்றாக அரைத்து எச்சிலோடு சேர்த்து உண்ணும் போது எச்சிலில் உள்ள அமலேஸ் காற்றினில் ஆவியாகாமல் தடுக் கப்படுகிறது. மேலும் காற்றுத் தொடர்பு இல்லாமல் மெல்லும் போது எச்சில் சுரப்பு அதிகரிக்கிறது. இதற்குப் பின்னால் பல ஞான ரகசியங்களும் உள்ளன. உங்கள் உடல் ஆரோக்கியம் பற்றி மட்டும் பேண நான் சொல்பவை மட்டுமே போதும்.

சாப்பிடும் போது பேசாதீர்கள். வாய் நிறைய உணவைத் திணித்துக் கொண்டே இருக்கா தீர்கள். நன்றாக உண்வை எச்சிலோடு கலந்து அரைத்து ருசி அனைத்தும் மறையும் வரை அரைத்து பின் உணவை விழுங்குங்கள். கையால் நன்றாக பிசைந்து முடிந்த வரை நுணுகலாக்கி வாயில் போடுங்கள். சாப்பிடும் போது தொலைக்காட்சி பார்க்காதீர்கள். சாப்பிடும் போது புத்தகம் படிக்காதீர்கள். சாப்பிடும் போது சாப்பிடுவதை மட்டுமே செய்யுங்கள். சாப்பிடுவதை ஒரு தவம் போல் செய்யுங்கள்.

இந்த இணைப்பையும் பாருங்கள். இதனால் உங்களுக்கு ஒரு தெளிவு பிறக்கும். எமது விளக்கங்கள் எளிதாக உங்களுக்குப் புரியும்.

அதிக உணவை உண்டால் தான் அதிக பலம் என்று எண்ணாதீர்கள். பன்னிரண் டாண்டுகளுக்கு ஒரு முறை பழுக்கும் நெல்லிக் கனியை மட்டுமே உண்டு யோக சாதனை புரிந்த ரிசிகளும், முனிவர்களும் வாழ்ந்த நாடு நம் நாடு. எனவே உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு மட்டுமல்ல, நம் அனைவருக்குமே நல்லது. இந்த உலகில் பட்டினியால் இறப்பவர்களை விட நம் உடல் தேவைக்கு அதிக உணவை சாப்பிடுவதால் இறப்பவர்களே அதிகம்.


நீங்கள் பாட்டுக்கு நல்ல சர்க்கரை, கெட்ட சர்க்கரை என்று சொல்லுகிறீர்கள், இவை யெல்லாம் சுத்தப்பொய் என்று சொல்கிறார் கள் என்று நீங்கள் கேட்பது புரிகிறது. நல்ல சர்க்கரையின் செயல்பாடுகள் பற்றியும், கெட்ட சர்க்கரையின் செயல்பாட்டைப் பற்றியும் இதோ கீழே காட்சியாகத் தந்துள்ளேன். கண்டு தெளியுங்கள்.

இந்த சோதனையில் உபயோகிக்கப்படும் கந்தகத்தின் தன்மைகளை முதலில் பார்க்கலாம். பொதுவாக கந்தகம் என்ற சல்பர் (SULFUR), சித்த மருத்துவத்தில் கெந்தி, என்றும் சுரோணிதம் என்றும் சக்தி என்றும் பொன்வர்ணகாரி என்றும் நாறும் பூபதி என்றும் காரிழை நாதம் என்றும் அழைக்கப்படும். பாஷாணங்களில் கடும் விஷம் கொண்டது. கந்தகம் எரியும் போது கந்தக டை ஆக்ஸைடை வெளியிடும். அந்த கந்தக டை ஆக்ஸைடு தண்ணீரில் கரையும் போது கந்தக அமிலமாக மாறும். இது உயிரினங்களுக்கு பலத்த சேதாரத்தை ஏற்படுத்த வல்லது. அமெரிக்காவில் பல இடங்களில் இந்த சுற்றுச் சூழல் சீர்கேட்டி னால் அமில மழை பொழிகிறது. அப்படிப்பட்ட கந்தகத்தின் குணங்களை கீழ்க்கண்ட இணைப்புகளில் பாருங்கள்.

http://www.lenntech.com/periodic/elements/s.htm
http://en.wikipedia.org/wiki/Sulfur

இநதக் கந்தகத்தை புகை போடும் போது உற்பத்தியாகும் கந்தக டை ஆக்ஸைடால் (SULFUR DI OXIDE) இந்தச் சோதனையில் உபயோகிக்கப்படும் சிவப்பு ரோஜப்பூ வெளுத்துப் போவதைப் பாருங்கள். மீண்டும் நாம் சாதாரணமாக எண்ணும் கருப் பட்டியை புகை போட்டு அதில் மீண்டும் ரோஜப்பூவைக் காட்ட, கந்தகத்தின் நஞ்சை கருப்பட்டி புகை முறித்து நஞ்சு நீங்கியதால் ரோஜாப்பூ தன்னுடைய இயல்பான நிறத்தை அடைவதைப் பாருங்கள்.

ரோஜாப் பூக்கள்



கந்தகம்



கருப்பட்டி



உடைத்த கருப்பட்டி



இந்த கந்தகத்தை வைத்து உற்பத்தி செய்யப்படும் என்டோ சல்பான் (Endosulfan) (வேதியியல் அணுப் பெயர் C9H6Cl6O3S) (வேறு வேதிப் பெயர்கள் Benzoepin, Endocel, Parrysulfan, Phaser, Thiodan, Thionex) பூச்சி மருந்தை கேரளாவில் உள்ள காசர் கோடு என்ற இடத்தில் தெளித்ததால் மனிதனுக்கு விளைந்த விளைவுகளை இந்த இணைப்பு களில் காணலாம்.

href="http://en.wikipedia.org/wiki/Endosulfan">http://en.wikipedia.org/wiki/Endosulfan
"http://www.patientsville.com/toxic/endosulfan.htm">http://www.patientsville.com/toxic/endosulfan.htm
href="http://newszone4u.blogspot.in/2010/09/hell-in-kerala-gods-own-country.html"
http://newszone4u.blogspot.in/2010/09/hell-in-kerala-gods-own-country.html
http://www.spiderkerala.net/resources/6940-Endosulfan-Effects-Endosulfan-Human-Health.aspx
href="http://vakkomsen.blogspot.in/2011/04/effects-of-endosulfan-in-human-body.html"
http://vakkomsen.blogspot.in/2011/04/effects-of-endosulfan-in-human-body.html
href="http://godsowncountrys.wordpress.com/endosulfan-tragedy-in-kerala/"
http://godsowncountrys.wordpress.com/endosulfan-tragedy-in-kerala/

இந்தத் தொடரில் ஏன் இந்த என்டோ சல்பான் நுழைகிறது என்று உங்களால் புரிந்து கொள்ள முடிகிறதா? நமது நாளமில்லாச் சுரப்பிகளில் பல கேடுகளை விளைவிக்க வல்ல என்டோ சல்பான் {endocrine disruptor} நாளமில்லாச் சுரப்பியான கணையத்தின் மீதும் தன் தாக்குதல்களைத் தொடுக்கிறது. அதன் விளைவுதான் இத்தனை சர்க்கரை வியாதிக் காரர்கள். அப்படிப்பட்ட என்டோ சல்பான் நஞ்சையும் நீக்க வல்லது கருப்பட்டி என்றழைக்கப்படும் நம் பனங் கருப்பட்டி (பனை வெல்லம்). என்டோ சல்பான் விஷத்தால் பீடிக்கப்பட்டு சர்க்கரை வியாதிக்களான நோயாளர்கள் கருப்பட்டியை சாப்பிட்டால் சர்க்கரை வியாதியில் இருந்து குணமாகலாம் .

என்டோ சல்பானின் மேலும் பல தீங்குகள் பற்றி ஆங்கிலக் கட்டுரையின் சிறு பகுதி.

{Endosulfan is one of the most toxic pesticides on the market today> responsible for many fatal pesticide poisoning incidents around the world.[37] Endosulfan is also a xenoestrogen—a synthetic substance that imitates or enhances the effect of estrogens—and it can act as an endocrine disruptor, causing reproductive and developmental damage in both animals and humans. Whether endosulfan can cause cancer is debated. With regard to consumers' intake of endosulfan from residues on food, the Food and Agriculture Organization of United Nations has concluded that long-term exposure from food is unlikely to present a public health concern, but short-term exposure can exceed acute reference doses.}

The World Health Organization estimated worldwide annual production to be about 9,000 metric tonnes (t) in the early 1980s.[13] From 1980 to 1989,worldwide consumption averaged 10,500 t per year, and for the 1990s use increased to 12,800 t per year.

சென்ற ஆண்டு தமிழ் நாட்டிலுள்ள தஞ்சை காவிரி டெல்டாப் பகுதியில் பயிரிட்ட நெல்லில் மட்டும் சில லட்சம் லிட்டர்கள் எண்டோ சல்பான் தெளிக்கப்பட்டுள்ளது. எனில் அதைச் சாப்பிடும் அனைவரும் சர்க்கரை நோயாளிகள் (அது மட்டுமல்ல

**Premi. S**
Natural Medicine Practitioner ©
**647.278.3100**



தொடர்ச்சி 14ஆம் பக்கம்...

**LAW OFFICE**
**STEFANO FORTINI**
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue, Aurora, Ontario L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com


GRAND OPENING
February 14, 2016. Sunday 4:00 pm
PRAGATI SIDDHA
HERBAL CLINIC
நீரிழிவு நோய் குணமாக - சர்க்கரை கொல்லி சூரணப் பொடி.
தோல் வியாதி, சொரியாசிஸ் போக்க: சிவனார் வேம்பு கற்பம், தைலம்.
கண் பார்வைக்கோளாறுகள், சைனஸ் போக்கும் நேத்திரப்பூண்டு தைலம்.
காய கற்பம் - 1 நூற்றாண்டு வேம்பு, காய கற்பம்.
சர்க்கரை புண், தீப்புண் குணமாக - சந்தான கரணி.
தலைவலி போக்க குறட்டை நீங்க - கற்பூர வள்ளி தைலம்.
உடல் எடையை குறைக்க(obesity) - நீர் முள்ளி சூரணம்.
பிரகதி சித்தா இயற்கை மூலிகை பற்பொடி.
தாதுவிருத்திக்கு - தாதுவிருத்தி கற்பம்.
ஆண்மைக்குறையை நீக்க - சங்கம் பழம் குழித்தைலம்.
முடி உதிர்தல், வழுக்கை விழுவதைத் தடுக்க மூலிகைப் பொடி.
Premi.S
Natural Medicine Practitioner
647 278-3100 www.pragatisiddha.com
3850 FINCH AVE EAST, UNIT B-6, SCARBOROUGH, ON. M1T 3TS

# ஜஸ்ரின்...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

என்றார். அவர் மேலும் தெரிவிக்கையில் Jack Ma இன் அலிபாபா நிறுவனம் 440 மில்லியன் வாடிக்கையாளர்களை கொண்டுள்ளது. அவர்கள் உலகம் முழுவதிலும் இருந்து பொருட்கள் வாங்குபவர்கள். அவர்களுடன் கனேடிய நிறுவனங்கள் இணைந்தால் 300 மில்லியன் நடுத்தரவர்க்க சீன மக்களுடன் வணிகம் செய்யலாம். இது ஒரு உற்சாகமான செய்தி என்றார்.



Justin Trudeau with Jack Ma, Alibaba

கனேடிய பிரதமருடன் இம்மாநாட்டில் கலந்து கொண்ட மற்றைய கனேடியர்களில் கல்கரி நகரமுதல்வர் Nasheed Nenshi, குவிபெக் மற்றும் நியூபிரண்ஸ்விக் மாகாணங்களின் முதல்வர்கள், கனேடிய வங்கியின் ஆளுனர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஜஸ்ரின் ரூடோ இந்தியாவின் TATA நிறுவனங்களின் தலைவர் Cyrus Mistry உடனும் தனியான சந்திப்பு ஒன்றை மேற்கொண்டார். Cyrus இலண்டன் இம்பீரியல் கல்லூரியில் குடிசார் பொறியிய லாளர் பட்டத்தையும் இலண்டன் வணிக கல்லூரியில் முகாமைத்துவ பட்டத்தையும் பெற்றவர். TATA நிறுவனங்களின் குழுமம் $108.78 பில்லியன் அமெரிக்க டொலர் வருட வருமானத்தை கொண்டது. இங்கு 6 இலட்சம் மக்கள் வேலை செய்கிறார்கள்.

# நாமும்...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

அண்மைக்காலமாக நிர்மாணம் செய்யும் அடுக்குமாடி மனைகள் இளம் குடும்பத் திற்கு ஏற்றமாதிரியான 'Amenities' உள்ளடக்கப்படுகின்றன. முக்கியமாக Play grounds மற்றும் Gymboree உள்ளடக்கப்படுகின்றது. இதனால் 1,500 சதுர அடிக்கு மேலான மனைகள் வாங்குபவர்களிடம் பிரசித்து பெற்று வருகின்றது. புதிதாக திருமணமாகிய குடும்பங்கள் 1+ Den போன்ற மனைகளை வாங்குகின்றார்கள். காலப்போக்கில் Den ஐ பிள்ளையின் அறையாகப் பாவிக்கக் கூடியதாகவும் இருக்கலாம்.

பொதுவாக அடுக்குமாடி மனையின் விலை அதிகரிப்பை கடந்த 5 வருடங்களாக ஆராயும்போது Subway உடன் சேர்ந்த பகுதியிலுள்ள மனைகளின் விலை ஏறக்குறைய ஒரு சதுர அடி $75/$100 வரையான அதிகரிப்பை காணக்கூடியதாக உள்ளது.

விலை அதிகரிப்பு இடத்திற்கு இடம் மாறியிருந்தாலும், Subway Lines களிற்கு அண்மையிலான அதிகரிப்பு அதிகமாகவே உள்ளது. அத்துடன் வாடகைக்கு விடுவதும் இலகுவாகக் காணப்படுகின்றது. எதிர்காலத்தில் விற்பதும் இலகுவாகலாம். இன்றைய காலத்தை பார்க்கும் போது, இந்நிலைமை தொடரலாம் என எதிர்பார்க்கலாம்.

# சர்க்கரை...

12ஆம் பக்கத்தொடர்ச்சி

புற்று நோய் முதலான பெருங் கேடுகளையும் விளைவிக்க வல்லது) ஆவது உறுதி. இதைத் தவிர்க்க அனைத்து இனிப்பு வகைகளுக்கும் இனி சீனியைத் (அஸ்கா சர்க்கரையை) தவிர்த்து கருப்பட்டியை உபயோகித்தால் இந்த அபாயத்தில் இருந்து முற்றிலும் தப்பிக்கலாம். கருப்பட்டி அத்தனை நஞ்சையும் முறித்து நம்மைக் காக்கும் என்பதை மிக உறுதியாகக் கொள்ளலாம்.

கல்லீரலிலும், மண்ணீரலிலும் சேரும்மருந்தெ னும் நஞ்சுகள் உரம் மற்றும் பூச்சிக் கொல்லி மருந்துகளால் விளைவிக்கப்படும் உணவினால் ஏற்படும் நஞ்சுகளால் கல்லீரலும், மண்ணீரலும் தள்ளாடுகின்றன. எனவே அவற்றால் ஜீரணத்திற்கு உதவும் பணியை செய்ய இயலாமல் இருக்கும் நிலையே சர்க்கரை வியாதி. கல்லீரலிலும், மண்ணீரலிலும் இருக்கும் நஞ்சுகளை கருப் பட்டி முறித்து எறியும். எனவே கல்லீரலும், மண்ணீரலும் முழு உயிரோட்டத்திற்குத் திரும்பும். அத்துடன் கருப்பட்டியானது சர்க்கரை நோயையும் வர விடாமல் தடுக்கும் வல்லமை கொண்டது.

அஸ்கா சர்க்கரையான சீனியும் இந்த கந்தகத்தைப் போலவே கடும் விஷத் தன்மை கொண்டது. 45 வகையான வேதிப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டு கடும் உஷ்ணக் கட்டமைப்போடு வருகிறது. சுடுகாட்டில் மழை நேரத்தில் பிணத்தை எரிக்க சீனியைத் தான் உபயோகிக் கிறார்கள் எனில் அதன் உஷ்ணத் தன்மையை உணர முடிகிறதா???? சீனி உடல் உள்ளுறுப்புக்களை சூடாக்கி அதன் செயல்பாட்டைப் பாழாக்குகிறது.


நல்ல அமுதமான உணவைக் கொடுக்க வேண்டிய விவசாயிகள் நஞ்சான உணவைக் கொடுத்து நமது மனித சமுதாயத்தை பாழ் படுத்தி வருகிறார்கள். ஆனால் அதே வேளையில் இந்தக் கருப்பட்டியை பல்லாயி ரம் வருடங்களாக நஞ்சாகாமல் அமுதமாக இன்றளவும் வைத்திருக்கும் இரு சமுதாயத்தை இங்கே பாராட்டாமல் இருக்க முடியாது. அவர்கள் தான் அற்புத மனிதர்கள். இந்த வியாபார சந்தையில் இன்றளவும் விலை போகாமல் கருப்பட்டி என்னும் கருப்புத் தங்கத்தை காப்பாற்றி வைத்திருக்கும் தேவதூதர்கள் இவர்கள் என்றும் கூறலாம்.

(தொடர்ந்து வரும்)


# வாழ்க்கைக்கு வேண்டியவை

| | | |
|---|---|---|
| மிக மிக நல்ல நாள் | - | இன்று |
| மிகப்பெரிய வெகுமதி | - | மன்னிப்பு |
| மிகவும் வேண்டியது | - | பணிவு |
| மிகவும் வேண்டாதது | - | வெறுப்பு |
| மிகப்பெரிய தேவை | - | சமயோசித புத்தி |
| மிகப்பெரிய கொடியநோய் | - | பேராசை |
| மிகவும் சுலபமானது | - | குற்றம்காணல் |
| மிகவும் கீழ்த்தரமானது | - | பொறாமை |
| நம்பக்கூடாதது | - | வதந்தி |
| ஆபத்தை விளைவிப்பது | - | அதிக பேச்சு |
| செய்யவேண்டியது | - | உதவி |
| விலக்கவேண்டியது | - | விவாதம் |
| உயர்வுக்கு வழி | - | உழைப்பு |
| நழுவவிடக்கூடாதது | - | வாய்ப்பு |
| பிரியக்கூடாதது | - | நட்பு |
| மறக்கக்கூடாதது | - | நன்றி. |





முத்துராஜா

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!
• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels• We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE - TEL : 416.289.7514 / OWNER SAM - CELL: 416.732.9383

OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# கனேடிய வர்த்தக சம்மேளனத்தின் 25வது ஆண்டு நிறைவு வெள்ளிவிழாக் கொண்டாட்டதில் வர்த்தகத்துறையில் சாதனை படைத்த தமிழர்களுக்கான விருது

CTCC 25 ஆண்டுகளாக தொடரும் வெற்றிகள்

தமிழர்கள் மத்தியில் தொடர்ந்து 25, 20, 15, 10 ஆண்டுகளாக வியாபார நிறுவனங்கள் மற்றும் தொழில்சார்துறை வர்த்தகத்தில் சாதனை படைத்திருக்கும் தமிழர்களை கௌரவித்து அவர்கள் மேலும் வெற்றிகளைப் பெற ஊக்கப்படுத்தும் முயற்சியாக எமது வெள்ளிவிழாக் கொண்டாட்டத்தில் நிகழ்வில் நீண்டகால வர்த்தக வெற்றியாளர்களுக்கான சிறப்பு விருதுகளை வழங்கத் தீர்மானித்துள்ளோம்.

## விருது தேர்வு விதிமுறைகள்

### தேவையான தகுதிகள்

- விண்ணப்பதாரர் அல்லது நியமிக்கப்படும் வேட்பாளர் தேவையான சகல உரிமங்களையும் கொண்டு மிகச் சிறந்த நிலையில் இயங்கிக்கொண்டிருக்கும் வியாபார நிறுவனத்தின் உரிமையாளராகவோ அல்லது தொழில்சார் துறையில் சேவையாற்றுபவராகவோ இருத்தல் அவசியம்.
- விண்ணப்பதாரர் அல்லது நியமிக்கப்படும் வேட்பாளர் கனடாவில் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர் அல்லது நியமிக்கப்படும் வேட்பாளர் வங்கிகளுடனான முறிதல் அதாவது வங்குரோத்து செய்திருந்தால், அதிலிருந்து சட்டப்படி வெளியேறியவராக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர் அல்லது நியமிக்கப்படும் வேட்பாளர் முன்னரோ அல்லது தற்போதோ குற்றச்செயல்களில் ஈடுபட்டு குற்றம் சுமத்தப்பட்டவராக இருக்கக் கூடாது. குற்றச் சாட்டுகளில் இருந்து மன்னிப்பு பெற்றுக்கொண்டவர்களுக்கு விலக்கு அளிக்கப்படும்.
- விண்ணப்பதாரர் அல்லது நியமிக்கப்படும் வேட்பாளர் கனேடிய மத்திய (சமஷ்டி), மாகாண அல்லது மாநகர அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினராகவோ அல்லது புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினராகவோ இருக்கக் கூடாது.
- விண்ணப்பதாரர் அல்லது நியமிக்கப்படும் வேட்பாளர் கனேடிய மத்திய (சமஷ்டி), மாகாண அல்லது மாநகர அரசாங்கத்தில் இருந்து எவ்வகை கொடுப்பனவுகளையும் பெறாதவராக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர் அல்லது நியமிக்கப்படும் வேட்பாளர் ஏதேனும் ஒரு விருது வகைக்கு மட்டுமே பரிந்துரை செய்ய முடியும்.
- நீண்டகால வியாபார சாதனையாளர் விருதைப் பெறுவதற்கு விண்ணப்பதாரர் அல்லது நியமிக்கப்படும் வேட்பாளர் இடைவெளி இல்லாது தொடர்ந்து வியாபார நிறுவனத்தை அல்லது நிறுவனங்களை நடத்தியவராக இருக்க வேண்டும்.
- குடும்ப வியாபார நிறுவனத்தை நடத்தியவர்கள் தங்களுடைய துணைக்கோ அல்லது பிள்ளைகளுக்கோ வியாபாரத்தை மாற்றிக் கொடுத்திருக்கும் சந்தர்ப்பத்தில் இவ்விடயம் குறித்து விசேட கவனம் எடுக்கப்படும்.

### தேர்வின் செயற்பாட்டு முறை

- விருதுகளுக்காய் விண்ணப்பித்தவர்களை அல்லது நியமிக்கப்பட்ட வேட்பாளர்களை கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் 25வது ஆண்டு நிறைவு விருது தேர்வுக் குழுவினர் மிக தெளிவாக மதிப்பீடு செய்து வெற்றியாளரைத் தெரிவு செய்வார்கள்.
- மதிப்பீடு செய்யும் காலப்பகுதியில் மேலதிக தகவல்கள் தேவைப்பட்டால், விருதுகளுக்காக விண்ணப்பித்தவர்களை அல்லது நியமிக்கப்பட்ட வேட்பாளர்களை கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் 25வது ஆண்டு நிறைவு விருது தேர்வுக் குழுவினர் தொடர்பு கொண்டு தேவையான தகவல்களை பெற்றுக்கொள்வார்கள்.

விண்ணப்பப்படிவங்கள் தேவையானோர் www.ctcc.ca இணையத்தில் பதிவிறக்கம் செய்யலாம். உங்கள் விண்ணப்பப்படிவங்களை எமது மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது எமது தபால் முகவரிக்கு தாமதிக்காமல் அனுப்பி வையுங்கள்.

**5200 Finch Ave. East, Suite # 209, Toronto, ON M1S 4Z4.** **Email : info@ctcc.ca**

உங்கள் விண்ணப்பப்படிவங்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி : 2016– ஏப்ரல் – 29 மாலை 5 மணி.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் : ரொஷான் தவரட்ணம்
**Roshan Thavaratnam 416-561-5733**

**SILVER JUBILEE CELEBRATIONS**
September 9 -10, 2016
Markham Hilton Hotel & Metro Toronto Convention Centre

# கருணாநிதியின்...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

கருணாநிதியே போட்டியாக இருக்கிறார் என்பதுதான் விசித்திரம். தனக்குப் பிறகு திமுக தலைமையை மு.க. ஸ்டாலின் ஏற்க வேண்டும் என்பதுதான் கருணாநிதி விருப்பம். என்றாலும், தலைவர் பதவியை துறப்பது அவருக்கும் சுலபமாக இல்லை.

2006 – 2011 ஆட்சிக் காலத்தின் கடைசி மாதங்களில், ஸ்டாலினுக்கு துணை முதல்வர் பதவி கொடுக்கப்பட்டது. அது கட்சிக்குள் ஸ்டாலின் கரத்தை வலுப்படுத்தியது. ஆட்சி மாற்றத்துக்குப் பின்னர், அதிகாரம் இல்லையென்றாலும் கட்சிகள் ஸ்டாலின் இடம் ஸ்திரமானது. குடும்பத்துக்குள்ளேயே உதயமான போட்டியாளர் அழகிரியும் கொஞ்சம் சத்தம்போட்டுவிட்டு ஒதுங்கிக்கொண்டார். இப்போது கிட்டத்தட்ட அறிவிக்கப்படாத திமுக தலைவராகவே ஸ்டாலின் தமிழகம் முழுக்க சுற்றி வருகிறார். 2014 நாடாளுமன்றத் தேர்தலில் கூட்டணி பேச்சுவார்த்தைகளை மு.க. ஸ்டாலினே முன்னின்று செய்தார்.

இப்படி கருணாநிதி அனுமதியுடன் நடக்கும் சம்பவங்கள் ஒருபக்கம் இருக்க, கருணாநிதிக்கு தெரியாமலும் பல காரியங்கள் நடப்பது அவருக்கு சங்கடத்தைத் தந்துள்ளது என்கிறார்கள் திமுக உட்கட்சி விவகாரம் அறிந்த சென்னைப் பத்திரிகையாளர்கள். குறிப்பாக, லயோலா கல்லூரி நடத்திய ஒரு கருத்துக் கணிப்பில் கருணாநிதியைவிட ஸ்டாலினுக்கு கூடுதல் ஆதரவு இருப்பதாக வந்த தகவல்கள் அவருக்கு சினத்தை ஏற்படுத்தியது என்கிறார்கள். இந்தக் கருத்துக்கணிப்புக்குப் பின் ஸ்டாலின் இருக்கிறார் என்ற எதிர்கட்சிகள் குற்றசாட்டு ஒரு பக்கம் இருக்க, கருணாநிதியே அதனை நம்புகிறார் என்பதுதான் ஆச்சரியம். இப்படியே எல்லாவற்றிலும் ஸ்டாலினே முன்னிலைப்படுத்தப்படுவது கருணாநிதிக்கு அதிகப்படியான கோபத்தை ஏற்படுத்த, "கம்பியூட்டர் வெச்சுக்கிட்டு சர்வே எடுத்தா கட்சி ஜெயிச்சிடும்னு நினைக்கிறாங்க" என்று காட்டமாகக் கூறியதாக பத்திரிகைகளிலும் செய்தி வெளியானது.

'கருணாநிதி கையில் இருந்து அதிகாரம் கொஞ்சம் கொஞ்சமாக போய்க் கொண்டிருக்கிறது' என வெளிப்படையாகவே பத்திரிகைகள் எழுதும் நிலை. இந்நிலையில், கட்சி இன்னும் தன் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது என்பதைத் தொண்டர்களுக்குக் காட்டவேண்டிய நிர்பந்தம் கருணாநிதிக்கு ஏற்பட்டுள்ளது. இதனாலேயே வெள்ளப் பாதிப்புக்கு நீதிகேட்டு நிகழ்ந்த போராட்டத்தில் தலைமை தாங்கியது. அந்தப் போராட்டம் தொடர்பான விளம்பரங்களில் ஸ்டாலின் படங்கள் குறைக்கப்பட்டது. நீதிமன்ற திடீர்



- சிவதாணு -

விசிட்டும் இதற்காகத்தான் என்கிறார்கள். சிலர் வேறு விதமாகவும் சொல்கிறார்கள்.

## கொஞ்ச நாள் பொறு தலைவா!

தேர்தல் தேதி இன்னும் அறிவிக்கப்படவில்லை. ஆனால், தேர்தல் கமிஷன் பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகிறது. எனவே, பிப்ரவரியில் திடீரென தேர்தல் தேதி அறிவிக்கப்படலாம். இதனால், அனைத்துக் கட்சிகளும் கூட்டணிக்கான பேச்சுவார்த்தைகளை வெளிப்படையாக ஆரம்பித்துவிட்டன. 1989-க்குப் பிறகு ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை அ.தி.மு.க.வும் தி.மு.க.வும்தான் மாறி மாறி ஆட்சி அமைத்துள்ளன. அதன்படி இந்த முறை தி.மு.க.வுக்குதான் வெற்றி வாய்ப்பு அதிகம் என நம்பப்படுகிறது. ஆனால், வெளிப்படையான பல அழைப்புகளுக்குப் பிறகும், இதுவரை திமுக கூட்டணிக்குள் எந்த புதுக் கட்சியும் வரவில்லை என்பது திமுகவினரை நிம்மதியாக தூங்கவிடாமல் செய்கிறது. தே.மு.தி.க., காங்கிரஸ் கட்சிகளை திமுக கூட்டணிக்குள் இழுக்கும் செயல்கள் பல மாதங்களாகவே நடைபெற்று வருகின்றன. ஆனாலும் இதுவரை கூட்டணி அமையவில்லை.

இன்னொரு பக்கம் மக்கள் நலக் கூட்டணியினரும், பாஜகவும் தேமுதிகவுடன் பேசி வருவது பலமுனைப் போட்டிக்கான வாய்ப்புகளை அதிகப்படுத்தியுள்ளது. பலமுனைப் போட்டி அதிமுகவுக்குதான் சாதகமாக இருக்கும் என்பதை 2014 நாடாளுமன்றத் தேர்தலிலேயே பாடம் படித்தாகிவிட்டது. எனவே, கூட்டணிப் பேச்சுவார்த்தைகளை விரைந்து முடித்து, தேர்தல் பணிகளுக்குத் தயாராக வேண்டிய அவசரத்தில் இருக்கிறது, திமுக தலைமை.

'முடியட்டும் விடியட்டும்', 'நமக்கு நாமே' என ஆறு மாதங்களுக்கு முன்பே தேர்தல் பயணத்தை மு.க. ஸ்டாலின் தொடங்கிவிட்டது தி.மு.க.வின் முதல்வர் வேட்பாளர் ஸ்டாலின்தான் என்ற ஊகங்களை உருவாக்கியது. இந்த ஊகம் காரணமாகவே கட்சிகள் கூட்டணிக்காக திமுக பக்கம் வரத் தயங்குகின்றன என்பதைத் திமுக தலைமை தற்போது உணரத் தொடங்கியுள்ளது. ஸ்டாலினை முதல்வர் வேட்பாளராக ஏற்க விஜயகாந்த் தயங்குவதுதான் தேமுதிகவுடன் கூட்டணி அமையாததற்கு காரணம். ஸ்டாலினை முதல்வர் வேட்பாளராக ஏற்று தேர்தலைச் சந்திப்பது எதிர்கால விஜயகாந்த் வளர்ச்சிக்கு பின்னடைவையே ஏற்படுத்தும் எனத் தேமுதிகவினர் கருதுகிறார்கள் என்பது சமீப தேமுதிக பொதுக்குழு கூட்டத்தில் பார்த்தசாரதி எம்.எல்.ஏ., பிரேமலதா விஜயகாந்த் பேச்சிலேயே வெளிப்பட்டது. கருணாநிதிதான் முதல்வர் வேட்பாளர் என்கிற உறுதி மொழியைத் தந்தால் மட்டுமே தேமுதிகவுடன் கூட்டணி அமைய வாய்ப்புள்ளது. கருணாநிதிதான் முதல்வர் வேட்பாளர் என்றால் கூட்டணி பேச்சுவார்த்தைகள் இவ்வளவு இழுப்பறியாகியிருக்காது என்பதை மூத்த பத்திரிகையாளர்களும் ஒப்புக்கொள்கின்றனர்.

2014 நாடாளுமன்றத் தேர்தலில் கூட்டணி பேச்சுவார்த்தைகளை மு.க. ஸ்டாலினே முன்னின்று செய்தார். அதில் ஆத்திரமடைந்த அழகிரி திமுக தலைமைக்கு எதிராக வெளிப்படையாகப் பேசத் தொடங்கினார். இதனால், திமுக கட்சிக்குள் நிகழ்ந்த உட்கட்சி குழிபறிப்புகள் ஒருபக்கம் இருக்க, கூட்டணி பேச்சுவார்த்தைகளும் வெற்றிகரமாக முடியவில்லை. தேமுதிக, மதிமுக, பாமக, பாஜக கூட்டணி உருவாகி, பலமுனைப் போட்டி ஏற்பட்டது. அந்தத் தேர்தலில் திமுக பெரும் அடி வாங்கியது. 37 இடங்களில் அமோக வெற்றி பெற்று அதிமுக சரித்திரம் படைத்தது. அதுபோல் இந்த சட்டசபைத் தேர்தலிலும் கூட்டணி அமையாமல் போனால் தோல்வி நிச்சயமாகிவிடும் என்பதை திமுக மூத்தத் தலைவர்களும் உணர்ந்துள்ளனர்.


இன்னொரு பக்கம் திமுக தலைமைக்கு ஸ்டாலின் இன்னும் முழுமையாகத் தயாராகவில்லை என்ற விமர்சனமும் வைக்கப்படுகிறது. நமக்கு நாமே பயணம் ஊடகக் கவனத்தைப் பெற்றது என்றாலும் லோக்கல் திமுக தொண்டர்களும் தலைமையும் கண்டுகொள்ளப்படாததால் கட்சிக்குள் புகைச்சலையே அதிகப்படுத்தியது. சமூக வலைதளங்களில் நமக்கு நாமே நாடகம் என்ற விமர்சனத்தையே சந்தித்தது. இதே காலகட்டத்தில் அப்துல்கலாம் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டது, நலத்திட்ட உதவிகள், சூறாவளி சுற்றுப்பயணம் என தேமுதிக தலைவர் விஜயகாந்த் ஸ்கோர் செய்தார். சமூக வலைதளங்களில் கோமாளியாகச் சித்தரித்து படையெடுத்த மீம்ஸ்கள் குறைந்தன.

பேய்மழை பெருவெள்ளத்தைப் பயன்படுத்தியதிலும் விஜயகாந்தே சிறப்பாக செயல்பட்டார். தஞ்சை மற்றும் கடலூரில் அவரே களம் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டார். இதன்பின்னரே தன் நிலை உணர்ந்து சென்னை ஆயிரம் விளக்கு, கொளத்தூர் உள்ளிட்ட சில பகுதிகளில் நிவாரணம் வழங்கி ஸ்டாலின் களத்துக்கு வந்தார். திமுக தலைவர் கருணாநிதி அளவுக்கு அரசியல் சாதுர்யம் மு.க.ஸ்டாலினிடம் இல்லை. ராஜதந்திரம் தெரியவில்லை. தொண்டர்களுடன் உணர்வுபூர்வமான நெருங்கிய இணைப்பும் இல்லை. பொதுக் கூட்டங்களில் தொண்டர்களின் கோஷங்களை அவர் அலட்சியம் செய்கிறார் என்பது எப்போதும் ஸ்டாலின் மீது வைக்கப்படும் விமர்சனம். கடந்த ஐந்தாண்டுகளில் இதனைச் சரிசெய்வது போல் எதுவும் நிகழ்ந்துவிட வில்லை. எனவே, ஸ்டாலின் தயாராக இன்னும் கால அவகாசம் வேண்டும் என்றும் கருணாநிதி நினைக்கிறார்.

திமுக மீது வைக்கப்படும் விமர்சனங்களில் எப்போதும் வலிமை குறையாமல் இருப்பது, குடும்ப அரசியல் என்ற குற்றச்சாட்டுதான். சென்ற மாதம் நடைபெற்ற 'துக்ளக்' இதழின் 46-ஆவது ஆண்டு விழாவில் பேசிய சோ கூட, "திமுகவை மீண்டும் உயிர்பெறச் செய்யக்கூடாது. கடந்த திமுக ஆட்சியில் சினிமா, அரசியல் என அனைத்திலும் குடும்ப ஆட்சி நடைபெற்றது. மூத்த மகன், இளைய மகன், பேரன், பேத்தி என ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொருவர் அதிகாரமிக்கவர்களாக இருந்து வந்தனர். தமிழகத்தில் நடைபெறவுள்ள சட்டமன்ற தேர்தலில் பொது மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும்" என்று பேசியது குறிப்பிடத் தக்கது. எனவே, தேர்தல் முடிவது வரைக்கும் ஸ்டாலினை முன்னிறுத்தாமல் இருப்பது குடும்ப அரசியல் குறித்த விமர்சனத்தை வலுவிழக்கச் செய்ய உதவும் என்றும் கருணாநிதி நினைப்பதாக சொல்கிறார்கள்.

இதெல்லாம் சேர்ந்துதான் ஸ்டாலினை முதல்வர் ஆக்குவது பற்றி அப்புறம் முடிவெடுத்துக் கொள்ளலாம் என கருணாநிதியை நினைக்க வைத்துள்ளது இதனால், திமுகவில் முக்கிய அரசியல் முடிவுகள் எடுப்பது, வரும் 2016 சட்டமன்றத் தேர்தல் கூட்டணி அமைப்பது,

தொடர்ச்சி 19ஆம் பக்கம்

BUY, SELL or LEASE
Dinesh Jeganathan
Sales Representative

Cell: 647-895-3466
Email: jdinesh@live.ca
Office: 416.298.3200
Fax: 416.298.3440
HomeLife Higher Standards
HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, Ontario, M1P 4S6
*each office independently owned and operated
** Not intended to solicit Buyers/Sellers under representation agreement.

# வைத்தியமுறையில் நாளாந்த தாவர உணவுகள்

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

### அம்மான் பச்சரிசி இலை

இதனை சித்திரப் பாலாடை என்றும் அழைப்பதுண்டு. கொடி இனத்தை சார்ந்தது. சிலர் செடி வகையாய் வளர்பதுண்டு. இதில் சிவப்பு அம்மான் பச்சையரிசி, சிறு அம்மான் பச்சையரிசி என இருவகையாக இருந்தாலும் இதன் குணம் ஒன்றேயாகும்.

ஒருவருக்கு மலபந்தம் ஏற்படும் போது இதன் இலையை நன்கு துப்பரவு செய்து, பச்சையாகவும் அல்லது இலைகளை அரைத்துப் பால் அல்லது தயிர் இட்டு காலையில் சாப்பிட்டு வந்தால் பூரண குணம் கிடைக்கும்.

இவ் இலை துவர்ப்பும், இனிப்பும் சுவையுடையதால் குளிர்ச்சியை உண்டாக்கி சீதளகாரி எனவும் மலத்தை இழக்கு வதினால் மலகாரி என்றும் கூறப்படுகின்றது. மேலும் எரிபுண், பிரமேகம் கசிவு நமைச்சல் யாவற்றையும் தீர்க்க வல்லது.

சிவப்பு அம்மான் பச்சையரிசி இலையை பாகம் செய்து பாவித்து வந்தால் வாதப் பிரமேகம் நீங்கி சுக்கில் தாதுவை விருத்தி செய்யும்.

### அரைக்கீரை



இதனை அறுகீரை, அறைக்கீரை எனவும் அழைப்பதுண்டு. இது பெரும்பாலும் தென் இந்தியாவில் பயிராகும் குத்துச் செடியாக காணப்படும். இனிப்புச் சுவையை உடையது. இதனை பாவித்து வந்தால் நாடித் துடிப்பை அதிகரித்து ஒருவித வெப்பு நிலையை ஏற்படுத்தும். அத்துடன் காமயிச்சையை அதிகரிப்பதினால் "காமவர்த்தினி" என்றும் அழைக்கப்படுகின்றது.

இக்கீரையை பாகம் செய்து பாவித்து வந்தால் சுரம், நடுக்கம், சன்னி, கபரோகம், வாதநோய் யாவும் நீங்குவதுடன் சப்த தாதுக்களும் (இரசம், இரத்தம், மாமிசம், மேதஸ், மச்சை, சுக்கிலம்) யாவும் விருத்தியாகும்.

### ஆரைக்கீரை

இது ஒரு நீர் பூண்டாகும். இலை நீரின் மேல் மிதக்கும். பெரும்பாலும் சதுப்பு நிலங்கள், வாய்க்கால், வரம்பு, வயல் போன்ற இடங்களில் முளைத்திருக்கும். புளியாரைக் கீரை போல் தோற்றமளிக்கும். ஆனால் புளியாரையில் மூன்று சிற்றிலைகள் உண்டு. மஞ்சள் நிறப்பூ பூத்திருக்கும்.ஆனால் இம் மாதிரியான பூ ஆரைக்கீரையில் உண்டாவதில்லை. இதில் 4 சிற்றிலைகள் உண்டு. தரையோடு கிடந்து படர்ந்து செல்லும் தண்டுண்டு.

இக் கீரையை சதுப்பன்னி, நீராவிரை எனவும் அழைப்பது உண்டு. இனிப்புச் சுவையை உடையது. உடம்பின் வெப்பத்தையும், தாகத்தையும் தணிக்க வல்லது.

இக்கீரையைச் சமைத்துச் சாப்பிட்டு வந்தால் பித்தநோய், அதிமூத்திரம், மேகநோய் யாவும் தீரும்.

### கீரைத்தண்டு

இதில் இருவகைகள் உண்டு.
1.வெண்கீரைத்தண்டு,
2.செங்கீரைத்துண்டு சுவை இனிப்பாகும். குளிர்ச்சியை உண்டாக்கும். செங்கீரைத் தன்டைச் சமைத்துச் சாப்பட்டு வந்தால் உண்டாகும் பெரும்பாதி (தீட்டு அதிகரிப்பு), பித்தரோகம் தீரும்.

வெண்கீரைத் தண்டைச் சமைத்துச் சாப்பிட்டு வந்தால் வெப்பம், வெளிமூலம், பித்த எரிச்சல் யாவும் தீரும்.

### தும்பை

இதனை வைகுண்டம், துரோணம் எனவும் அழைப்பதுண்டு. தும்பை இலையை புளியிட்டு கடைந்து சோற்றுடன் சேர்த்து சாப்பிட்டு வந்தால் சர்ப்பவிடம், வாதரோகம், தலைவலி, கபதோஷம், அக்கினி மந்தம் யாவும் தீரும். தொடரும்...

வைத்திய கலாநிதி
**கே.ரி. கோபால்**
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
*Tel.: 647.456.9796*



**NO MEDICAL INSURANCE**

No Questions Asked! No Medical Exams! 100% Guaranteed Approval!

Recently got cancer, heart attack, any heart conditions, stroke, high blood pressure, diabetes, or any medical conditions.

- 18 முதல் 85 வயதானவர்கள் எவரும் எந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களாயினும், எந்தக் குறைபாடு உள்ளவர்களாயினும், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தாலும் இந்தக் காப்புறுதியைப் பெறலாம்.
- விசா இல்லாதவர்கள், சுப்பர் விசாவில் உள்ளவர்களும் பெறலாம்.
- விபத்துக்களில் இறந்தால், நான்கு மடங்கு காப்புறுதித் தொகை கிடைக்கும்.



உங்கள் தற்போதைய காப்புறுதி பற்றிய சகல சந்தேகங்களுக்கும் உடன் அழையுங்கள்.
Does your current life insurance policy need a tune up please call me.

***Nimal Subramaniam***
***Cell: 416.816.7994***
***Email: neel900@hotmail.com***

Assumption Life | INDUSTRIAL ALLIANCE | La Capitale

•Life Insurance •Critical Illness Insurance •Disability Insurance •Mortgage Insurance •RRSP •RESP
•Non-Medical Insurance •Travel Insurance •Super Visa Medical Coverage •Drug and Dental Plan •TFSA

# மாரடைப்பு - ஓர் எச்சரிக்கை அறிக்கை

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

### *HEART ATTACK - A WARNING REPORT*

### மாரடைப்பு வருவதன் காரணம் என்ன?


அதி முக்கிய காரணம் புகை பிடிப்பதுதான். 35 வயதிலிருந்து 45 வயது வரை உள்ளவர்களுக்கு இது தான் மாரடைப்பின் முதல் காரணமாயுள்ளது. திடீர் மரணம் (Sudden Death) ஏற்படுவதற்கு புகைத்தல்தான் அடிப்படை காரணமென மருத்துவ உலகம் சொல்கின்றது.

### சக்கரை வியாதி உள்ளவர்களுக்கு மாரடைப்பு ஏற்பட அதிக வாய்ப்புள்ளதா?

சர்க்கரை வியாதி மட்டுமன்றி இரத்த அழுத்த நோய் (Blood Preasure), மற்றும் அதிக உடல் பருமன் உள்ளவர்களுக்கும் மாரடைப்புவர அதிக வாய்ப்புக்கள் உள்ளன. உடல் உழைப்பின்றி ஓரிடத்தில் இருந்தபடி வேலை செய்பவர்கள், அதிக மன அழுத்தம், தூக்கமின்மையால்
அவதிப்படுபவர்கள் போன்றவர்களுக்கும் மாரடைப்பு உண்டாகலாம்.

### பரம்பரை வாயிலாக மாரடைப்பு ஏற்படக்கூடுமா?

நிச்சயம் உண்டு. மரபணுக்கள் மூலமாக தாத்தாவுக்கு 65 வதில் வரும் மாரடைப்பு மகனுக்கு 50 வயதிலும், பேரனுக்கு 40 வயதிலும் வர வாய்ப்புள்ளது. தாய் அல்லது தந்தை யாருக்காவது மாரடைப்பு வந்திருந்தால் நாம் மிக கவனமாக இருக்க வேண்டும். இது ஒரு அடிப்படை காரணமாக இருந்தாலும் இத்துடன் நாம் வேலை பார்க்கும் சூழல், வாழ்க்கைமுறை என்பனவும் சேரும் போது மாரடைப்பு ஏற்படுவது எளிதாகிவிடுகிறது.



### மாரடைப்பு ஏற்படுவதை முன்பே உணர முடியாதா?

ரத்தக்குழாயில் பாதி அளவு அடைப்பு ஏற்படும் போதே சிறிது தூரம் நடந்தால் நடு நெஞ்சுப்பகுதியில் வலி ஏற்படும். இந்த நிலைமையில் மருத்துவரிடம் சிகிச்சை பெற்றுக்கொண்டால் ஆபத்தை ஆரம்பத்திலேயே தவிர்த்து விடலாம்.

### இதய வலியை தூண்டும் சூழல்கள் எவை?

(1) அதிக உடலுழைப்பு, கடுமையான அலைச்சல், அதிக உடற்பயிற்சி, உறக்கமின்மை
(2) அளவு மீறிய உணவு
(3) மிகுந்த குளிரான காலநிலையால்



திடீரென தாக்கப்படுதல்
(4) மாடிப்படி மற்றும் அதிக உயரமான இடங்களுக்கு ஏறுதல்
(5) அதிகமாக உணர்ச்சிவசப்படுதல் (கோபம், கவலை, பயம், விரக்தி)
(6) பல நாட்கள் படுத்த படுக்கையாகக் கிடத்தல்.
(7) பயங்கரமான கெட்ட கனவுகள்

இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒருவருக்கு நெஞ்சு வலி வந்தால் அது இதய வலியாக மாறும் வாய்ப்புள்ளது. இதே நேரத்தில் எவ்வித தூண்டுதலுமின்றி இதயத்தின் இரத்த நாளங்கள் தானாகவே சுருங்கும் போது மாரடைப்பு வரலாம். மேலும் ஒருவருக்கு நெஞ்சுவலி வருவதற்கு இதயவலி தவிர வேறு பிற காரணங்களும் உண்டு. ஆதலால் நெஞ்சுவலி வந்தால் அது எந்தவகையான நெஞ்சுவலி என்பதை மருத்துவரிடம் பரிசோதித்துத் தெரிந்து அதற்குரிய சிகிச்சை மேற்கொள்ள வேண்டும்.

### இதய நோயின் அறிகுறிகள் எவை?

(1) அடிக்கடி நெஞ்சுவலி
(2) நடக்கும் போது மேல் மூச்சு வாங்குதல்
(3) உடலெங்கும் நீல நிறம் உண்டாதல்
(4) இடையிடையே களைப்படைதல்
(5) மார்பு படபடப்பு
(6) இருமும் போது இரத்தம் வருதல்
(7) அடிக்கடி மயக்கமடைதல்
(8) விடாத வறட்டு இருமல்

இவற்றில் சிலவோ அன்றி அனைத்துமோ இதய நோயின் அறிகுறிகளாகும்.

### மாரடைப்பு வருவதை உணரமுடியுமா?

மாரடைப்பு வந்தால் தாங்கமுடியாத நெஞ்சுவலி ஏற்படும். இந்தவலி இடதுகை, கழுத்துப்பகுதி போன்ற இடங்களில் பரவும். உடலெல்லாம் வியர்க்கும். இதனோடு சிலருக்கு மூச்சுத் திணறலும் ஏற்படும். இவைகள் வரும் போது மாரடைப்பு ஏற்படப் போவதை உணரலாம்.

### வலியே வராமல் மாரடைப்பு வந்தால்

அதற்கான வாய்ப்ப குறைவு. ஆனால் சர்க்கரை வியாதி உள்ளவர்களுக்கு மட்டும் தான் இவ்வாறு Silent Heart Attack ஏற்பட்டு அமைதியான மரணம் ஏற்பட அதிக வாய்ப்புள்ளது. நீரிழிவு நோயாளிகளுக்கு நரம்புகள் பாதிப்படைவது தான் இந்த நிலைமைக்கு காரணமாகும்.

### அடைப்புகளை மருந்துகளால் கரைக்க முடியாதா?

அது அடைப்பின் சதவீதத்தைப் பொறுத்தது. இலேசான அடைப்புகளை மருந்தின் மூலம் கரைக்கலாம். ஒரு சில அடைப்புகளுக்கு பலூன் சிகிச்சை முறை (Archiyo Plastic) எடுக்கலாம். மூன்று இரத்த குழாய்களிலும் அடைப்பு இருந்தால் பைபாஸ் (By Pass) செய்வதுதான் ஒரே வழி.

### மாரடைப்பு வந்து சிகிச்சை எடுத்தவர்கள் பழைய நிலைக்குத் திரும்பமுடியுமா?

மாரடைப்பு வந்து தகுந்த சிகிச்சை எடுத்து இரண்டு மாதத்தின் பின்பு பழைய வேலைகளைத் தொடரலாம், ஆனால் தவிர்க்க வேண்டிய பழக்க வழக்கங்களை விடுத்து புதிய வாழ்க்கை முறையை பின்பற்ற வேண்டும்.

### மாரடைப்பு வராமல் தடுக்கவே முடியாதா?

அது அவரவர் கையில் தான் இருக்கிறது. இதற்கான காரணங்களை ஆராய்ந்து அந்தக் காரணங்களை தவிர்க்க வேண்டும். புகைபழக்கம் நிறுத்த வேண்டும். இரத்த அழுத்தம் உள்ளவர்கள் மாத்திரைகளை எடுப்பதுடன் நீரிழிவு நோயை கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். உடல் பருமன் குறைவடைய வேண்டும். தினமும் மூன்று கிலோமீற்றர் நடக்க வேண்டும். கொழுப்பு அதிகமுள்ள உணவுகளை முடிந்தவரை தடுப்பதுடன் மன அழுத்தம் அதிகம் வராது பார்க்க வேண்டும்.


இறுதியாக மாரடைப்பைத் தவிர்ப்பதற்கு யோகாசன பிராணாயமப் பயிற்சியுடன் தினமும் குறைந்தது 5 நிமிடமாவது தியானம் (Meditation) செய்து வருவது மிகுந்த பலனைத்தரும்.






Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm
416.617.5721

ARISTO PEST CONTROL
Set Your Mind At Rest, We Will Get Rid Of The Pest
24HRS / 7 DAYS EMERGENCY SERVICES & ANIMAL REMOVAL
• Cockroach • Bedbug • Animal Control • Mice
• Bird Control • WASPS • Hornets Removal • Rat



Same Day Service - Residential, Commercial, Industrial
We Also Provide No Obligation Inspection For Commercial & Residential Clients
Written Guarantee & Discounted Rates - Call Now 647.339.3926
Government Licensed Exterminator
(We Speak English, Gujarati & Hindi)
info@aristopestcontrol.ca / www.aristopestcontrol.ca

TBC Toronto Business College
கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்



JOB READY
DIPLOMA PROGRAMS
ACCOUNTING & PAYROLL ADMIN.
Jobs available in plenty
Earn good salary
FOOD SERVICE WORKER (FSW)
Work in Hospitals, Schools
PERSONAL SUPPORT WORKER(PSW)
Immediate Job Opportunities
Work in Hospitals, Long Term Care, Senior Homes
*Programs start February 16th*

SECOND CAREER
யார் தகுதி உடையவர்கள் ?
★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
★ EI பெற்றவர்கள்
★ 5 வருடங்களுக்குள் Maternity / Parental Benefits பெற்றவர்கள் Diploma பாடநெறி ஒன்றைக் கற்கலாம்
Tuition Fees,Books,Living Expenses
Day care & Transportation up to $28000
visit www.secondcareerontario.com

PART TIME COURSES
*Windows,Word,Excel,Power Point, Access,QuickBooks,Sage50 Accounting & Accpac 2012*
Workshops
Food Handler Certification
First Aid & CPR

- 100% Instructor Led Training
- Small Class Sizes
- Student Friendly Environment
- Ample Free Parking
- Professional & Experienced Staff
- TTC Accessible
- Career Planning & Counselling

416- 451- 6680 / 416-291-5155
4465 Sheppard Ave. East #208
( Sheppard & Brimley ) Scarborough
www.tbcollege.com info@tbcollege.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)

# கருணாநிதியின்...

16ஆம் பக்கத்தொடர்ச்சி

அதிமுக அரசுக்கு எதிராக போராட்டம் நடத்துவது போன்ற பல்வேறு முக்கிய முடிவுகளை எடுக்க கருணாநிதி முன்வந்துள்ளார். சிறிது காலம், அதாவது சட்ட மன்றத் தேர்தல் முடியும்வரை, மு.க.ஸ்டாலின், அமைதியாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். அவரும் இதனை ஏற்றுக்கொண்டு கருணாநிதிதான் முதல்வர் வேட்பாளர் என்பதை அறிவித்தார்" என்கிறார்கள். மேலும், கடந்த ஒரு வருட காலமாக ஸ்டாலினின் கை திமுகவுக்குள் வலுப்பெற்று வரும் நிலையில், இதன் காரணமாக கட்சிக்குள் ஒரு தரப்புக்கு ஏற்பட்டிருக்கும் மன உளைச்சலை களைவதும் இதன் முக்கிய நோக்கமாக பார்க்கப்படுகிறது.

மகனுக்காகவோ மகனுடனான போட்டியோ... எதுவாக இருந்தாலும், 92 வயதிலும் தன் மீதான அவதூறு வழக்குகளையே அரசியல் ஆயுதங்களாக்கிப் போரிட்டுக் கொண்டிருக்கும் திமுக தலைவரின் உத்வேகம், கடைக்கோடி திமுக தொண்டனுக்கும் உற்சாகத்தைக் கொடுத்துள்ளது. இன்னொரு பக்கம், எப்போதும் அரசியல் நிகழ்வுகளை தன்னை சுற்றியே நடப்பதை போல பார்த்துக்



கொள்ளும் கருணாநிதியின் ராஜதந்திரம் மீண்டும் ஒருமுறை வெற்றி பெற்றுள்ளது. ஜெயலலிதாவுக்கு எதிராக காட்டமான அறிக்கைகள், பேட்டிகள் மூலம் விஜயகாந்தைச் சுற்றிக்கொண்டிருந்த ஊடகங்கள் கவனம் இப்போது கருணாநிதியை நோக்கி திரும்பியுள்ளது.

# உன் நினைவுகள்!



தத்தளிக்கும் மனதிற்கு ஏனோ
தவிப்பின் வேதனை தெரிவதில்லை
தட்டிச் சொன்னாலும் புரிவதில்லை
தடயத்தை அழிக்கவும் முடிவதில்லை

தனிமையை நான் தேடிச்சென்றாலும்
தவறாது வந்து நீ தொல்லை தந்தாய்
தண்டனை நான் தான் என்றாய்
தள்ளிப் போகவும் மறுக்கிறாய்

நினைத்துப் பார்க்கிறேன் மீண்டும்
ஒருமுறை
நிமிடங்களையும் கணக்கிட்டு பார்க்கிறேன்
- உன்னை
நினையாத பொழுதொன்று உண்டா என்று
நினைவுக்கு மட்டும் இதுவரை
எட்டவில்லை

மொழிகளை மௌனிக்க முயலுகின்றேன்
மௌனமாய் என்னுள் கரைகின்றேன்
மொழி பெயர்க்க தெரியாது
புலம்புகின்றேன்
மொத்தத்தில் நானே தோற்றுவிட்டேன்

உலகமே நீ தான் என்று உன்னில்
மூழ்கினேன்
உகந்தவன் நீ தான் என்றும் கண்டு
கொண்டேன்
உணர்வுகளின் வலியில் உயிர் போக
உயிரில் உன்னை வைத்து பூஜிக்கின்றேன்



மீரா குகன், ஜேர்மனி

# வெளிச்சத்திற்கு வரும் வெளிச்சம்

## இயற்கையின் இரகசியங்கள்

### யாவருக்குமான அறிவியல்

இயற்கையின் இரகசியங்களின் முதற் பகுதியான ஒளியினைப் பற்றிய தகவல்களை இன்று முதற் சில காலங்களுக்குப் பார்க்கப் போகின்றோம். பல அறிவியல் விடயங்களை வெளிச்சத்திற்கு கொண்டு வரப்போகும் இந்தப் பகுதியினை வெளிச்சத்துடனேயே ஆரம்பிப்பது தான் மிகப் பொருத்தம். உலகினரின் அறிவியற் கண்களைத் திறந்து விட்ட வெளிச்சத்தினைப் பற்றிக் கூறுகின்ற இப்பகுதியிற்கு, வெளிச்சத்திற்கு வரும் வெளிச்சம் எனப் பெயரிட்டு இருக்கின்றேன். பொருத்தமானது தான் எனக் கூறுவீர்கள். சரி, இரகசியங்களை அறிய ஆரம்பிப்போம்.

(சுவாரசியமான அறிவியற் தகவல்களைக் கொண்ட தொடர்)

பொதுவாகவே இருளகற்றி பொருட்களை கண்டு கொள்வதற்கு வெளிச்சம் அவசிய மாகின்றது. வெறுமனே உலகியல் விபரங்களை மாத்திரமல்லாது, அறிவியற் கதவுகளையும் திறந்து விட்டதும் இன்றும் திறந்து கொண்டும் இருப்பது இந்த வெளிச் சம்தான். ‘வெளிச்சமில்லேல் ஒன்றுமே வெளிச்சத்திற்கு வந்திரா’ என்பார்கள். வெளிச்சமெனத் தலைப்பிடினும், அதன் இயற்பியற் பெயரான ‘ஒளி’ என்பதனையே அதிகம் பாவிக்கப் போகின்றேன்.

ஆரம்ப நாட்களில் வெளிச்சம் கண்களின் சிறப்பான இயல்பென்றே மனிதர்கள் கருதினார்கள். எமது கண்கள் தான் எதையோ அனுப்பிப் பொருட்களைத் தெரிய வைக்கின்றது என எண்ணினார்கள். ஆனால் இக் கருத்தில் ஒரு குறையிருப்பதை அவர்கள் சில காலங்களிலேயே அறிந்து கொண்டார்கள். கும்மிருட்டில் எங்களுக்கு ஒன்றும் தெரிவதில்லையே! எனவே கண்கள் எதனையும் அனுப்புவதில்லை, கண்களுக்குத் தான் பொருட்களில் இருந்து ஏதோ வருகிறது என்பதை உய்த்தறிந்து கொண்டு அதுதான் வெளிச்சம் எனக் கூறித் தமது ஆரம்பக் கருதுகோளினை திருத்திக் கொண்டார்கள். இந்த வெளிச்சம் தான் எங்களுக்கு பொருட்கள் முதற் கொண்டு எல்லாவற்றையும் வெட்ட வெளிச்சமாகக் காட்டுகின்றது. வெளிச்சத்தின் ஆரம்பப் புதிர் ஆரம்பத்திலேயே அவிழ்க்கப்பட்டு விட்டது. ஆனால், கூடவே சில கேள்விகளும் எழுந்தன.

அவற்றில் முதலாவது கேள்வி, இந்த வெளிச்சம் எங்கிருந்து வருகின்றது? இதனுடன் ஒட்டடிக் கொண்டே இன்னொரு கேள்வியும் வந்தது. நாம் காண்கின்ற எல்லாப் பொருட்களுமே வெளிச்சத்தைத் தருகின்றனவா? இக் கேள்விகளுக்குக் கூடச் சுலபமாகப் பதிலைக் கண்டு கொண்டார்கள் நம் முன்னவர்கள். சில பொருட்களில் இருந்து வெளிச்சம் தானாகவே வருகின்றது, அவற்றை நாங்கள் நேரடியாகவே பார்க்க முடிகின்றது. மற்றப் பொருட்களைப் பார்ப்பதற்கு, ஏதாவது ஒரு பொருளில் இருந்து ஒளிவர வேண்டும் அந்த ஒளிதான் இருட்டில் இருக்கும் மற்றப் பொருட்களையும் எங்களுக்கு காட்டித் தர வேண்டும் என்றாகியது. எப்படியென்றால், ஒளியைத் தருகின்ற பொருளில் இருந்து வரும் ஒளி, மற்றப் பொருட்களில் பட்டுத் தெறித்து எங்களது கண்களுக்கு வரும் போது அப்பொருட்களையும் நாம் கண்டு கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. இந்த ஒளியைத் தானாகவே தருகின்ற பொருளை ஒளிமுதல் என்று கூறினார்கள். எங்களுக்குத் தெரிந்த ஒளிமுதல் கதிரவன். அதாவது சூரியன். இன்னமும் விண்மீன்கள், தீப்பந்தங்கள், இந்நாட்களில் மின்குமிழ்கள் எனப் பலவற்றைக் கூறலாம்.

வெளிச்சம் எங்கிருந்து வருகின்றது என்ற கேள்விக்கு இலகுவில் பதில் கிடைத்தாலும் இன்னமும் சில கேள்விகள் கூடவே எழுந்தன. இக் கேள்விகள்தான் அறிவியல் உலகின் அச்சாணியான கேள்விகள் எனலாம்.

கண்களுக்கு வருகிற வெளிச்சம் எப்படிப்பட்டது? துண்டு துண்டுகளாகப் பல கூறுகளாக, பொ்லங்களாக வருகின்றதா? அல்லது தண்ணீரைப் போலத் தொடர்ந்து வெளிச்சமும் பாய்ந்து வருகின்றதா? எத்தனை வெளிச்சத் துண்டுகள் என்ற கணக்கில் வருகின்றனவா? அல்லது எவ்வளவு அளவில் வெளிச்சம் வருகின்றது என்ற அடிப்பயையில் வருகின்றதா? அந்நாட்களில் ஒளியினைப் பொறுத்த வரையில் இது பெரும் புதிராகவிருந்தது. இவ்விரண்டு வகைகளையும் தனித்தனியாகப் பற்றிக் கொண்டு இரு பகுதிகளாக அக்கால அறிவியலாளர் கள் புரிந்து கொண்டார்கள். பிரிந்தது மட்டுமன்றி, தங்களது கருத்துக்கள் தான் சரியானவை அல்லது பொருத்தமானவை எனவும் தம்முள் வாதிடவும் தொடங்கினர். அன்று தொடங்கிய இவ்வகையான வாதாட்டம்தான் இன்று அறிவியலை இவ்வளவு தூரத்திற்கு உயர்த்தி விட்டது என்பது நாங்கள் மறக்கக் கூடாது.

அறிவியலைப் பொறுத்தவரையில் வெளிச்சம் பற்றிய இந்த எத்தனை, எவ்வளவு என்ற கேள்விகள் தான் முக்கியமானவையாக இருந்து விட்டன. இவ்விரு அளவைகளின் அடிப்படைதான் விஞ்ஞானத்தின் முன்னேற்றத்திற்கு அடிப்படைக் காரணி என்பது என்னளவில-ான கருத்தாகும். ஒளியைப் பொறுத்த வரையில் எத்தனை, எவ்வளவு என்ற சிக்கலான கேள்விகளின் விடையானது இருபதாம் நூற்றாண்டு வரையில் அறிவியல் உலகில் இருந்து கொண்டேதான் இருந்தது. ஆனால் அது முற்று முழுதான முடிவில்லை என்பதும் சூறிப்பிடத்தக்கது.



உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண் மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.


பொதுவாகவே இத்தனையா? அல்லது இவ்வளவா? என்ற கேள்விகளின் அடிப்படை யில் தான் அந்நாட்களில் பொருட்களையும் வகைப் படுத்தினார்கள். இத்தனையா? இவ்வளவா? என்ற பகுப்பினை முதலிற் தெரிந்து கொள்வோம். இத்தனை என்பது கூறுகளின் எண்ணிக்கை. ஒன்று, இரண்டு, மூன்று..... என்று அக்கூறுகளை ஏதோ ஒரு வகையிற் தனித் தனியாக எண்ணிக் கணக்கிட முடியும். ஆனால் இவ்வளவு என்பது தனித்தனி கூறுகளாக்கப்பட்டு எண்ண முடியாதனவற்றின் அளவு. இரண்டு மரங்கள் என எண்ணிக்கையில் எண்ண முடியும். இரண்டு போத்தல் தண்ணீர் என அளக்க முடியும். மறுவிதமாகக் கூறுவ தில்லை. தனித்தனிக் கூறுகளால் எண்ணப் படுபவையும், தனித்தனிக் கூறுகளாக்கப்பட முடியாது, அளக்கப்படுபவையும் என இரண்டு வகைகளை கண்டு கொண்டார்கள். அதில் வெளிச்சம் எந்தவகையது? தனித்தனிக் கூறுகளாக்கப்படக் கூடியதா? அல்லது தொடர்ச்சித் தன்மையதா?

இனி, இன்னொரு பிரிவு வகையினையும் மனிதர்கள் அறிந்து கொண்டார்கள். அதாவது பேரண்டத்துள் (பிரபஞ்சம்) அடங்கியவற்றையும் இரண்டு பிரிவில் வைத்துக் கொண்டார்கள். ஒன்று இடத்தைப் பிடித்து, தமக்கொன பாரத்தையும் கொண்டிருக்கும் சடங்கள். கல், மண், நீர், மரங்கள், மனிதர்கள் போன்றவற்றை சடங்களின் பகுதிக்குள் வைத்திருந்தார்கள். மற்றது, குறிப்பீட்ட ஒரு இடத்தை தனக்கெனப் பிடித்துக் கொள்ளாதது. இடத்தை அடையாது ஆற்றலை மட்டும் காட்டித் தன்னை இனம் காட்டுகிற அதனை சக்தி என்றார்கள். வெப்பம், வெளிச்சம், சத்தம், காந்தம், மின்சாரம், ஈர்ப்பு என்பவற்றை சக்தியின் வகைகளாகக் கண்டார்கள். இந்தச் சக்தியிற்கும், சடங்களுக்கும் இன்னொரு வேறுபாட்டையும் கண்டு கொண்டார்கள். சக்தியைத் தனித்தனிக் கூறுகள் ஆக்க முடியாது. சக்தி தொடர்ச்சித் தன்மையைக் கொண்டது. அதனால் சக்தியை இத்தனை என எண்ணாது, இவ்வளவு என்று அளந்தார்கள். நீர், நெருப்பு, மண், ஆகாயம் காற்றுப் போன்ற சில சடங்களும் கூட மேலெழுந்த வாரியாகப் பார்க்கையில் தொடர்ச்சித் தன்மையைக் காட்டுகின்றன. அவற்றினையும் எண்ணாமல் அளந்தார்கள், அளக்கிறோம். இதனால்தான் சடங்களான பஞ்சபூதங்களையும் அன்று இயற்கையின் சக்திகளாக எண்ணினார்கள்.

அடுத்த இதழிலும் வெளிச்சத்தை இன்னமும் வெளிச்சம் போட்டுப் பார்ப்போம்.



- கனி -
416.261.1348
leptons@hotmail.ca



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

TUTORING
KEEN TUTORING CENTRE
By Qualified & Experienced Tutors
➢ CHEMISTRY, PHYSICS, BIOLOGY
➢ FUNCTIONS, ADV. FUNCTIONS
➢ CALCULUS & VECTORS, DATA MGT
➢ SCIENCE, MATH, ENGLISH
உங்கள் கல்விக்கான சிறந்த தெரிவு
✓ High School ACADEMIC/UNIVERSITY
✓ IB &AP PROGRAMME
✓ MCAT Classes
✓ EQAO GR 3 & 6
GR 9- 12 , UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"
Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com




# அனுஷ்காவுடன் நடிக்க விருப்பம் - விஜய் ஆண்டனி பேட்டி

எனக்கு இசையும் தெரியாது, நடிப்பும் தெரியாது என்று பகிரங்கமாகக் கூறினாலும், இரண்டு குதிரையிலும் இனிமையாக சவாரி செய்கிறார், விஜய் ஆண்டனி. முன்னணி இசையமைப்பாளராக இருந்த நிலையில், 'நான்' படத்தில் நடிகராக அவதாரம் எடுத்தவர் தொடர்ந்து 'சலீம்', 'இந்தியா பாகிஸ்தான்', இப்போது 'பிச்சைக்காரன்', அடுத்து 'சைத்தான்' என முன்னணி நடிகர்களுக்கு சவால் விடுகிறார். விளம்பரம் இதழுக்காக விஜய் ஆண்டனியுடன் ஒரு சந்திப்பு.



### 'பிச்சைக்காரன்' படம் எப்படி வந்திருக்கிறது?

வழக்கமாக, எல்லா நடிகர்களும் அவர்களின் புதுப் படத்தைப் பற்றி, இது வித்தியாசமானது என்றுதான் சொல்வார்கள். நானும் என்னுடைய ஒவ்வொரு படத்தையும் அப்படித்தான் சொல்லியிருக்கிறேன். ஆனால், இதுவரைக்கும் நான் சொன்னதை விட நிறைய புதுசான, வித்தியாசமான படம் 'பிச்சைக்காரன்'. ஒரு பெரிய பணக்காரன் திடீரென்று எப்படி பிச்சைக்காரன் ஆகிறான் என்பதுதான் படத்தின் ஒரு வரிக் கதை. இந்தப் படத்தில் உண்மையான பிச்சைக் காரர்களுடன் சேர்ந்து நடிச்சிருக்கேன்.

### அவங்களோடு நடித்த அனுபவம் எப்படியிருந்தது?

அவங்களோடு பேசியது, பழகியது புது

தொடர்ச்சி 34ஆம் பக்கம்




GUEST OF
HONOR
AJAX
NS DENTAL
Care, Comfort, Convenience, Confidence...
Please join us for our
GRAND OPENING
Celebration
ON JANUARY 30TH 2016 TO BE HELD AT 2:30 PM
AJAX
MOCKTAILS & HORS D'OEUVRES TO BE SERVED THROUGHOUT THE EVENING
1801 Harwood Ave N | Unit 18 | Ajax | ON | L1T 0K8
905 426 2222
905 426 2225

# JRS AUTO TECH

**OPEN 24 HOURS 7 DAYS A WEEK**

MECHANICAL & ELECTRICAL REPAIRS FOR ALL MAKES & MODELS


VISA

- Free Inspection & Diagnostics
- Complete Car & Truck Care
- Licensed Mechanics
- Insurance Work Done
- All Fluid Top Ups & A/C Repairs
- Fuel Injection Service & Muffler/ Turbos
- Courtesy Drop Off & Pick Up Available
- Purchase Any Oil Change And Receive A Free Voucher For Basic Car Wash



SENIOR'S SPECIAL
Free Shuttle Available for Seniors

## TIRE SPECIALS



NEW TIRES FROM $75
USED TIRES FROM $35

## FREE OIL CHANGE WITH RUST PROOFING

$99 Car
$120 SUV

## BRAKE JOB

STARTING FROM
$159

## WATER PUMP TIMING BELT & LABOR

STARTING FROM
$450 Most Cars
$550 Most Vans

Castrol

REGULAR OIL CHANGE $29.95
CASTROL OIL CHANGE $39.95
SYNTHETIC OIL CHANGE $49.95
SUV'S SYNTHETIC SPECIAL WITH FLUID TOP-UP PACKAGE FOR $149.95

## TRANSMISSION FLUSH

*Starting From...*

*Imports $74.95*

*Radiator Flush $79.95*

*Domestic $149.95*

## ENGINE CHECK WITH FREE DIAGNOSTICS

CHECK

LEXUS

FREE DTC Code Run and Inspection

## 2655 Lawrence Ave. East, Unit 5

(Midland & Lawrence, rear of the building)

**CALL SUBAS DIRECT → 416-206-9489**

**Tel: 416-628-4399**

Email: jrsautotech@hotmail.ca

Like, Share & Follow us at www.facebook.com/jrsautotech

*Prices subject to change. Valid with flyer. Cannot be combined with any other offers.

designed by panchalidesigns.com 647.294.2963

# CANADIAN COLLEGE FOR HIGHER STUDIES




YOU MAY QULIFY FOR GOVERNMENT FUNDED TRAINING IF UNEMPLOYED OR UNDEREMPLOYED

## POST GRADUATE DIPLOMAS & DIPLOMAS

### BUSINESS DIPLOMAS

*Business Administration
*Computerized Accounting with Office Administration &SAP
*Post Graduate Diploma in Supply Chain & Logistics Management

### POST GRADUATE DIPLOMAS IN I.T.

- Enterprise Linux Administration
- Enterprise IT Management

### DIPLOMAS IN I.T.

- Systems Administrator (Linux and Unix)
- Network (LAN/WAN) Administrator
- IT Support with Software QA

Visit our E-Brochure for full course outline and details
thecanadiancollege.ca/local-students/

We also offer courses in UNIX, SAP, RHCSA, RHCE, LAMP, VERITAS, Oracle, Saleforce.com, & VMware / Cloud / KVM. These courses do not require approval under the PCC Act of 2005.

The skills you will receive are in great demand in the current job market now!

**Call us TODAY to Register!**

Connect with us on social media

# 416-850-1456 / 416-489-8946

**Progress & Bellamy**

**www.thecanadiancollege.com**

Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005. Designated Learning Institution (DLI #: 019283878482)

# வாழ்க்கைப் பயணங்கள் - 10

தொடர்கதை ..........

வார நாட்களில் காலை வழமைபோல் வேலை. மீண்டும் மாலையில் வீடு வந்தால், வீட்டு வேலை, சமையல், படிப்பு என்று ஒரே விதமாக அமலாவின் வாழ்க்கை உருண்டோடியது. வார இறுதி நாட்களில் எப்படியும் அதிகளவில் பெற்றோருடன் உரையாடிக் கொள்வாள். வீட்டு வேலை களையும் பார்த்து கடைகளுக்கும் போய்வர நேரம் சரியாகி விடும். நண்பி சுகந்தியும் கடைகளுக்குப் போகும் பொழுது அழைத்துச் செல்வதால் பொருட்களை வாங்கி வருவதற்கு சுகந்தியும் கொஞ்சம் உதவியாக இருப்பாள்.

சில வாரங்கள் சென்று விட்டது. அன்று சனிக்கிழமை, அமலா காலை எழுந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வந்து சோபாவில் அமர்ந்தாள். டிவோர்ஸ் பேப்பரில் கையெழுத்து போட்டுத் தரும்படி கேட்ட விடயம் நினைவுக்கு வந்தது. இன்று மட்டுமல்லாது கடந்த சில வாரங்களாக இந்த விடயத்தைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டுதான் இருந்தாள். ஏற்கனவே இது பற்றி லோயர் அட்வைஸ் கேட்டு இருந்தாள். இந்த விடயத்தைத் தாமதிப்பதில் அர்த்தம் இல்லை என்றே அவள் மனம் எண்ணிக் கொண்டது.

"நான் ஏன் யாரின் சந்தோஷத்தையும் கெடுக்க வேண்டும். அம்மாவுக்கு போன் பண்ணித்தான் பேப்பரிலே கையெழுத்துப் போட்டு லோயருக்குள்ளாலே அவையிட் டைக் கொடுத்து விடுகின்றேன் என்று சொல்லி விடுவம்" என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டாள். அவளின் மனதில் சுதாகரன் ஸ்பொன்சர் செய்தமை, சுதாகர னில் ஏற்பட்ட திடீர் மாற்றம் எனப் பல விடயங்கள் அமலாவின் நினைவில் புரண்டன.

சுதாகரன் கொழும்பில் இருந்து புறப்பட்டுக் கனடா வந்ததும் ஒரு மாதத்துக்கள் ஸ்பொன்சர் அப்பிளிகேசன் போடும் அலுவல்களைச் செய்து முடித்திருந்தான். வாரத்துக்கு ஒரு முறை தொலைபேசியில் அமலாவுடன் பேசிக் கொள்வான்.

ஒரு வருட காலம் இவ்வாறு ஓடி விட்டது. ஸ்பொன்சர் அப்பிளிகேசன்ஸ் அலுவலும் நடந்து கொண்டிருந்தது. மெடிக்கலும் செய்து விட்டு விசாவுக்கு காத்திருந்த நேரம். சுதாகரன் போக்கில் சிறு மாற்றத் தைக் காணமுடிந்தது. முன்பு போல் அடிக் கடி அமலாவுடன் பேசுவதில்லை. இடைக் கிடை எடுத்துப் பேசுவான். வேலைப்பளு அதிகம் என்று ஏதோ சில சாட்டுக்களைச் சொல்வான். அமலாவும் அவன் சொல்வதை நம்பிக்கொண்டு அப்படியே விட்டிடுவாள்.

இதற்கிடையில் சுதாகரனின் அண்ணி இடைக்கிடை எடுத்து அமலாவுடன் பேசிக் கொள்ளுவாள். விசாக் கிடைத்ததும் அமலா வை வரும்படியும் திருமணத்தை இங்கு செய்ய வேண்டிவரும் என்றெல்லாம் பேச்சுக் கள் அடிபட்டன. இதனால் அமலாவின் பெற்றாரும் மனம் கலங்கினார்கள். ஏதோ அனுசரித்துப் போவம். அமலாவின் வாழ்க்கைதானே முக்கியம் என்று எல்லா வற்றுக்கும் சம்மதம் தெரிவித்துக் கொண்டனர்.

அமலாவுக்கு கனடா விசா கிடைத்தது. அமலா கனடாவுக்கு சுதாகரனிடம் போகப் போறேன் என்ற மகிழ்ச்சி ஒரு புறமும், அப்பா, அம்மாவை விட்டுப் பிரிய வேண்டுமே என்ற கவலையுடன் கலியாண வீடு கனடாவில் என்று சொல்லிப் போட்டார்களே என்ற கவலை மறு புறமுமாக மனதைக் குழப்பின.

"என்ரை விசா கிடைத்திட்டுது. ரிக்கெற் புக் பண்ண வேணும். நீங்கள் வரமாட்டீர்களா? கலியாண வீட்டை இங்கை வைக்க முடியாதா?" என்று போனில் சுதாகரனுடன் பேசும் பொழுது கேட்டாள் அமலா.

"என்னால் வர முடியாது. உங்கடை வசதிப்படி ஒரு டேற்றுக்கு ரிக்கற்றைப் போடுங்கோ" என்றான் சுதாகரன்.

விசா கிடைத்த செய்தியால் சுதாகரன் மிகவும் சந்தோஷப்படுவான் என்று எதிர்பார்த்த அமலாவுக்கு சுதாகரன் எந்த உணர்ச்சியையும் காட்டிக் கொள்ளாதது ஏமாற்றத்தை அளித்தது.

அமலா மீண்டும் "உங்களுக்கு சந்தோஷ மில்லையா?" என்று கேட்டாள். "ம் சந்தோஷம்தான்" என்று சுதாகர் மழுப்பலாகப் பதிலளித்து விட்டு "அண்ணி உம்முடன் கதைக்க வேணுமாம்" என்று சொல்லி போனை அண்ணியிடம் கொடுத்தான்.

அண்ணி வதனா "எப்படி இருக்கிறீங்கள் அமலா" என்று கேட்க "எனக்கு விசா கிடைத்து விட்டது." என்று அமலா சொன் னாள். "அப்படியா சந்தோஷம். அப்ப கெத- யிலை ரிக்கற்றைப் போட்டிட்டு வாங்கோ" என்றாள் வதனா. "சரி அக்கா நான் வைக்கிறன்" என்று சொல்லி ரெலிபோன் இணைப்பைத் துண்டித்தாள் அமலா.

வதனாவுடன் கதைத்தது அமலாவுக்கு கொஞ்சம் சந்தோஷத்தைக் கொடுத்தது. நாட்கள் ஓடின. அமலா வீட்டில் எல்லோரும் அமலாவின் பிரயாண ஆயத்தங்களைச் செய்வதிலேயே சுறுசுறுப்பாக இருந்தனர். அமலா கனடாவுக்கு போக இருப்பதை அறிந்த நண்பர்களும், உறவினரும் பரிசுப் பொருள்களுடன் அமலா வீட்டுக்கு வந்து போய்க் கொண்டிருந்தனர். அமலா தான் பார்த்து வந்த வேலையிடத்திலும் தனது பிரயாணம் பற்றிக் கூறி பிரியாவிடை பெற்றுக் கொண்டாள்.

இந்த நேரத்தில் அதிகமாக வதனா தான் அடிக்கடி கனடாவில் இருந்து போன் பண்ணி பேசிக் கொண்டிருந்தாள். சுதாகரன் வேலையில் சரியான பிஸியென்று சுதாகரன் ரெலிபோன் எடுக்காமைக்கான காரணத்தை வதனா சொல்லி அமலாவை சமாதானப் படுத்திக் கொண்டிருந்தாள்.

அமலாவும் இனியென்ன அங்கை வரப்போற மனைவிதானே என நினைத்து சுதாகரன் போன் எடுக்கிறதில்லைப் போலும் என்று தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டிருந் தாள். சுதாகரனின் பெற்றோரும் அமலா வீட்டுக்கு வந்து உறவு கொண்டாடி விட்டுச் சென்றார்கள். அவர்களின் பேச்சில் எந்தவித சந்தேகத்தையும் காண முடியவில்லை. கலியாணவீட்டை கொழும்பில் செய்யாதது தமக்கும் சரியான கவலை என்று சொன்னார்கள். இப்ப எங்களை கலியாண வீட்டுக்குக் கனடாவுக்கு வரட்டாம். அதுவும் கனடாக்காரன் விசா தந்தால்தானே போக லாம் என்று சொன்னார்கள்.

"உங்களின்ரை பிள்ளைகள் கனகாலம் அங்கு இருப்பதாலும், உங்களுக்கு இங்கை பிசினெஸ் இருப்பதாலும் எப்படியும் உங்களுக்குத் தருவார்கள். நீங்களாவது அங்கு போய் கலியாணவீட்டை எங்கள் சார்பாகவும் நின்று வடிவாய் நடத்திப் போடுங்கோ" என்று உணர்ச்சி ததும்ப அமலாவின் அப்பா நடா சொன்னார். "ஏன் நீங்களும் வரலாம் தானே" என்று சுதாகர னின் அப்பா சொல்ல அமலா இடைமறித்து "இல்லை மாமா அவைக்கு இலேசிலை விசா கொடுக்க மாட்டாங்கள். இரண்டு பேரும் ஓய்வு பெற்றவை. போனால் வரமாட்டினம் என்று நினைத்து றிஜெக் பண்ணிப் போடுவாங்கள். அதோடை நான் இங்கை இல்லாமல் அப்பாவும், அம்மாவும் கன காலம் இங்கை என்னைப் பிரிந்து இருக்க மாட்டினம். நாங்கள் எப்படியும் இவையை நிரந்தரமாகக்கனடாவுக்கு கூப்பிட வேணும். இப்ப அந்திரப்பட்டு அப்பிளை பண்ண எல்லாம் பிழைச்சுப் போடும். அதுதான் மாமா நான் யோசிக்கிறன் " என்றாள்.

"நீ சொல்றது சரி பிள்ளை. எல்லாத்தையும் யோசிக்கத்தானே வேணும்". என்றார் சுதாகரனின் அப்பா. "எங்களுக்கு இங்கையிருக்கிற பிசினஸ் ஆல் அங்கை நிரந்தரமாக போக முடியாது. இவையென் றாலும் அங்கை உங்களிட்டை வந்தினம் என்றால் எங்களுக்கும் சந்தோஷம். சரி அப்ப நாங்கள் போட்டு வாறம். நீ ஒன்றுக்கும் யோசியாமல் போட்டு வா பிள்ளை. அவங்கள் எல்லாம் வடிவாய்ச் செய்வாங்கள்" என்று சொல்லி வெளிக் கிடத் தயாரானார். நடா அமலாவை "பிள்ளை மாமா மாமியின்ரை காலில் விழுந்து ஆசி பெற்றுக்கொள்" என்று சொல்ல அமலா மாமா, மாமியின் காலில் தொட்டு ஆசி பெற்றுக் கொண்டாள். அமல- ாவை சுதாகரனின் அம்மா கட்டித் தழுவி முத்தமிட்டா. அமலாவின் மனதில் "கடவுள் கிருபையால் நல்ல மாமா, மாமி கிடைத்திருக்கினம் போல இருக்குது. கடவுளே மிக்க நன்றி " என்று சொல்லிக் கொண்டாள். கண்கள் கலங்க அமலாவின் மாமாவும், மாமியும் விடைபெற்றுச் சென்றார்கள். யாவும் கற்பனை

(தொடரும்.....)




- அகணி -

akanisuresh@gmail.com


MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு
• வாகன விபத்து
• மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

Cough, Flu, Depression, Anxiety, Asthma
Tonsillitis, Gout, Arthritis, P.M.S, Leucorrhea
Migraines, Hair Loss, Diabetes, Cystitis, Cancer
Prostatitis, Obesity, Hemorrhoids, Stumatitis, Colitis

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# கண்புரை - பார்வையிழப்புக்கான பிரதான காரணி

## Catracts

உலக அளவில் பார்வையிழப்பிற்கு முக்கியமான காரணமாக இருப்பது கண்புரை எனப்படும் கட்டராக் (Cataract) பிரச்சினையாகும். கண்ணில் பூப்படர்தல் எனவும், வெள்ளை படர்தல் எனவும் சாதாரணமக்கள் கூறுவர். கட்டராக் என்பது ஒரு இலத்தீன் வார்த்தையாகும். பொதுவாக இச் சொல்லுக்கு நீர் வீழ்ச்சி எனவும் கருத்து உண்டு. கண்புரை கண்களில் தெளிவற்ற, கலங்கலான பார்வையைக் குறிக்கிறது. கண் மருந்துத்துவர்கள் கண் புரை இருக்கிறது என சொல்லிவிட்டால் பெரியவர்கள் அய்யய்யோ கண்புரையா? வயதும் போட்டுது...இனிமேல் நான் இருக்கிற நாளை எப்படி தள்ளப் போகிறேன்....? என கவலைப்பட்டு முடங்கிப் போய்விடுவார்கள். இதற்கு தற்போது எதுவித பயமும் கொள்ள தேவையில்லை. 'கண் புரையை எளிதாக ஒரு சத்திரசிகிச்சை மூலம் மாற்றிவிட முடியும். பாதிக்கப் பட்டவர்கள் வழக்கமான நல்ல வாழ்க்கையை வாழ முடியும்...' என்று வைத்தியர்கள் கூறுகின்றனர்.

2.5 மில்லியன் கனடியர்கள் இக்கண்புரை நோய்க்கு உட்பட்டுள்ளனர். ஆனால் உலகில் பார்வையிழப்பு என்னும் பெரும் சுமையை தாங்கிக் கொண்டிருப்பது இந்தியாவாகும். உலகின் ஒவ்வொரு அல்லது நான்காவது பார்வையிழந்த நபராக இருப்பவர் ஒரு இந்தியராகும். கண்புரை என்பது வயதுக்கு ஏற்றவாறு முதுமை அடையும்போது கண்ணில் உள்ள விழிவில்லை ஒளிக்கதிர்கள் ஊடுருவும் தன்மையை இழக்கும் நிலையை அல்லது ஒளிக்கதிர்களை உள்ளே அனுப்பமுடியாத நிலையை அடைவதாகும். பொதுவாக பார்க்கும் பொருட்களிலிருந்து வரும் ஒளிக் கதிர்கள் கண்ணின் முன்புறம் உள்ள விழிவெண்படலத்தில் குவிந்து அதனை தொடர்ந்து இருக்கும் விழிவில்லை ஊடுருவிச் சென்று கண்ணுக்குள்ளே பயணித்து விழித்திரை (Retina) யில் பதிவாகிறது. இவ்வாறு நடைபெறாதவிடத்து கண்புரை ஏற்படுகிறது. கண்புரை மிகவும் சிறிய அளவில் அடையாளம் கண்டு பிடிக்க முடியாதபடி தான் உருவாகிறது. கொஞ்சம் கொஞ்சம் இது வளர்ந்த பார்வையை மறைக்கிறது. நாம் பழுதடைந்த கார் கண்ணாடியூடாக பார்ப்பது போல் பார்வை மங்கலாகவே தெரியும். இதனை வாகனம் ஓட்டும்போதும், தொலைக்காட்சி பார்க்கும் போதும், வாசிக்கும்போதும் உணரமுடியும்.

இவரோடு 19 பேர் போட்டி போட்டனர். இங்கு மொத்த வாக்களித்த மக்களின் எண்ணிக்கை 7,826. இதில் நீதன் சாண் பெற்ற வாக்குகள் 4,197 ஆகும். இது மொத்த வாக்குகளின் 53.63 வீதம் ஆகும். சீன மக்கள் அதிகம் உள்ள இந்த தொகுதியில் போட்டி போட்ட இரண்டாம் வெற்றியாளர் பெற்ற வாக்குகள் 1,258. அதிக பெரும்பான்மை வாக்குகளை வென்ற நீதனின் வெற்றி அமோக வெற்றியாக பார்க்கப்படுவதோடு அனைத்து மக்களாலும் வரவேற்கப்படுவதாகவும் அமைந்துள்ளது. இந்த தொகுதிக்கும் தேர்தலுக்கும் கல்விசபை உறுப்பினர் பதவிக்கும் நீதன் புதியவர் அல்லர். இன்று தனக்கான சாதனைப் பயணத்தில் ஒரு வெற்றித் தளத்தை கைப்பற்றி இருக்கும் நீதன் பல




இளையவர்களுக்கு ஒரு முன் மாதிரியான முயற்சியாளர்.

நீதன் ரொறொன்ரோ பல்கலைக் கழகத்திதில் B.Sc. Hons., Ed. மற்றும் M.Ed. பட்டங்களைப் பெற்றவராவர். இவர் மனைவி மற்றும் இரு பிள்ளைகளுடன் ஸ்காபரோவில் வாழ்ந்து வருகிறார்.




# அனுஷ்காவுடன்...

21ஆம் பக்கத்தொடர்ச்சி

அனுபவத்தை, புதிய பார்வையைக் கொடுத்தது. நம்மிடம் பிச்சைக் கேட்கிறவர் களையும், பணம் இல்லாதவர்களையும் தான் பொதுவாக நாம் பிச்சைக்காரர்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம்.



அது உண்மையில்லை. பிச்சைக்காரர்கள் என்பது ஒரு தனி வர்க்கமோ சாதியோ இல்லை. பெற்றோர்களால் கைவிடப்பட்ட பிள்ளைகளும், பிள்ளைகளால் கைவிடப் பட்ட பெற்றோர்களும், மருமகள்களால் கொடுமைப்படுத்தப்பட்டு விரப்பட்ட மாமி யார்களும், உறவினர்களால் ஏமாற்றப்பட்டு நிர்க்கதியாக நிற்கிறவர்களும் வேறு வழியி ல்லாமல் பிச்சை எடுக்கிறார்கள். நாளைக்கே, எனக்கு இசைத் துறையில் நடிப்பில் வேலை இல்லாமல் போனால்... குடும்பமும் சமூகமும் என்னைக் கைவிட்டால்... நானும் பிச்சைக்காரன்தான்.

சாலையோரங்களில் நின்று ஒரு ரூபாய் பிச்சை எடுக்கிறவர்களைக் கேவலமாக பார்க்கும் என் பார்வையை இந்தப் படத்தில் நடித்தவர்கள் மாற்றிவிட்டார்கள். அவர்கள் அடிப்படைத் தேவைக்காக பணம் கேட்டு நம் உதவியை நாடுகிறார்கள். அதுபோல் நாம் எல்லோரும்கூட ஏதோ ஒரு தேவைக்கு அடுத்தவர்களின் உதவியை நாடிக்கொண்டு தான் இருக்கிறோம். நானாக இருக்கட்டும், நீங்களாக இருக்கட்டும், அம்பானியாக இருக்கட்டும் பிச்சை எடுக்கிற பொருட்கள் தான் வேறுவேறு.

**- சிவதாணு -**

தொடர்ச்சி 37ஆம் பக்கம்



## Math tutorial 316

Answers to tutorial 315

1)There are no solutions, since logarithms are only defined for a base greater than one and for a number greater than 0 .

2)$\text{Log}_2(\log_3 a)=2$ in exponential form $\log_3 a=2^2$

$a=3^4=81$

3)$_{P}H$ =-Log $[H^+]$ ,for this liquid, $p^H$ =-LOG$[8.7X10^{-6}]$ =-(Log8.7 +log $10^{-6}$) =- (log 8.7-6) =6-log 8.7 =6-0.9395 =5.06

4)Given $\bar{a}$=4i-3j +k =(4,-3, 1) ,vector parallel to the xy plane has the form$\bar{u}$ =(p ,q ,0) since $\bar{a}$ is perpendicular to$\bar{u}$ ,$\bar{a}.\bar{u}$ =0 ,therefore 4p-3q =0 choosing p=3 and q=4gives vector $\bar{u}$ =( 3, 4 ,0) which is perpendicular to $\bar{a}$ now

$|\bar{u}| =\sqrt{(9+16)}=5$, Req. Unit vector is (3/5 ,4/5,0)

5) There are $2^{10}$=1024 answer sheets

Tutorial 316 Questions

1)A mathematics contest has 7 questions, each with 4 possible answers A,B,C,D.As well as a student may choose not to answer anybv particular question . If 30000 stu Adents enter the contest ,is it possible every answer sheet is different? Explain (gr 12)

2)A computer password must have8 symbols.This can be either upper-or lower caseletters or digits from 0 to 9 and any symbol can be used repetedly (a) How many passwords can be formed ?

b)How many passwords can be formed that have atleast one 99?(gr12)

3) If$\bar{a}$ =(1, 3, -1) ,$\bar{b}$ =(2,1,5), $\bar{v}$=(-3,y,z),and $\bar{a}x\bar{v}=\bar{b}, find y and z?$(gr12)

By Mr S.F.Xavier(Teacher)

tel 6473409490/4167322228

# பேராசை - கற்பனை கலந்த உண்மைக்கதை

## அலசல் அரங்கம் - 3

### பேராசை தொடர்ச்சி...

ஒழுங்குகள் யாவும் செய்யப்பட்டு போகின்ற நாளும் தீர்மானிக்கப்பட்டது. புறப்படும் நாள் நெருங்க மனிசிக்கு ஒரே பதட்டமாக இருந்தது. பிள்ளைகளுக்கோ ஒரே சந்தோஷம். என்றாலும் என்னை விட்டுப் போவது அவை எல்லோருக்கும் கவலையாக இருந்தது. மனிசி சொன்னா நீங்கள் யாழ்ப்பாணம் போகாமல் கொழும்பிலையே இருங்கோ. அங்கை போனா என்ன நடக்குமெண்டும் தெரியாது. அத்துடன் உங்களுக்கு உதவி செய்த முதலாளியோடு கதைச்சு அவரிடை கடையிலையே இருந்துகொண்டு ஏதாவது வியாபாரம் அல்லது எங்காவது கடையிலை வேலை செய்யலாம் தானே என்றார். எனக்கும் அது நல்ல யோசனையாகப்பட்டது. எதுக்கும் நீங்கள் சுகமாகப் போட்டு எனக்கு அறிவியுங்கோ, நானும் இங்கை நிற்கப் பார்க்கிறேன் என்றேன்.

போவதற்கு முதல் நாள் இராத்திரி மனிசிக்கு ஒரே அழுகை. நித்திரை இல்லாமல் என்னைக் கட்டிக்கொண்டே அழுதா. எனக்கும் ஒரே கவலையாய்ப் போச்சு. ஏதோ எல்லாம் சொல்லி சமாதானப்படுத்தினேன். நீ நம்பின கடவுள் கைவிட மாட்டார். நீங்கள் எல்லோரும் சுகமாய்ப் போய் இறங்கினால் தான் நானும் கெதியாய் அங்கு வரலாம். எல்லாம் உம்முடைய கெட்டித்தனத்தில்தான் இருக்குது. உன்னைக்கூட்டிக் கொண்டு போறவரோடு கதைச்சனான். அவர் உங்களுக்கு வேண்டிய உதவி செய்வார். ஏற்கனவே நீங்கள் போய் தங்குவதற்கு ஒரு அப்பாட்மென்ற் ஒழுங்கு செய்து போட்டார். அவற்றை வீட்டக்கிக் கிட்ட இருக்கென்றார். அவரைப் பார்த்தால் நல்ல மனிசன் போல் இருக்கிறது என்று மனுசியை உசார்படுத்தினேன். அடுத்த நாள் மத்தியானம் ஒரு மணிக்கு விமானம் புறப்பட இருந்தது. நாங்கள் காலையிலே எழுந்து விமான நிலையம் போய் அனுப்பிவிட்டு வந்தேன். ஒரே கவலையாக இருந்தது. மனிசியிடமிருந்து பதில் கிடைக்கும் வரை ஒரே அந்தரமாக இருந்தது. இதற்கிடையில் ஒரு கைபேசி அவர்கள் போவதற்கு முன்னரே வாங்கி வைத்திருந்தேன். எப்போது தகவல் வரும் என எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். மூன்றாம் நாள் மனிசியும் பிள்ளைகளும் தொரன்ரோவில் இருந்து தாங்கள் சுகமாய் போய் சேர்ந்துவிட்டதாகப் பேசினார்கள். எனக்கு ஒரே சந்தோசமும், கவலையுமாக இருந்தது. வசதியான நேரங்களில் என்னோடு தொலைபேசி யில் கதைப்பதாக மனிசி சொன்னார். இதன் பின்னர் கொழும்பிலேயே தங்கியிருந்து தரகர் வேலையில் ஈடுபட்டேன். மனிசியின் யோசயையை நினைத்து சந்தோசப்பட்டேன்.

நாட்கள் மாதங்களாயின. எங்களது நல்ல காலமோ அல்லது கடவுள் கிருபையோ தெரியவில்லை, ஒன்பது மாதங்களில் மனைவிக்கும், பிள்ளைகளுக்கும் நிரந்தர வதிவிட உரிமை (லாண்டட் பேப்பர்) கிடைத்தது. பிள்ளைகள் நன்கு படித்துக் கொண்டிருந்தனர். மனிசியும் நிரந்தர வேலைக்கு ஒழுங்காக போய்க் கொண்டிருந்தார். இது எனக்கே ஆச்சரியமாக இருந்தது. இவவுக்கு இவ்வளவு துணிச்சலும் வீரமும் எங்கிருந்து வந்தது என ஆச்சரியப்பட்டேன். எமது பெண்களுக்கு உரிய வாய்ப்புக்கள் கிடைத்தால் அவர்கள் நல்லாய் முன்னுக்கு வருவார்கள் என்பதற்கு என் மனைவி நல்ல உதாரணம். பிள்ளைகளும் தானும் என்னை காண இருப்பதாகவும், எனக்கு தான் ஸ்பொன்சர் விண்ணப்பம் அனுப்பி விட்டதாகவும் ஒருநாள் போனில் கூறினார். எனக்கும் அவர்கள் இல்லாமல் ஒரே கவலையாய் தான் இருந்தது. வேலையோடு ஈடபட்டிருந்த தால் பகல்பொழுது போவதே தெரியாது. இரவில் அல்லது காலையில் மனிசியும் பிள்ளைகளும் கதைப்பார்கள். எனக்க நான்கு மாதங்களின் பின்னர் இன்டர்வியூ வுக்கு வரும்படி கூப்பிட்டார்கள். எனக்குத் தெரிந்த இங்கிலீசு நல்லாய்க் கதைக்கக் கூடிய அரசாங்க உத்தியோகத்தரையும் கூட்டிக்கொண்டு கனடா ஹைக்கொமிசனுக்குப் போனேன். சில கேள்விகள் கேட்டார் ஒரு பெண்மணி. எனக்கு ஒரு பொலிஸ் பிரச்சனையோ ஒன்றும் இல்லாதபடியாலும், எனது கடை காணி போனதற்கு பொலிஸ் பத்திரங்கள் இருந்தபடியாலும் எனக்குக் கடிதம் அனுப்புவதாகக் கூறினார். ஏறக்குறைய இருமாதமளவில் என்னை மெடிகல் பரிசோதனைக்கு போகும்படி கடிதம் வந்தது. இதை மனிசிக்கும் பிள்ளைகளுக்கும் தொலைபேசி யில் கூறினேன். அவர்களுக்கு மிகவும் சந்தோசம்.

அம்பலவானர் கோவிலுக்குபோய் ஒரு அபிஷேகம் செய்யயும்படி மனிசி சொன்னார். எல்லாம் அவன் செயல் - விண்ணப்பம் அனுப்பியும் வருடக் கணக்காக காத்திருப்பவர்களை நான் அறிவேன்.

இதற்கிடையில் வடபகுதியில் நிலைமை மோசமாகியது. சகோதரி அடிக்கடி அங்கிருக்க முடியாத நிலையைக் கூறி அழுதாள். கடைசியல் கையிலிருந்த காசை அனுப்பி எல்லோரையும் தமிழ் நாட்டுக்கு போகும்படி சொன்னேன். எனது மச்சானுக்கு தெரிந்த ஒருவர் மூலம் களவாக இந்தியா சென்றனர். மிகவும் ஆபத்தான பிரயாணம். இடையில் ஒரு தீவில் தங்கி - பல நாட்களின் பின் மதுரைக்கு போய் சேர்ந்தனர். எனக்கு ஒரே சந்தோஷம். இதற்கிடையில் உறவினர் பலரும் தங்களையும் கனடாவுக்கு அல்லது தமது மகன்மாரையாவது அனுப்ப உதவுமாறு தொலைபேசியில் கதைத்தார்கள். இதுபற்றி எனது ஏஜென்சிக்காரரோடு கதைத்து ஓரிருவரை அனுப்பி வைத்தேன். இதனால் ஊரில் என்னைப்பற்றியே பலரும் பேசினார்கள். முன் பின் அறியாத பலர் என்னை தொடர்பு கொண்டனர். இதனால் எனது தொலைபேசி எண்ணை மாற்றவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

எனது மெடிகல் ஏற்றுக்கொள்ளப்பட்டு, விசா எடுப்பதற்கு வேண்டிய பிரயாண பத்திரங்களுடன் வரும்படி கடிதம் வந்தது. மெடிகல் செய்தவுடன் பாஸ்போட்டுக்கு விண்ணப்பித்து அதுவும் கிடைத்து விட்டது. எனவே விமானச்சீட்டு வாங்கி பிரயாண நாளும் நிச்சயமாகியது. எனக்கு பல வழிகளிலும் உதவிய எனது முதலாளியை வாழ்நாள் முழுவதும் என்னால் மறக்க முடியாது. அவர் இதுவரைக்கும் என்னிடம் ஒரு உதவியும் கேட்டது கிடையாது. புறப்படுவது பற்றி அவருக்கு மட்டும் ஒரு வாரங்களுக்கு முன் கூறி, ஏதாவது தேவையானால் கேட்கும்படி சொன்னேன். அவர் தேவையானல் டேப்பதாகவும், எனது விலாசத்தையும், தொலைபேசியையும் கேட்டார். நெருங்கிய சிலருக்கு மட்டும் நான் கனடாவுக்கு செல்வதைச் சொல்லி இருந்தேன். புறப்படும் நாள் காலை முதலாளியை சந்தித்தேன். கண்ணீர் வழிய அவரிடமிருந்து விடைபெற்றேன். அவரும் "நல்லாய் இருப்பாய்" என ஆசி கூறி அனுப்பினார். அவரைக் கடவுளின் பிரதிநிதியாகவே பார்க்கிறேன். வாழ்க்கையின் சில சம்பவங்கள் இறைவனின் செயலால் நடைபெறுகின்றன என நம்புபவன் நான். கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்பதில் எனக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை.

தொரன்ரோ விமான நிலையத்தில் மனைவியையும் பிள்ளைகளையும் பார்த்து ஆச்சரியப்பட்டேன். உடை நடை பாவனைகளில் எல்லோரும் மாறி இருந்தனர். இரண்டு வருடங்களில் எவ்வளவு மாற்றம். நம்பமுடியவில்லை. பிள்ளைகள் நன்கு ஆங்கிலம் பேசினார்கள். மனைவியும் ஆங்கிலத்தில் சமாளிக்கும் அளவுக்கு முன்னேறி இருந்தா. எல்லோரும் வீடு சென்று பல விடயங்கள் பற்றிப் பேசினோம். இரண்டு வருட விடயங்கள் நிறையப் பேசுவதற்கு இருந்தன. தனது பெற்றோர் உறவினர்கள் பற்றி மனைவி யாவும் விபரமாக கேட்டுக் கொண்டிருந்தா. பிரயாணக் களைப்பில் நான் சாப்பிட்டு விட்டு உறங்க சென்றேன்.

**- துறையூரான் -**

கனடா வாழ்க்கை கடுகெதியாகப் போய்க்கொண்டிருந்தது. தனது வேலை செய்யும் நண்பர்கள் மூலம் மனைவி எனக்கும் ஒரு அச்சுக்கூடத்தில் வேலை எடுத்து தந்தா. ஓரளவுக்கு சுலபமான வேலை. அச்சடித்து வரும் பேப்பர்களை கட்டுக்களாகக் கட்டி அடுக்க வேண்டும். பின்னர் அக்கட்டுக்களை ஒருவர் சிறு பாரந்தூக்கியின் (FORK LIFT) உதவியுடன் பெரிய லொறிகளில் ஏற்றுவார். எம்மில் சிலர் அவற்றை லொறிக்குள் ஏறி ஒழுங்காக அடுக்கி வைப்போம். லொறிகள் இவற்றை பல்வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லும். இவ்வாறு நாட்கள் ஓடிக் கொண்டிருந்தன. கையில் பணமும் சேரத் தொடங்கியது. அத்தோடு எனது சகோதரியின் நச்சரிப்பு அடிக்கடி தொலைபேசியில் அதிகரிக்க தொடங்கியது. அதாவது தனது கணவரை, எனத மைத்துனரை கனடாவுக்கு கூப்பிடும்படி அடிக்கடி கேட்டுக் கொண்டிருந்தாள். எனது மனைவியோடு இதைப்பற்றிக் கதைத்தேன். அப்போது ஒருவரைக் களவாகக் கூட்டி வருவதற்கு 30 ஆயிரம் டொலர்கள் கேட்டார்கள். மைத்துனரிடம் பணம் இருக்க வில்லை. மதுரையிலும் ஒழுங்கான வேலையில்லை. ஏதோ நாங்களும் இடைக்கிடையில் அனுப்பும் பணத்தை வைத்துச் சமாளித்துக் கொண்டிருந்தனர். ஒரு நாள் இதைப்பற்றிக் கதைத்துக் கொண்டிருக்கும் போது தான் அவரைப் போய்க் கூட்டிக் கொண்டு வந்தால் பணம் அதிகம் செலவாகாது என்றார் என் மனைவி. எனக்கு ஆச்சரியமாக இருந்தது. நான் அந்த யோசனையை விட்டுவிடும்படி சொன்னேன். பின்னு விசாரித்த போது அவ்வாறு எங்கள் ஆட்கள் சிலர் செய்திருப்பதை அறிந்தேன். மனைவியைக் கூட்டிக்கொண்டு வந்தவரிடம் எங்கள் விஷயத்தை நேரடியாகக் கூறாமல், இப்படிச் செய்தால் என்ன, எனது நண்பர் ஒருவர் கேட்கிறார் என்றேன். அவர் சென்னையில் விமான நிலையத்தில் பிரச்சனை இல்லாவிட்டால் சுலபமாக வந்துவிடலாமென்றார். இதுபற்றி மேலும் விசாரித்தேன். பல தகவல்களைப் பெற்றேன். கடைசியல் மனைவியும் மூத்த பையனும் விடுதலையின் போது, அதாவது ஜுன், ஜுலையில் இந்தியா

தொடர்ச்சி 36ஆம் பக்கம்




# EDUCATION

## Review Questions16-03

### CHEMISTRY IB


An aqueous solution contains $XO_3^{2-}$ ions form a precipitate with aqueous $Ca^{2+}$ ions when 25mL of a solution aqueous ions with a concentration 0.78mol/L is added. The mass of the precipitate formed is 1.96g

(i) Write chemical equation to show the formation of the precipitate formed.


(ii) Determine the number moles of $Ca^{2+}$ present in the solution

(iii) Determine the atomic mass of X and indentify the element.

(iv)Write the IUPAC name of the following




(v) Give reaction conditions





### PHYSICS 12

A 500 kg solid iron ball is suspended by a rope from a crane at a building site. The distance from the point of suspension to the centre of mass of the ball is 20 m.

(a) Calculate the tension in the rope when the ball hangs vertical and stationary.

(b) The ball is pulled back 30° from the vertical and then released.




(i) Calculate the speed of the ball just before impact.

(ii) Calculate the tension in the rope just before impact

### CALCULUS & VECTORS 12

**Find the limits**

(i) $\lim_{x\to 0}\dfrac{ax^2+bx+c}{cx^2+bx+a}$ (ii) $\lim_{h\to -4}\left(\dfrac{\frac{1}{4}+\frac{1}{h}}{4+h}\right)$

(iii) $\lim_{x\to 1}\frac{x^6-1}{x^{10}-1}$ (iv) $\lim_{x\to 2}\frac{x+2}{x^3+8}$

(v) $\lim_{x\to -3}\left(\dfrac{3x^3-4x+3x^2-12}{x^2-9}\right)$

**Differentiate the following.**

(i) $\sqrt{\frac{1+x^3}{1-x^3}}$ (ii) $\sqrt{1+x^2}.\,sin^3\sqrt{x}$

### BIOLOGY IB

Heart rate of person decreases as his/ her fitness increases. Give a reason. How do you compare heart rate and blood flow of a person when at rest and during exercise

## Answer Key : 16-02

### CHEMISTRY 12 IB

$CH_3COONa(aq) + NH_4Cl(aq) \rightleftharpoons CH_3COONH_4(aq) + NaCl(aq)$

$CH_3COO^-(aq) + NH_4^+(aq) \rightleftharpoons CH_3COOH(aq) + NH_3(aq)$

$$K=\frac{[CH_3COOH][NH_3]}{[CH_3COO^-][NH_4^+]}$$

$CH_3COO^-(aq) + H_2O(l) \rightleftharpoons CH_3COOH(aq) + OH^-(aq)$

$$K_b=\frac{[CH_3COOH][OH^-]}{[CH_3COO^-]}=\frac{K_w}{K_a}=5.56\times10^{-10}$$

$NH_4^+(aq) + H_2O(l) \rightleftharpoons NH_3(aq) + H_3O^+$

$$K_a=\frac{[NH_3][H_3O^+]}{[NH_4^+]}=\frac{K_w}{K_b}=5.56\times10^{-10}$$

$$K_w=[H^+][OH^-]=1\times10^{-14}$$

$$K=\frac{K_{a\,(CH_3COO^-)}K_{b\,(NH_3)}}{K_w}=3.1\times10^{-5}$$


Answer key
16-03 - next issue
☎ 647 341 3975
Dr. K.A. Srikrishnaraj
KEEN TUTORING CENTRE


# பேராசை...

35ஆம் பக்கத்தொடர்ச்சி

போவதாகத் தீர்மானிக்கப்பட்டது. எனது சகோதரி குடும்பத்தை பார்க்க அவர்கள் போனார்கள். இரு வாரங்களின் பின் எனத மைத்துனர் அவர்களோடு வந்து தொரன்ரோ விமான நிலையத்தில் அகதி அந்தஸ்து கோரினார். கடவுள் கிருபையால் யாவும் பிரச்சனை இல்லாமல் முடிந்தது. எல்லோருக்கும் ஒரே சந்தோஷம். இந்த விஷயத்தை நாங்கள் ஒருவரிடமும் கூறவில்லை. எனது மைத்துனர், மிசிசாகாவ-ில் ஒரு வீட்டு பேஸ்மென்ரில் தங்குவதற்கு ஒழுங்குகள் செய்தோம். அவரும் ஒருவாறு சமாளிக்கப் பழகிவிட்டார். கோடைகாலம் என்பதால் அவரக்கு காலநிலை பிரச்சனையாக இருக்கவில்லை. தான் உழைத்து எங்களுக்குப் பணம் தருவதாகக் கூறினார்.

எங்கள் வாழ்க்கையும் சந்தோசமாகப் போய்க் கொண்டிருந்தது. ஊரில் உள்ளவர் களுக்கும் பணம் அனுப்பி உதவி செய்தோம். மனைவியும் விரைவாக பணம் உழைக்க வேண்டுமென்று ஆசைப்பட்டார். ஊரிலுள்ள தனது தமையனாரை இங்பு கூட்டிவர ஆசைப்பட்டார். நான் அது ஆபத்தானது அந்த வேலை வேண்டாமென கூறினேன். இதற்கிடையில் எனது நண்பர் ஒருவர் தனது தம்பி சென்னையில் இருப்பதாகவும் அவரைக் கூட்டி வருவதற்கு உதவினால் முதலில் 15 ஆயிரம் டொலர் தருவதாகவும் மிகுதி வந்தபின் தருவதாக வும் கூறினார். நான் இன்னுமொருவரோடு ஒழுங்கு செய்ய முயற்சிப்பதாகக் கூறினேன். மனைவிக்குத்தான் இதைச் சுலபமாகச் செய்யலாமென ஆசை ஏற்பட்டது. எனவே யாருக்கும் சொல்லாமல் அவர் இருவார லீவில் சென்னை சென்றார். நானும் பிள்ளைகளும் இங்கு இருந்தோம். லீவு நாட்களாய் இருந்ததால் பிள்ளைகளைப் பார்ப்பதில் சிரமம் இருக்கவில்லை.

ஏனெனில் எனக்கு இரவில் தான் வேலை. பிறபகல் ஆறு மணிக்கு போய் காலை ஆறு மணிக்கு வந்துவிடுவேன். பகலில் சமைப்பது அல்லது கடையில் வாங்குவது வாடிக்கை யாக இருந்தது. சென்னையிலிருந்து மனைவி நாள்தோறும் கதைப்பா. ஒழுங்குகள் செய்து கொண்டிருப்பதாகக் கூறினார். குறிப்பிட்ட நாள் சென்னை விமான நிலையத்தில் அந்தப் பைனில் ஜமிச்சங் கொண்ட நிலைய அதிகாரிகள் அவனை அழைத்து விசாரித்ததில் அவன் விஷயத்தைப் பயந்து கூறிவிட்டான். உடனே மனைவியையும் அவனையும் விசாரிக்கத் தொடங்கினார். பையனை அடுத்த நாள் வெளியே விட்டனர். ஆனால் மனைவியை தடுப்புக்காவலில் வைத்தனர். இதைக்கேள்விப்பட்டு நானும் பிள்ளைகளும் செய்வறியாது தவித்தோம். எனது மைத்துனரோடு கதைத்து மதுரையிலிருந்த ஒரு முக்கிய அரசியல் பிரமுகரைப் பிடித்து ஏராளமான பணம் செலவு செய்தோம். கடைசியில் இரண்டு ஆண்டுகள் மனைவி யை சிறையிலடைத்தார்கள். "சாண் ஏற முழம் சறுக்கியது. இங்கு நானும் பிள்ளைகளும் கஷ்டப்பட அங்கு மனைவி சிறையில் வாடினாள். பிள்ளைகளுக்கும் ஒரே மன வேதனை. நண்பர்களிடம் அவர் ஊருக்கு பெற்றோரைப் பார்க்கப்போய் விட்டதாக கூறினோம். பிள்ளைகள் பள்ளி யில் திறமாகச் செய்ய முடியாமல் கஷ்டப் பட்டார்கள். ஒருநாள் இளையமகன் தவறுதலாக தாய் இந்தியாவில் சிறையில் இருப்பதாகக் கூறிவிட்டான். இதனால் வகுப்பாசிரியர் என்னைக் கூப்பிட்டு விசாரித் தார். பிள்ளைகள் இருவருக்கும் ஆலோசனை வழங்க ஒருவர் நியமிக்கப் பட்டார். வாழ்க்கை எனக்கு நரகமாகியது. முற்பணம் தந்தவர் பணங் கேட்டார். விமான சீட்டுக்கு இருவருக்கும் பிற செலவுகளுக்கும் அவர் தந்த பணம் செல-வாகியதால், என்னிடம் பணம் இருக்க வில்லை. இதற்கிடையில் மனைவியை பார்க்க போவதற்கும் எனக்குப் பயமாக இருந்தது. ஏனெனில் எனது பாஸ்போட்டில் தான் அந்தப்பையன் இங்கு வருவதற்கு ஏற்பாடாகி இருந்தது. அதனை அவர்கள் பறித்துவிட்டார்கள். எனக்கும் இன்னும் சிற்றிசன் கிடைக்கவில்லை. மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் சிற்றிசன் கிடைத்த பின் தான் அவர் இந்தியா பயணமானார். எனவே நாம் நினைத்தபடி எல்லாம் நடக்கும் என்று எதிர்பார்த்தது மூடத்தனம். பேராசையால் எமது குடும்பத்துக்கு எதிர்காலமே இருண்டு போனது.

இனி யாரை நோவது. எம்மை நாமே நோவதைத் தவிர.


MATH & PHYSICS TUTION

By a well-qualified and an experienced teacher. For all grades from Gr. 4 to 1st year of university.

Special classes in advanced functions, calculus & vectors and data management. Classes available at Scarborough & Stouffville.



Contact: 647 340 9490/ 416 732 2228



விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com / www.tamilvanakkam.com

# அனுஷ்காவுடன்...

21ஆம் பக்கத்தொடர்ச்சி

## உங்கள் இயக்குநர்களை எப்படித் தேர்ந்தெடுக்கிறீர்கள்?

நான் எப்பவுமே இயக்குநர்களைத் தேர்வு செய்வதில்லை. கதையைத் தான் தேர்வு செய்கிறேன். ஒரு ரசிகனாக மட்டுமே கதை கேட்பேன். என் படம் பார்ப்பவர்களை மக்களை மகிழ்விக்க வேண்டும் என்பது மட்டுமே என் எண்ணமாக இருக்கிறது.

பிச்சைக்காரன் படித்தின் இயக்குநர் சசி. இசையமைப்பாளராக உங்களை அறிமுகப் படுத்தினது இயக்குநர் சசிதான். இப்போது, அவரின் இயக்கத்தில் நடிக்கும் அனுபவம் எப்படியிருந்தது?

சசி சார் என்னை 'டிஷ்யூம்' படத்தில் இசை யமைப்பாளராக அறிமுகப்படுத்தினார். அந்த உரிமையில் வந்து கதை சொன்னார். நிறைய பிடித்திருந்தது. உடனே சரி என்று சொல்லிட்டேன். யாரும் நடிக்கத் தயங்கும் கதை + கதாபாத்திரத்தில் நடிக்க ஒப்புக் கொண்டதை நினைத்து, "நிறையவே சந்தோஷமாயிருக்கு' என்று சொல்லி குதூகலிச்சார் சசி சார்.

வெற்றிகரமாக இருந்த இசைத் துறையை விட்டுவிட்டு நடிப்பைத் தேர்ந்தெடுத்த பிறகு இசைப்பதைக் குறைத்துவிட்டீர்களே. அதுவும் உங்கள் படங்களுக்கு மட்டும் இசையமைக்கிறீர்கள். மீண்டும் மற்றவர்கள் படங்களுக்கு இசையமைப்பீர்களா?

நான் முதலில் ஒரு சவுண்ட் பொறியாளர் பிறகு இசையமைப்பாளரானேன். இப்போது நடிகராகியுள்ளேன். எப்போதுமே எனக்குப் பிடித்த விஷயங்களை செய்துகொண்டு இருக்க வேண்டுமென்றுதான் ஆசைப்படுவேன். அதுதான் என்னை இந்த இடத்துக்குக் கொண்டு வந்திருக்கிறது. நான் நடிக்கப் போறேன் என்று தெரிந்த நண்பர்கள் எல்லாருமே வேண்டாம் என்றுதான் அறிவுரை சொன்னார்கள். மனதுக்கு பிடித்ததை செய்ய வேண்டும் என்று தீர்மானித்துவிட்டால் யார் தடுத்தாலும் நிற்க முடியாது. அதற்கான தருணம் வந்தே தீரும். அப்படித்தான் நடிகரானேன்.



இசை போலவே நடிப்புத் துறையும் ஒரு போராட்டம்தான். இதில் இப்போது நான் வெற்றிபெறுவதற்காக போராடிக் கொண்டிருக்கிறேன். நிச்சயம் ஒருநாள் வெற்றிபெறுவேன். அந்த வேகத்தில் இருப்பதால் இசை மீதான கவனம் குறைந்திருக்கிறது. அதற்காக நான் நேசித்த இசைத்துறையை விட்டுவிடுவேன் என்று அர்த்தம் கிடையாது. வருஷத்துக்கு ஒரு படம் பண்ணுவேன். பிச்சைக்காரன் படத்தில் என் இசைக்கு நல்ல வரவேற்பு கிடைத்திருக்கிறது.

## ஏன் புதுமுக நாயகிகள் கூடவே நடிக்கிறீர்கள்?

நடிகனாக முன்னணிக்கு வந்த பிறகுதானே முன்னணி நடிகைகளிடம் வாய்ப்பு கேட்கமுடியும். அவர்களுக்கு என்னைப் பற்றி தெரிந்திருக்க வேண்டும். பிச்சைக்காரனுக்குப் பிறகு 'சைத்தான்'. அதிலும் புதுமுக நாயகிதான். நடிகனாக எனக்கென்று ஒரு பிம்பம் உருவாகட்டும். அதன்பிறகு போய் கேட்டுப் பார்ப்போம். நான் சேர்ந்து நடிக்கவேண்டுமென்று ஆசைப்படுற முன்னணி நடிகை அனுஷ்காதான். அவர்களை எனக்கு நிறையவே பிடிக்கும். என் கனவுக் கன்னி.

## உங்கள் நிஜ நாயகி மனைவி பற்றி...

எனது மனைவி ஃபாத்திமாவை சந்தித்ததுதான் என் வாழ்வையே மாற்றியமைத்த நிகழ்வு. வாழ்க்கைத் துணை என்பது சந்ததியை பெருக்குகிற விஷயம் இல்லை. தன் துணையோடு சங்கடங்களையும் சந்தோஷங்களையும் பகிர்ந்துகொள்வது மிகப்பெரும் பலம். எல்லா வேலையும் முடித்துவிட்டு வீட்டுக்கு வரும்போது, நம் விஷயங்களைக் காதுகொடுத்து கேட்க ஒரு நட்பு இருக்கிறது என்றால், எதை வேண்டுமானாலும் சாதிக்கலாம். வாழ்க்கை முழுக்க அப்படியொரு நட்புக்கான இடத்தில் முதலும் முடிவுமாக என் தேர்வாக இருப்பது என் தோழி ஃபாத்திமாதான்.

ஃபாத்திமா எனக்கு ஒரு அம்மா மாதிரி. என்னை ஒரு குழந்தை மாதிரி பார்த்துக்கிறாங்க. அவர்களைத் திருமணம் செய்துகொண்ட பிறகுதான் தன்னம்பிக்கையோடு நடிகரா-கலாம் என்று முடிவு பண்ணினேன். இப்போது, நான் படம் தயாரிக்கிறேன், நடிக்கிறேன் என்றால் அதற்கு என் மனைவி கொடுத்த உணர்வுபூர்வமான ஆதரவுதான் முதல் காரணம். தயாரிப்பு நிர்வாகத்தை பார்த்துக்கொள்வதோடு குழந்தைகளையும் கவனித்துக்கொள்கிறார்கள்.

## உங்கள் படத்தில் அமைதியாக வந்து மிரட்டுகிறீர்கள்? நிஜத்தில் விஜய் ஆண்டனி எப்படி?

தொடர்ச்சி 42ஆம் பக்கம்




நகைச்சுவைத் தொடர் 325

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



சட்டம் தன் கடமையை செய்யும்.
“நித்தம் நித்தம் மாறுகின்ற தெத்தனையோ......
நெஞ்சில் நினைப்பதிலே நடப்பதுதான் எத்தனையோ..?”
எனும் வசனம் அடிக்கடி திரைப்படங்களில் கேட்டிருக்கிறோம்.
தேவை ஏற்படும்போது சட்டத்தை தன்கையில் அரசும் அரசு சார்ந்தவர்களும் எடுத்துக்கொள்கின்றனர்.

போர் முடிவடையும்போது பாதுகாப்பு என்ற பேரில் கைது செய்யப்பட்ட 72 வயது முதியவர் இன்றும் விடுதலையின்றி சிறையில்தான்.
அதேவேளையில் எமது மதம், எமது மொழியென கட்டுக்கடங்காது கொட்டமடித்த பௌத்த மதகுரு கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் இருக்கிறார்.



பழைய அரசியல் கையாட்களாகவும் எடுபிடிகளாகவும் பணத்திற்காக கொலை குத்தகைக்காரர்கள் பலர் கைது செய்யப்பட்டதுடன் தாம் தப்புவதற்காக மற்றவர்களை காட்டிக்கொடுத்து தாம் தப்ப நினைப்பவர்களும் திணறிக் கொண்டிருக்கின்றனர்.



ஆள் பாதி ஆடை பாதி என்பார்கள் பாடசாலைகளில் மாணவர்களுக்கு சீருடையை நடைமுறையில் கொணர்ந்தார்கள்.
இப்போ நாகரிக உலகில் ஒரே சொல்லில் சொல்வதானால் படுக்கையிலிருந்து எழுந்த உடுப்புடன்,
இரவில் படுக்கைக்கு அணியும் உடையுடன் பாத்றூம் சிலிப்பருடன் பிள்ளைகளை பாடசாலைக்கு கூட்டிச்செல்லும் பெற்றோர் பலர். அதனால் இங்கிலாந்தில் ஒரு பாடசாலையில் பெற்றோர் பாடசாலைக்கும், ஆசிரியர் சங்க நிகழ்வுகளுக்கும் குறிப்பிட்ட சில உடைகளுடன் செல்லத் தடை விதித்த செய்தியை படித்துக் காட்டிக்கொண்டிருந்தா ஐ பொட் அகிலாண்டேஸ்வரி.



செல்லம்மா வடிவா கேள் உனக்கும் சேர்த்துத்தான் நியூஸ் போட்டிருக்கிறாங்கள். வெளியிலை போகேக்கை அதற்கேற்ற உடுப்போடை போகவேணும். நைற்றியோடையும் வயது வித்தியாசம் பாக்காமல் வீட்டிலை போடுற உடுப்புகளோடையும் சொப்பிங் போறதை நிப்பாட்டு என கடுமையாக ஆத்திரத்துடன் சொன்னா ஆட்டிலறி அன்னம்மா. தமிழ் மரபு வாழ்க்கையென பல விடயத்தை நாங்கள் தான் மற்றவைக்கு எடுத்து சொல்ல வேணும் என சொல்ல..

ஐ பொட் அகிலாண்டேஸ்வரி யாருடனோ ரெலிபோனில் கதைத்து ஏதோ எழுதிக்கொண்டிருந்தா.....



யேஸ்..1 நிறைகுடம் 2 குத்துவிளக்கு திரி தேங்காய் எண்ணெய் தலை வாழையிலை 5 அல்லது 7 மாவிலை நெல்லு அல்லது பச்சை அரிசி முடித்தேங்காய் (நிகழ்சிகளைப் பொறுத்து 1 உடை தேங்காய் 3 வெத்திலை 3 பாக்கு 5 வாழைப்பழம் (ஒரு சீப்பு) தேசிக்காய் நிறப்பூக்கள் மஞ்சளில் பிடித்த பிள்ளையார் அறுகம்புல்லு விபூதி சந்தனம் குங்குமம் சந்தனச்சிமிழ் குங்குமச்சிமிழ் ஊதுபத்தி


நான்தான் எங்கடை தமிழ் லேடீஸ் அசோசியேசன் விழா அமைப்பாளர். அதுதான் உங்களிட்டை கேட்டு எழுதுறன். எனக்கு தமிழ் சம்பிரதாயம் தெரியாது. பட் ஐ ஆம் த ஓகனைசர் என்று பெருமூச்சு விட்டபடி எழுதினா ஐ பொட் அகிலாண்டேஸ்வரி.

தனக்கு படிப்பித்த சமய பாட ஆசிரியரிடம் கேட்டு எழுதிக் கொண்டிருந்தா. இடையிடை உலகரையும் பார்த்துக்கொண்டா.



மரக்கறி பூசைச்சாமான் விலை. ஏன் கனக்க மாவிலை. 3..4 மாவிலை வைச்சா காணாதோ என்று கேட்க, செக்கண்ட் புளோர் செல்லம்மா பாகுபலி படத்தில் அனுஸ்கா திரும்பியதுபோல் வெடுக்கென திரும்பி நல்ல விடயத்திற்கு 5 மாவிலை. அமங்கலத்திற்கு 3 மாவிலை என்று தெரியாதோ என்றதும் பூரண அமைதியானா செக்கண்ட்புளோர் செல்லம்மா.

உலகர் நினைத்துப் பார்த்தார் வேட்டியுடன் அகிம்சை போராட்டத்தை மகாத்மா காந்தி முன்னெடுத்து சென்றபோது ஆங்கிலேயர் அவரை அரை நிர்வாணப் பக்கிரி என்றனர்.



தமிழ் கலை கலாசாரம் சாதாரணமானதல்ல. காலம் காலமாக படித்தவரோ படிக்காதவரோ கலை கலாசாரத்தை பேணாதவர்கள் குறைவு.

இன்று உலக அரங்கில் தமிழர் விழாக்களுக்கு வேற்றினத்தவர் வேட்டியுடனும் சாறியுடனும் வருவது அவர்கள் வீடுசென்று உடுப்பு மாற்றுவதற்கிடையில் பேஸ்புக்கில் வந்துவிடுகிறது.
ஆனால் நாம் தான் காலத்திற்கு காலம் எம்மை மாற்றிக்கொண்டிருக்கிறோம்.



ஏமாறாதே ஏமாற்றாதே!
அரசியல் கட்சிகளிலும் பிளவு.
நாம் வளர்ந்த மண்ணிலும் பிளவு.

சர்வதேச ரீதியில் இயற்கையின் சீற்றத்தை கண்ணூடாக காணக்கூடியதாக இருக்கிறது. அதற்காக ஐரோப்பிய நாடுகளில் திட்டங்கள், கருத்தரங்குகள், செயல்திட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேளை வெள்ளை மாளிகைக்கு வெளியே வெள்ளைப்பனி.



தமிழ் நாட்டில் வெள்ளப்பிரச்சினை. அமெரிக்காவில் 9 மாகாணங்களில் பனிப்புயல்.
ஆங்காங்கே நிலஅதிர்ச்சி (அலெஸ்கா, ஸ்பெயின்)
எப்போ எங்கே நடக்குமென்று தெரியாதளவிற்கு பயங்கரவாத தாக்குதல்கள்.

ரொரன்ரோவில் நிமிடத்திற்கு நிமிடம் விபத்து, துப்பாக்கி சூடு.
யாழ்ப்பாணத்தில் நில அதிர்ச்சி. செய்திகள்

அரசியல் கட்சிகள் பிளவு படுவது போல யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் நிலம், அதன்மேலுள்ள வீடுகளில் வெடிப்புகள்.



ஞாபகம் இருக்கிறதா? பெப்ரவரி 1….15.

03. அறிஞர் அண்ணா சி.என். அண்ணாதுரை நினைவு தினம். தமிழகத்தின் 6 ஆவது முதலமைச்சர் (1909…1969)




04. ஈழத்து வில்லிசைக் கலைஞர் க.நா கணபதிப்பிள்ளை சின்னமணி நினைவுதினம். வில்லிசை வித்தகர், வில்லிசை கலைஞான ஜோதி என பல பட்டங்கள். (30 மார்ச் 1936 - 04 பெப்ரவரி 2015)

04. ஆங்கிலேய ஆட்சியிலிருந்து இலங்கை சுதந்திரமடைந்தது. (சுதந்திரம் எங்கே என மக்கள்…… இன்றுவரை கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்)




11. நாடக சர்க்கரவத்தி, நடிப்பிசை மன்னன், நாடக தீபம் கலாநிதி நடிகமணி வி.வி வைரமுத்து நினைவு தினம்.(அரிச்சந்திரா மயான காண்டம் நாடகத்தில் அரிச்சந்திரா பாத்திரமேற்று 3000 தடவைக்கு மேல் மேடையேற்றியவர். (நாடக ஒலிப்பதிவிற்காக கொழும்பு சென்றபொழுது மாரடைப்பால் இறந்தவர். (11 பெப்ரவரி 1911-08 யூலை 1989)



11. அடங்காத்தமிழன் சி.சுந்தரலிங்கம் நினைவு தினம். (19 ஒகஸ்ற் 1895-11 பெப்ரவரி 1985)

13. பிரபல திரைப்பட இயக்குனர் பாலு மகேந்திரா (பாலநாதன் மகேந்திரா, மட்டக்களப்பு இலங்கை, தமிழ்நாடு. (நினைவு நாள் 20 மே 1939 - 13 பெப்ரவரி 2014)



13. சர்வதேச வானொலி நாள்.

14. காதலர் தினம் (வலன்ரைன் டே)




15. பமிலி டே (family day)

## தமிழ்ப் புத்தகங்களைப் படிக்க மறுக்கும் இளைஞர்களுக்குத் தாங்கள் கூறும் கருத்து? - இறையன்பு பதில்

தாய்மொழியைப் பேச வாய்ப்பு இருக்கும்போது அதைக் கொண்டு புத்தகங்களை வாசிக்காமல் விடுவது நம் கையிலுள்ள வைரக்கல்லை காகித எடையாகப் பயன்படுத்துவதற்கு ஒப்பானது. நம் மொழியில் பயிலும்போது நம் பண்பாட்டுக் கூறுகளையும் நம்மையும் அறியாமல் உள்வாங்கிக் கொள்கிறோம். இரண்டு மொழிகளில் வாசிப்பவர்களின் நுண்ணறிவு அதிகப்படுவதாக ஆய்வு செய்து அறிஞர்கள் தெரிவிக்கிறார்கள். பேசத் தெரிந்த மொழியில் இலக்கியங்களை வாசிப்பது எளிது.

தமிழில் தலைச்சிறந்த இலக்கியங்களை வாசிக்கும் வாய்ப்பு இருந்தும் புறந்தள்ளுபவர்கள் கண்களால் மட்டுமே கனியை நுகர்பவர்களைப் போல துரதிஷ்டசாலிகள். எனக்குத் தெரிந்த ஒரு சிறுவன் அடிக்கடி ‘ஷிட்’ என்கிற பதத்தைப் பயன்படுத்தினான். அவன் பெற்றோர் எவ்வளவு சொல்லியும் அவனால் அந்தப் பதத்தைப் பயன்படுத்தாமல் இருக்கமுடியவில்லை. என்னிடம் அதைப் பற்றி வருத்தப்பட்டார்கள். ஒவ்வொருமுறையும் அவன் சொல்லும் போதும் அதற்கான தமிழ்ச் சொல்லை உரக்கச் சொல்லுமாறு நான் அவர்களிடம் தெரிவித்தேன். ஒரே வாரத்தில் அவன் அதை உபயோகிப்பதை நிறுத்திவிட்டான். அந்நிய மொழி உதடுகளிலிருந்து குதிக்கிறது. தாய்மொழி உள்ளத்திலிருந்து உதிக்கிறது

நன்றி - புதிய தலை முறை

# அறிவார்ந்த கட்டுரைகளின் மூலம் வாசகர்களை அறிவாளிகள் ஆக்குவது பத்திரிகைகளின் பணி!

## வாசகர் எண்ணம்

வாசகர்களாகிய பொதுமக்களை அறிவாளிகள் ஆக்குவது நூல்களினதும், பத்திரிகைகளினதும் தலையாய பணியாகும். ஆனால் இன்று கனடாவில் வெளியிடப்பட்டு வரும் தமிழ் பத்திரிகைகள் அப்பணியினை சரிவரச் செய்கின்றனவா என்பது கேள்விக் குறி? என்று முதல் தமிழ் பத்திரிகைகள் இலவசமாக விநியோகிக்கப் பட ஆரம்பித்தனவோ அன்றிலிருந்து செய்திகளை விட விளம்பரங்களுக்கே முக்கியத்துவம் வழங்கப்பட்டு வருவதை வாசகர்கள் அனைவரும் அறிவீர்கள். அதிலும் "வியாபாரம் பெருக விளம்பரம் செய்க" என்பதற்கொப்ப வியாபார நோக்குடன் பிரசுரிக்கப்படும் ஆலயங்களின் முழுப் பக்க விளம்பரங்களே அதிகம்.

ஆனால் "விளம்பரம்" பத்திரிகை அதற்கு விதிவிலக்காகும். ஆரம்பத்திலிருந்தே இலவச விளம்பரப் பத்திரிகையாக வெளியிடப்பட்டு வந்த இப்பத்திரிகை தற்போது அத்தியாவசிய செய்திகளையும் அறிவு சார்ந்த கட்டுரைகளையும் தாங்கி வெளிவந்து கொண்டிருக்கிறது. அதில் அண்மையில் "குருவிடம் ஒரு குறுக்கு விசாரணை" என்ற தலைப்பில் வெளிவந்த சிறிய அளவிலான அறிவு சார்ந்த செய்திக் கட்டுரையை வாசித்த மகிழ்ச்சியினால் இதனை எழுதும் ஆவல் ஏற்பட்டது. இக்கட்டுரை நிச்சயமாக வாசகர்களுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும்.

இன்று பலர் காவி உடை அணிந்து கொண்டு உலகளாவிய ரீதியில் ஆங்காங்கே மன்றங்களை நிறுவி நேரடியாகவும், தொலைக்காட்சி, ஸ்கைப் ஆகியவற்றின் மூலமும் பிரசங்கங்களும், பிரச்சாரங்களும் நடத்தி பணம் சம்பாதித்து வருகின்றனர். இக்கலியுக காலத்தில் ஏற்பட்டு வரும் மன உளைச்சல்கள், துன்பங்கள் ஆகியவற்றினால் வெகுவாகப் பாதிப்புற்றுள்ள மக்கள் அவர்களை நம்பி தமது கைவசமுள்ள அற்ப சொற்ப பணத்தையும் இழந்து வருகின்றனர். ஆனால் அத்தகைய சுவாமிகளைப் போலன்றி பரிசுத்தமான மனதுடன் மக்களுக்கு அருள் மழை போன்று ஆன்மீகக் கருத்துக்களை வழங்கி விழிப்படையச் செய்து வருபவர் பற்றுக்களைத் துறந்த உண்மையான ஆன்மீகவாதியான மதிப்பிற்குரிய சத்குரு வாசுதேவ சுவாமிகள் ஆவார். இவரது அற்புதமான ஆன்மீகக் கட்டுரைகளை விளம்பரம் பத்திரிகை தொடர்ந்து பிரசுரித்து வருவதை வாசகர்களாகிய நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

தொழில் சிறக்க எந்தக் கடவுளைக் கும்பிடலாம்? என்ற கேள்விக்கு யாராவது ஒரு கோவிலின் பெயரைச் சொன்னால் அந்தக் கோவிலுக்குப் போவீர்கள். அங்கே கடவுளிடம் நேரடியாகப் பேச உங்களுக்குத் தெரியாது. பூசாரியை கடவுளின் ஏஜன்டாக நினைத்து அவரிடம் பத்து ரூபாவைக் கொடுத்து அர்ச்சனை செய்வீர்கள். அவரும் இவன் பத்து ரூபா செலவு செய்திருக்கிறான் இவனது பிஸினஸைப் பார்த்துக் கொள் என்று கடவுளிடம் கூறுவார்.

கடவுள் வருவாரா? இங்கே இருக்கும் அடிமுட்டாள் கூட நீங்கள் கொடுக்கும் பத்து ரூபாவிற்காக உங்கள் பிஸ்னஸைப் பார்த்துக் கொள்ள மாட்டார். நீங்கள் மழித்து போடும் (மொட்டை அடித்தல்) தலை முடிக்காகவும், உண்டியலில் போடும் சில்லறைக் காசுகளுக்காகவும் காலம் பூராகவும் உங்களைப் பார்த்துக் கொள்ள கடவுள் என்ன இளிச்ச வாயரா?

இவ்வாறு மிக எளிமையாகவும், அர்த்த புஷ்டியாகவும் பதில் அளித்துள்ளார் சத்குரு வாசுதேவ் அவர்கள்.

செய்யத்தக்கது எது? செய்யத் தகாதது எது? என ஊகித்து அறிந்து கொள்ளும் வகையில் ஆண்டவன் நம்மை பகுத்தறிவோடு படைத்துள்ளார். பொய், களவு, சூது, வாது ஆகியவற்றினைச் செய்தால் அதற்கான தண்டனைகளை அநுபவிக்க வேண்டும் என்பதனை அறிந்திருந்தும் பலர் அவற்றினை செய்கின்றார்கள். பின்னர் அக்குற்றங்களில் இருந்து விடுபடுவதற்காக பொலிசாருக்கும், சட்டத்தரணிகளுக்கும் பணத்தினை வாரி இறைக்கிறார்கள். ஏன் இந்த இக்கட்டான நிலைக்கு ஆளாக வேண்டும்? சைவ சமயத்தில் கூறியுள்ளபடி பொய், களவு, சூது, வாது ஆகியவற்றினை தவிர்த்து எமது பகுத்தறிவினைப் பயன்படுத்தி நல்ல செயல்களையே செய்து வந்தால் துன்பங்களை தவிர்த்துக் கொள்ளலாம் அல்லவா?

**- வீரகேசரி மூர்த்தி -**

"தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினை அறுப்பான்" என எமது மூதாதையர்கள் கூறி வைத்துள்ள அறிவுரையினையும் பொருட்படுத்தாது கொடிய வினைகளை செய்தால் அவற்றுக்கான தண்டனைகளை அனுபவித்து தானே ஆக வேண்டும். "மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டிய தில்லை" என அருமையான பழமொழி ஒன்று இருக்கிறது. அதற்கேற்ப நாம் நற்சிந்தனைகளின் மூலம் மனதை சுத்தப்படுத்தியும், யோகா பயிற்சியின் மூலம் உடம்பையும் உறுதிப் படுத்திக் கொண்டால் டாக்டர்களிடமோ, கோவில்களுக்கோ போக வேண்டிய தேவையே இன்றி சுக வாழ்வு வாழலாம் அல்லவா?.



# அதிவேக அரைச் சதத்தில் புதிய சாதனை!!!

## விளையாட்டுத் தகவல்கள் 369

14 பந்துகளில் அரைச்சதம் விளாசிய கொலின் மன்றோவை பாராட்டும் அணி பயிற்சியாளர் மைக் ஹெஸோன்

சர்வதேச டி 20 போட்டிகளில் நியூசிலாந்து வீரர் மன்றோ 14 பந்துகளில் அரைச்சதம் விளாசி புதிய சாதனையின் மூலம் இலங்கை 9 விக்கெட் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது. இலங்கை - நியூசிலாந்து அணிகளுக்கிடையேயான இரண்டாவது மற்றும் கடைசி டி 20 போட்டி ஆக்லாந்தில் நடைபெற்றது. முதல் டி 20 போட்டியில் இலங்கை அணி 3 ரன்கள் வித்தியாசத்தில் போராடி தோல்வி அடைந்திருந்தது. இந்நிலையில் போட்டியில் டொஸ் வென்ற நியூசிலாந்து அணி முதலில் ஃபீல்டிங்கை தேர்ந்தெடுத்தது. இதன்படி முதலில் களமிறங்கிய இலங்கை அணி 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட் இழப்பிற்கு 142 ரன்கள் எடுத்தது. இலங்கை அணியில் அதிகப்பட்சமாக ஆஞ்சலோ மேத்யூஸ் 49 பந்துகளில் ஜ7 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள் 81 ரன்கள் எடுத்து கடைசிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார். மற்றொரு வீரர் தில்ஷன் 28 ரன்கள் எடுத்தார்.



இந்த இருவர் மட்டுமே இலங்கை இரட்டை இலக்கத்தை தாண்டியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. எட்டு வீரர்கள் இரட்டை இலக்கத்தை தொடாமல் ஒற்றை இலக்கத்திலேயே அவுட் ஆகி வெளியேறினர். பின்னர், களமிறங்கிய நியூசிலாந்து வீரர்கள் இலங்கை பந்துவீச்சை துவம்சம் செய்தனர். அந்த அணியின் தொடக்க வீரர் மார்டின் கப்தில் 20 பந்துகளில் அரைச்சதம் எடுத்தார். பின்னர் 63 ரன்களில் ஜ6 பவுண்டரிகள், 5 சிக்ஸர்கள் வெளியேறினார். பின்னர் கொலின் மன்றோ களமிறங்கினார். தான் சந்தித்த முதல் பந்திலேயே பவுண்டரி அடித்து ஆரம்பித்தவர், வெற்றி இலக்கை சிக்ஸர் அடித்து முடிக்கும் வரை ருத்ர தாண்டவம் ஆடினார். அவர் போட்டியில், 14 பந்துகளில் ஜ1 பவுண்டரி, 7 சிக்ஸர்கள் அரைச்சதம் கடந்து புதிய சாதனையை படைத்தார்.

மன்றோ அதிவேக அரைச்சதம் விளாசியவர்கள் பட்டியலில் இரண்டாம் இடத்தை மன்றோ தற்போது பிடித்துள்ளார். முதலிடத்தில் இந்தியாவின் யுவராஜ் சிங் உள்ளார். அவர் 2007ஆம் ஆண்டில் இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில், 12 பந்துகளில் அரைச்சதம் எடுத்திருந்தார். அந்தப் போட்டியில் யுவராஜ் சிங் 6 பந்துகளில் 6 சிக்ஸர்கள் விளாசியதும் குறிப்பிடத்தக்கது.

### இலங்கை அணி டி20 தரவரிசையில் முதலிடத்தை பறிகொடுத்தது.

இலங்கை கிரிக்கெட் அணியின் நியூசிலாந்து சுற்றுப்பயணம் மிகவும் மோசமானதாக முடிந்துள்ளது. இலங்கை அணி நியூசிலாந்தில் கடந்த ஒரு மாதமாக 2 டெஸ்ட், 5 ஒருநாள் மற்றும் 2 டி20 போட்டிகளில் விளையாடியது. டெஸ்ட் தொடரில் முதல் டெஸ்டில் 122 ஓட்டங்களில் படுதோல்வியடைந்த இலங்கை, ஹாமில்டனில் நடந்த 2வது டெஸ்டிலும் 5 விக்கெட்டுகளால் தோற்று தொடரை 2-0 என பறிகொடுத்தது. ஒருநாள் தொடரிலாவது இலங்கை சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அதிலும் மோசமாக விளையாடியது. இதனால் முதல் ஒருநாள் போட்டியில் 7 விக்கெட்டுகளால் தோற்றது. கிறிஸ்ட்ச்சர்ச்சில் நடந்த 2வது ஒருநாள் போட்டியில் 117 ஓட்டங்களில் சுருண்டு அனைவரின் விமர்சனத்திற்கும் உள்ளானது. இதனால் 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் நியூசிலாந்து அபார வெற்றி பெற்றது. இந்த நிலையில் நெல்சனில் நடந்த 3வது ஒருநாள் போட்டி மட்டுமே இலங்கை அணிக்கு ஆறுதல் வெற்றியாக அமைந்தது. டில்ஷான் (91), குணத்திலா (65) அதிரடியில் 8 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது. 4வது ஒருநாள் போட்டி மழையால் கைவிடப்பட்டது. 5வது ஒருநாள் போட்டியிலும் தோல்வியடைந்த இலங்கை அணி ஒருநாள் தொடரையும் 3-1 பறிகொடுத்தது. இதைத் தொடர்ந்து நடந்த டி20 தொடரிலும் இலங்கை அணிக்கு ஏமாற்றமே மிஞ்சியது. முதல் டி20 போட்டியில் 3 ஓட்டங்களில் தோற்ற இலங்கை, நடந்த 2வது டி20 போட்டியிலும் தோற்று நியூசிலாந்திடம் 'ஒயிட்-வாஷ்' ஆனது. இந்த தொடரில் மிகச்சிறந்த பார்மில் இருந்த நியூசிலாந்து அணியின் தொடக்க வீரர் 705 ஓட்டங்களை குவித்து மிரட்டினார்.


### தரவரிசையில் சறுக்கல்

இதன் மூலம் இலங்கை அணி டி20 தரவரிசையில் தனது முதல் இடத்தை பறிகொடுத்துள்ளது. முதல் இடத்தில் இருந்த இலங்கை அணி (118 புள்ளிகள்) 3வது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. தற்போது முதல் இடத்தில் மேற்கிந்திய தீவுகள் அணியும், 2வது இடத்தில் அவுஸ்திரேலியாவும் தலா 118 புள்ளிகளுடன் உள்ளது. இங்கிலாந்து (117), தென் ஆப்பிரிக்கா (115), பாகிஸ்தான் (114), நியூசிலாந்து (114), இந்தியா (110), ஆப்கானிஸ்தான் (78), வங்கதேசம் (69) ஆகிய அணிகள் அடுத்தடுத்த இடங்களில் உள்ளது.

### 500வது போட்டியில் மெஸ்ஸி!



கேம்ப்நியூ மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் பார்ஸிலோனா 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. 29வது நிமிடத்தில் ரியல் பெடிஸ் அணி சேம்சைடு கோல் அடித்தது. 33-வது நிமிடத்தில் மெஸ்ஸி ஒரு கோல் அடித்தார். பார்ஸிலோனா அணிக்காக மெஸ்ஸி அடித்த 425 -வது கோல் இதுவாகும். சுவரஸ் 46 மற்றும் 83- வது நிமிடத்தில் கோல்கள் அடித்தார். பார்ஸிலோனா அணிக்காக தனது 500வது போட்டியில் லயோனல் மெஸ்ஸி களமி-றங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த பட்டியலில் ஓய்வு பெற்ற சேவி ஹெர்னான்டஸ் முதலிடத்தில் உள்ளார். அவர் 767 போட்டிகளில் விளையாடி உள்ளார். தற்போது ஸ்பானீஷ் லீக்கில் பார்ஸிலோனா 38 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது.



**எஸ். கணேஷ்**

# 17 வயதுக்கு...

27ஆம் பக்கத்தொடர்ச்சி

(Cleaning, Fillings, X-rays, Scaling and more) பல் கட்டுதல், (COSMETIC DENTISTRY) கிளிப் போடுதல் (ORTHODONTICS) போன்றவற்றிற்கு இவ் இலவச சிகிச்சை வழங்கப்பட மாட்டாது.

குடும்ப பல் வைத்தியர் மூலம் இவ் இலவச சிகிச்சையினை பெற்றுக்கொள்ள முடியுமா?

உங்களின் குடும்ப பல் வைத்தியர் இத்திட்டத்தில் (HEALTHY SMILES ONTARIO PROGRAM) பதிவு செய்யப்பட்டவராக இருந்தால், அவர்கள் மூலம் சிகிச்சை பெறலாம். அதற்குரிய கட்டணத்தினை அவர்கள் பின்னர் அரசிடம் அறவிட்டுக்கொள்வார்கள். ஆனால் சகல பல் வைத்தியர்களும் இத்திட்டத்தில் பதியப்பட்டு இருக்கவில்லை. எனவே மாகாண சுகாதார அமைச்சு குறிப்பிடும் இடத்தில் மட்டும் சிகிச்சை பெற்றுக்கொள்ள முடியும்.

"HEALTHY SMILES ONTARIO" என்னும் மட்டுப்படுத்தப்பட்ட இலவச சிகிச்சை திட்டங்கள் தவிர்ந்த மேலதிக அவசர சிகிச்சைகள் இதே பிள்ளைகளுக்கு தேவைப்பட்டால் எப்படி அணுகுவது?

CINOT (CHILDREN IN NEED OF TREATMENT ) என்னும் ஒரு மேலதிக திட்டத்தில் இதே 17 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளை அதே அலுவலகத்தில் பதிவு செய்து, அவர்களின் அங்கீகாரம் கிடைத்தால் மேலதிக அவசர சிகிச்சைகளை இலகுவாக பெற்றுக்கொள்ளலாம்.

வேறு எந்த வழிகளில் இலவச பற்சிகிச்சை வசதிகள் கிடைக்கின்றது?

(1) "ONTARIO WORKS" என்னும் திட்டத்தின் மூலம் மாகாண சமூக சேவை உதவி சேவைகள் அமைச்சில் இருந்து சமூக உதவி பணம் பெற்றுக் கொண்டிருக்கும் குடும்பத்தவர்களுக்கு (welfare receipients) இலவசமாக பல்சிகிச்சை பெறும் வசதிகள் உண்டு. (பென்சன் வருமானம் என குறிப்பிட்டு பல முதியவர்கள் இந்த திட்டத்தின் மூலமே நிரந்தரமாக சமூக உதவி பணம் பெற்றுக்கொண்டு உள்ளனர்)

(2) உடல், மன அங்கவீனமான நிலையில் இருந்துகொண்டு அரச சமூக உதவி பணம் பெறுவோர். (ONTARIO DISABILITY SUPPORT PROGRAM - ODSP)

(3) கடுமையாக உடல் இயங்கமுடியாத நிலைமையில் இருக்கும் 18 வயதுக்குட் பட்ட பிள்ளைகள்.

(ASSISTANCE FOR CHILDREN WITH SEVER DISABILITY PROGRAM)

மேற்குறிப்பிட்ட மூன்று நிலைப்பாடுகளில் இருப்போர் ஒரு வரையறைக்கு உட்பட்ட இலவச பல் சிகிச்சையினை பெற தகுதியுடையவர்கள் ஆகின்றனர்.


**யோகா சோதிடம்**

• கிரகப்பொருத்தம் பார்த்தல் • சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல் • சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361


Niru BRAND
மீண்டும் ஓர் புதிய அறிமுகம்.........!!
Niru Brand Tamarind Paste!!!
புளி விதைகள் முழுமையாக நீக்கப்பட்டது...
இலகுவான சமையல் தேவைகளுக்கு மிக உகந்தது...
நீர் விட்டுக்கரைக்க வேண்டிய அவசியமில்லை...
MARIND PASTE
Pâte de Tamarin
Niru BRAND
Premium Quality
Ready to use
தரம், சுவை என்றென்றும்!!!
இப்போது உங்கள் அபிமான தமிழ்க்கடைகளில் கிடைக்கிறது





# அனுஷ்காவுடன்...

37ஆம் பக்கத்தொடர்ச்சி

(சிரித்துக்கொண்டே..) நிஜத்திலேயும் நான் பயங்கர கோபக்காரன்தான். கோபமென்றால் நியாயமான காரணத்தோடுதான் வரும். அந்தக் கோபத்துக்கு எல்லையே கிடையாது. எதுவாக இருந்தாலும் மனம் திறந்து பேசி விடுவேன்.

உங்கள் பூட்டன், அதாவது உங்கள் தாத்தாவின் அப்பா மாயூரம் வேதநாயகம் பிள்ளை தமிழின் பிரபல எழுத்தாளர். அவர் எழுதிய 'பிரதாப முதலியார் சரித்திரம்' நாவல்தான் தமிழின் முதல் நாவலாகத் தமிழறிஞர்களால் கொண்டாடப்படுகிறது. அந்த நாவலைப் படித்திருக்கிறீர்களா?

இன்னும் படிக்கவில்லை. ஓய்வாக இருக்கும்போது செய்யவேண்டிய விஷயங்களில் அந்த நாவலைப் படிக்கிறதும் ஒன்றாக மனதில் இருக்கிறது. அடுத்த நேர்காணலுக்காக நீங்கள் என்னைச் சந்திப்பதற்கு முன்னால் படித்துவிட வேண்டும். சொன்னால் நம்பமாட்டீர்கள், இப்படியொரு தமிழ் குடும்ப பின்புலம் இருந்தும் நான் கல்லூரியில் தமிழ் பாடத்தில் தோல்வியடைந்தவன். அப்போது எனக்கு படிப்பில் பெரிய ஆர்வம் இருந்தது இல்லை. அதனால்தான் கல்லூரி நாட்களில் சரியாக படிக்காமல் தோற்றுவிட்டேன்.

திரைப்படத் துறையில் இருப்பவர்கள் அரசியலுக்கு வருவதைப் பற்றி?

அவர்களும் இரண்டு கை இரண்டு கால் உள்ள மனிதர்கள்தானே. அவர்கள் அரசியலுக்கு வருவதில் என்ன தவறு இருக்கிறது. மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்று நினைக்கிற யாரும் எங்கிருந்து வேண்டுமானாலும் வரலாம். நோக்கம்தான் முக்கியமே தவிர, எங்கிருந்து வருகிறார்கள் என்பது முக்கியமில்லை.

இசையமைப்பாளராக ஒரு கேள்வி. கே.வி. மகாதேவன், எம்.எஸ்.வி., இளையராஜா, ரஹ்மான் எனத் தொடரும் தமிழ் இசை ஆளுமைகள் இடத்தில் தற்போது யாரை வைப்பீர்கள்?



தேவி ஸ்ரீபிரசாத், இமான், அனிருத், சந்தோஷ் நாராயணன் என அடுத்தடுத்து இளைஞர்கள் வந்துகொண்டு இருக்கிறார்கள். தேவி ஸ்ரீபிரசாத் 15 வருஷமா மலையாளத்தில் கொடிகட்டி பறந்திட்டுருக்கார். எல்லோருடைய இசையும் என்னை ஈர்க்கவே செய்கிறது. ரசிகர்கள் தான் தீர்மானிக்க வேண்டும்.




# NK Movers

## We make moving easy!




***Proudly moving the local community for the last 20 years***

கடந்த 20 ஆண்டுகளாக தமிழ் சமூகத்தில் நன்மதிப்பைப் பெற்றவர்கள்

## WE SPECIALIZE IN:

- **RESIDENTIAL MOVING**
- **COMMERCIAL MOVING**
- **LONG DISTANCE MOVING**

மேலதிகமாக

**$50**

கழிவினை பெறுவதற்கு இக்கூப்பனைக் காட்டவும்

### QUESTIONS TO ASK

Choosing a moving company is a major decision. Making sure to learn about a company's cost and service is very important. Once you are comfortable then make your final selection.

- **Are you an insured company?**
- **Is your staff trained?**
- **Do you offer free estimates?**
- **What payment option is available? Is a deposit required?**
- **Is there a contact number I can contact on move day if there are any questions or challenges?**
- **Are there additional charges for:**
  **Stairs?**
  **Travel time from your location to mine?**
  **Evenings and weekends?**

**TEL: 416-566-4260**

**FAX: 1-888-614-9373**

**TEL: 1-800-895-8362**

**WWW.NKMOVERS.CA**


**clientsupport@thenkmovers.com**

**32 Howden Road - Unit 2. Toronto, M1R-3E4**

"Let me help you make the right choice"

**SchurenSriskandarajah** B.A.
Sales Representative

HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive, Markham Ontario L3S 4N8



SCHUREN.CA • 416.333.9393

BRINGING YOUR DREAMS TO LIFE TODAY call Vany Jeganmohan for BUYING, SELLING & INVESTING • RESIDENTIAL & COMMERCIAL

**Vany Jeganmohan**
Sales Representative
**Cell: 416-670-7436**
vanyj26@yahoo.ca

HomeLife/GTA Realty Inc., Brokerage
Bus: 416.321.6969
Fax: 416.321.6963



GTA Square, 5215 Finch Ave. E., # 203, Toronto, ON M1S 0C2
Higher Standards Agents... Higher Results!

"கனவு உங்களுடையது பொறுப்பு என்னுடையது"

*List Buy Sell*

RE/MAX All Stars Realty Inc., Brokerage
Chairman's Club Award

**Raj Paramasamy**
Sales Representative
**416-587-1619**
raj.paramasamy@hotmail.com



வீடு வாங்குவதற்கு வருமானம் போதாதென்று எண்ணுகிறீர்களா?
**No Credit or Bad Credit** கவலை வேண்டாம்

வீடு மற்றும் வாகனக் காப்புறுதி HOME + AUTO = MORE SAVINGS*

"Call me today for a free home and auto insurance quote"
*Inclusive of all other discounts applies to Allstate's base rates. Terms & conditions apply & may vary region. Rates & discounts subject to change. Trademark used under licence by Allstate Insurance Company.



Allstate.
**Raji Linghan**
Cell: 416.817.5060
905.427.2827 Ext:5020
Ajax Agency 15 Westney Road N



we always care at...

**Bridletowne Dental**
2555 Warden Avenue, Scarborough M1W 2H5

Dr.Jeyapalan BDS.,DDS
Dentist



**416-492-3775**

Direct:416-908-5656 **MORTGAGES**

- 1st,2nd,3rd
- Purchase
- Refinance
- Renewal
- Switches
- Equity Line of Credit

For all your Mortgage needs !
Off:416-878-7979 Fax: 416-613-5779
Toll Free: 1-877-687-1214
Our Office:
1585 Markham Road, Unit# 407A
Toronto, M1B2W1 ON Canada
www.mortgagealliance.com
Email:nsubramaniam@mortgagealliance.com
Facebook:Nesan Subra



NESAN Subramaniam
Mortgage Agent, Lic# M13001465

MORTGAGE ALLIANCE
ACCESS INC. Lic # 11404
Independently Owned & Operated
Corporate Office: 209-8130 Sheppard Ave. East
Toronto M1B 3W3

**Free Real Estate Class -** Call: **416.321.6969**

# BUY/SELL PROPERTIES IN GTA




**BLOOR ST E & COURTICE**
Bedrooms : 4
Washroom : 3
Asking Price:$549,900



**QUEENSVILLE & HWY 404**
RESTAURANT + 2 HOUSES
BUILDING + BUSINESS
Asking Price:$2.5M



**HWY 401& PARK RD**
Bedrooms : 3 + 2
Washroom : 3
Asking Price: $399,900



**COUNTRY HILLS IN KITCHENER**
Bedrooms : 4 + 1, 2 Sep. unit
Asking Price:$339,900
INVESTMENT PROPERTY



**DIXIE & PETER ROBERTSON**
BRAMPTON
Bedrooms : 3
Washroom : 2
Asking Price:$364,900



**ROSSLAND & AUDLEY**
AJAX
Bedrooms : 4
Washroom : 3
Asking Price:$599,900



**A. Anton Jeeva,** FRI
Broker
**Contact: 416.575.5055**
Specialized in Power Of Sale Homes & New condos
RE/MAX Dynasty Realty Inc., Brokerage*
8 Shadlock St. #7, Markham ON L3S-3K9
Tel: 905.471.0002
Web: www.antonjeeva.com
E-Mail:anton.jeeva@gmail.com
*Independently Owned & Operated

அகத்தின் அழகு முகப்பில் தெரியும்.....
உங்கள் அகத்தின் முகவரியை தேட
விசுவாசமான முகவர்.....



*VK Kanthasamy*
Sales Representative
*Cell: 416-726-1698*
*Let Me find the key to your HoMe!*
HomeLife/GTA Realty Inc., Brokerage
Buss: 416-321-6969 Email: vkpromise@gmail.com

**SNM HEALTH CENTRE**
www.snmhealthcentre.com

(Markham and 14th Avenue)
20 New Delhi Drive,
Suite 72, Markham,
Ontario, L3S 0B5

All insurances are accepted

Specializing in:
Pain and Injury Treatment
Headache and Migraine Relief
Motor Vehicle Accidents
Workplace Injuries (WSIB)
Athletic Performance Enhancement
Corporate Wellness Programs
Women's Health and TMJ Treatment
Foot Health Solutions & Diabetic Foot Care

Professional Services Include:
Physiotherapy
Chiropractic
Acupuncture
Massage Therapy
Osteopathy
Chiropody
Orthotics and Orthopedic Shoes
Custom Made Braces (Neck, Back, Knee & Ankle)
Compression Stockings
TENS

Book an Appointment Now!
647.216.6506 / 905.554.5540


விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில்
வாசிப்பதற்கு *www.vlambaram.com*
*www.tamilvanakkam.com*


**STOUFFVILLE BEAUTY SALON & SPA**

*Any Style Hair cut $8*
*Ladies, Gents & Kids*

*Grand opening Special*

in Twitter *Bring this Coupon*

Call:905.591.5265 Cell: 647.867.5696 Email: pirabha23@gmail.com
Stouffville Garden Plaza, 18 Ringwood Dr., Unit 12, Stouffville L4A 8C1